# பெரியார் பல்கலைக்கழகம்

(NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்விமையம்

## இளங்கலைத் தமிழ்

(முதலாமாண்டு - இரண்டாம் பருவம்)

## துறைச்சாரா விருப்பப்பாடம் - 2

## பயன்முறைத் தமிழ்

**2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும்**

**மாணவர்களுக்குரிய பாடநூல்**

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**
**Periyar University, Salem – 11.**

| அலகு | பாடத்திட்ட விளக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | இக்கால தமிழின் இயல்புகள் - சந்திவிதிகள்- சந்தி வரையறை - சந்தையின் தேவை சந்தி வகைப்பாடுகள் - அகச்சந்தி – புறச்சந்தி –சொற்சந்தி வரும்இடங்கள் - வல்லினம் மிகும் இடங்கள் - வல்லினம் மிகா இடங்கள் - நிலத்தனிக் குறிப்புகள் - பழஞ் சந்தி - இக்கால சந்தி வேறுபாடுகள் - நிறுத்தக் குறிப் பயன்பாடு –சந்தி அறிதல். | 4 - 38 |
| 2 | இக்கால தமிழின் இயல்புகள் - சந்திவிதிகள்- சந்தி வரையறை - சந்தையின் தேவை சந்தி வகைப்பாடுகள் - அகச்சந்தி —-புறச்சந்தி –சொற்சந்தி வரும்இடங்கள் - வல்லினம் மிகும் இடங்கள் - வல்லினம் மிகா இடங்கள் - நிலத்தனிக் குறிப்புகள் - பழஞ் சந்தி - இக்கால சந்தி வேறுபாடுகள் - நிறுத்தக் குறிப் பயன்பாடு –சந்தி அறிதல். | 39 - 55 |
| 3 | நடைமுறை சார் மொழித் திறன்கள் - எழுத்துத்திறன் - செய்தி கடிதம் - ஆவணம் எழுதும் முறைகள - செய்தி எழுதும் முறைகள் - செய்திக்கட்டமைப்பு - தலைப்பு - முகப்பு - உடல் - செய்தியில் மொழி பயன்பாடு - உடற்பகுதி செய்தி கட்டுரை தலைப்பு தெறிவு – தகவல் சேகரிப்பு வகைகள் -தமிழில் நெகிழ்வுரை எழுதும் முறை - நெகிழ்வுரையில் மொழிப்பயன்பாடு - கருத்துரைகள் - தலையங்கம் - நூல் மதிப்புரைகள் - கடிதம் ஆவணம் எழுதும் முறைகள். | 56 - 88 |
| 4 | உரையாடல் திறன் - தேவையான நல்ல குணங்கள் - உரையாடல் உத்திகள் - சொற்பொழிவு திறன் - நேர்காணல் - வாய்மொழி தேர்வு திறனை வளர்க்கும் நெறிகள். | 89 - 109 |
| 5 | கட்டுரை வரையறை - கட்டுரையின் இயல்பு - சுருக்கமான எளிமையான மொழிப் பயன்பாட்டு முறைகள் . மொழி பயிற்சி வினாக்கள் | 110 - 118 |

# அலகு -1

## அலகின் நோக்கம் :

- மாணவர்கள் இலக்கணப் பிழையின்றி பேசுதல், எழுதுதல்
- ஊடகத் தமிழ்ச் செய்திகளை அறிந்து கொள்ளுதல்
- நிறுத்தற்குறிகளின் பயன்பாடுகளை அறிந்து கொள்ளுதல்

## அலகில் இடம்பெறுபவை

இக்கால தமிழின் இயல்புகள் சந்திவிதிகள் - சந்தி வரையறை- சந்தையின் தேவை சந்தி வகைப்பாடுகள் - அகச்சந்தி – புறச்சந்தி – சொற்சந்தி வரும் இடங்கள் - வல்லினம் மிகும் இடங்கள் - வல்லினம் மிகா இடங்கள் - நிலத்தனிக் குறிப்புகள் - பழஞ்சந்தி - இக்கால சந்தி வேறுபாடுகள் - நிறுத்தக்குறிப் பயன்பாடு – சந்தி அறிதல்.

### 1.1. இக்கால தமிழின் இயல்புகள்

இலக்கியம் (ஒலிப்பு (உதவி தகவல்)) என்பது விரிந்த பொருளில் எழுதிய அனைத்தையும் குறிக்கும். இந்த வரையறையின் கீழ் இலக்கியத்தை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1.இன்பியல் இலக்கியம்

2.அறிவியல் இலக்கியம்

“இன்பியல்” இலக்கியம் “கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் நூல்கள்”. அறிவியல் இலக்கியம் என்பது கற்போருக்கு அறிவை முதன்மையாக தரும் இலக்கியம் ஆகும்.

### 1.1. தமிழ் இலக்கியம்

### 1.1.1 முதன்மைக் கட்டுரை தமிழ் இலக்கியம்

தமிழ் குறைந்தது 2000 வருடங்கள் இலக்கிய வளமும் தொடர்ச்சியும் கொண்ட ஒரு மொழியாகும். எனினும், தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை, இன்பியல் இலக்கியங்களே. இது, இலக்கிய வளர்ச்சி அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றி இருந்ததால் ஏற்பட்டிருக்கலாம். அதன் விளைவாக இலக்கியம் என்ற சொல் தமிழில் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக்களை வடிவங்களே இன்று தமிழ் இலக்கியம் என பொதுவாக கருதப்படுகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில், அறிவியல் இலக்கிய படைப்புகள் மிக அரிது. வரலாற்று ரீதியில். தற்கால ரீதியில், ஆங்கிலத்துடன் ஒப்பிடுகையில் இந்த குறை தெளிவாக தெரியும். இன்று அறிவியல் தமிழ் இலக்கியத்தின் தேவை கருதி அறிவியல் தமிழை வளர்க்க தமிழ்நாடு அரசும் தமிழ் ஆர்வலர்களும் பெரிதும் முயன்று வருகின்றனர். இலக்கியம் இலக்கியத்துக்காக

என்பதை விட, இலக்கியம் மக்களின் பயன்பாட்டுக்காக என்பதே அறிவியல் தமிழின் ஒரு முக்கிய விழுமியம் எனலாம்.

### 1.1.2 வரலாறு

முதன் முதலாக இலக்கியம் எனும் வடிவத்தில் தோலாமொழித்தேவர் (கிபி ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி பகுதி) இச்சொல்லைப் பயன்படுத்தி உள்ளதைப் பின்வரும் சூளாமணி:459 ஆம் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே எள் இன்று ஆகில் எண்ணெயும் இன்றே எள்ளி நின்று என்னை எடுப்பது போல் இலக்கியத்தில் இன்று எடுக்கப்படும் இலக்கணம். என்பதில் தான் இலக்கியம் எனும் சொல்லாட்சி எடுத்துக்காட்டு அல்லது உதாரணம் ஆகிய பொருளில் குறிப்பிட பெறாமல் கற்பனை வளமும் கலை அழகும் வாழ்ந்ததொரு படைப்பு என சுட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது. இப்பாடல் யாப்பெருங்கல விருத்தி உரை ஆசிரியரால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

ஆயினும் 19 ஆம் நூற்றாண்டில் தான் மேற்கு நாட்டு கல்வியைப் பயின்று சிறந்த, மாயூரம் வேலநாயகம் பிள்ளை அவர்களும், பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களும் ஆங்கிலத்தில் வழங்கி வரும் “லிட்ரேச்சர்” என்னும் சொல்லிற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லாக இதனை வழக்கிற்குக் கொண்டு வந்துள்ளனர்.

**பாவாணரின் கருத்து**

மொழியை வாயிலாக கொண்டு படைக்கப்பெறும் கலை, பல்வகை வடிவங்களை உடையது. அது பாட்டு வடிவமாகவும், உரைநடை வடிவமாகவும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பாவகையால் மட்டும் இயன்றதாக இருக்கலாம் அல்லது பல்வேறு பாவகைகளால் அமைந்ததாகவும் இருக்கலாம். இவ்வாறு மொழியை வாயிலாக கொண்டு பல்வகை வடிவங்களை வழங்கி வரும் கலைக்கு பொதுவான பெயர் எதுவும் இதுவரை ஏற்படவில்லை. சோபரான் ஜெனாரக்கஸ், ஆகியோரின் உரைநடைக் கோவைக்கும் சாக்ரடீஸின் உரையாடல்களுக்கும் பொருந்துமாறு அமையும் பொதுப்பெயர் எதுவும் தோன்றவில்லை.

இந்நிலையில் மொழி ஞாயிறு தேவநேய பாவாணர் அவர்கள் இலக்கியம் என்னும் சொல்லுக்குப் பின்வரும் வகையில் தரும் விளக்கப் புதுமையும், உண்மை திறனும் (Originality) உடையதாக காணப்படுகிறது.

”இலக்கு-இலக்கியம், இலக்கு-இலக்கணம். இலக்கு-குறிக்கோள். சிறந்த வாழ்க்கை குறிக்கோளான, அரட்டை எடுத்துக்காட்டுவது, இலக்கியம். சிறந்த மொழி குறிக்கோளான,

அமைப்பை எடுத்துக் கூறுவது, இலக்கணம். இலக்கணத்திற்கு அனங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியும் என்றும் பெயர் உண்டு.

இலக்கு- இலக்கியம்- (வ) இலக்கணம்-இலஷ்ணம்(வ) இலக்கணம் இலக்கியம் என்னும் சொற்கள் போல் ல‘ன லச‘ய என்னும் வடசொற்கள் மொழி அமைதியையும் (Grammer) நூற் தொகுதியையும் (literature) குறிப்பதில்லை என்பது பாவனரின் துணிவாகும். இத்தகைய என்ன போக்கு பரவலாக தமிழ் அறிஞர்கள் இடையே நிலவி வருகிறது.

Literature என்னும் ஆங்கிலச் சொல், இலக்கியம் என்னும் பொருளில் கிபி 1812 இல் தான் வழக்கிற்கு வந்தது என்று ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி எடுத்துரைக்கின்றது.

## வரையறை

இலக்கியம் பற்றி பேராசிரியர் அ.சா.ஞானசம்பந்தன் என்பார். இலக்கியம், மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது மனிதனின் சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் விருந்தாக அமைவது மனிதனின் மொழியோடு தொடர்புடையது விளங்குவது குறிப்பிட்ட ஒரு வடிவினைச் செய்யுளால் உரைநடையாளோ உடையது கற்ப அவருடைய எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் வளர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் ஆற்றலை உடையது என்று எடுத்துரைப்பார்.

## இலக்கியத் தோற்றம்

தெய்வீக அகத் தூண்டுதலால் இலக்கியம் உருவாக்கப்படுவதாக எடுத்துரைக்கப்படுகின்றது தெய்வீக அகத் தூண்டுதல் பொதுவாக கலைப்படைப்பிற்கும் சிறப்பாக இலக்கிய படைப்பிற்கும் உந்துதல் சக்தியாக அமைகிறது என்பது பிளாட்டோவின் கருத்தாகும்.

உளப் பகுப்பாய்வின் கோட்பாட்டை உருவாக்கிய ∴பிராய்ட் என்னும் உளவியல் அறிஞர் அகத்தூண்டுதல் மனிதனுடைய அடிமனதில் உறங்கிக் கொண்டிருக்கும் மனித உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அமைகிறது என்கிறார்.

## இலக்கியத்தின் இயல்புகள்

அறிஞர் ந. சஞ்சீவி இலக்கியத்தின் சிறப்பை இயல்புகளாகக் கூறுவது

1. புதுமை
2. பெருமை
3. பொதுமை
4. பொருண்மை

ஆகியனவாகும்.

இவற்றுள் புதுமை இரு வகைப்படும்.

அவையாவன:

1. பாடு பொருளாகிய பொருண்மையில் புதுமை.
2. புத்தாக்கங்கள் இடம் பெறும் மற்றும் உணர்த்தும் முறையில் புதுமை.

பொருண்மையில் உயர்ந்ததாகவும் பொது நலப் பண்பில் சிறந்ததாகவும், புதுமைக் கவர்ச்சி வாய்ந்ததாகவும், விளங்கும் இலக்கியமே பெருமையுடையதாக கருதப்படும். இலக்கியத்தின் இந்நால்வகைப் பண்புகளும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் பிணைந்தும் இயங்குகின்றன.

இது தவிர அக இயல்புகளாக

1. கலையழகு
2. குறிப்பாற்றல்
3. நிலைபேறுடைமை
4. ஆசிரியரின் ஆளுமை
5. இன்புறுத்தல்
6. கற்பனை
7. குறிக்கோள் ஆகிய ஏழினையும்

புற இயல்புகளாக, பின்வரும் வடிவப் பண்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவையாவன

1. சீர்
2. தளை
3. தொடை
4. எதுகை
5. மோனை
6. ஒலிநயம்
7. உவமை
8. உருவகம்
9. படிமம்
10. குறியீடு முதலான அணிநயங்களாகும் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## இலக்கிய வகைகள்:

பொதுவாக இலக்கியம், வடிவமைதி, பொருள் வெளிப்பாட்டு முறை ஆகியவற்றைக் கொண்டு பல வகையாகப் பாகுபடுத்தப்படும். இலக்கியம் உணர்வைச் சார்ந்து அமைவது ஆகும்.

## அயல்நிலைப் பாகுபாடு

இலக்கியத்தை தூய இலக்கியம்இ சார்பு இலக்கியம் என வகைப்படுத்துவர். இவற்றுள் தூய இலக்கியம் எனப்படுவது, இலக்கியத்தின் இயல்புகள் யாவும் முழுமையாக இடம் பெற்றுள்ள படைப்பிலக்கியம் ஆகும். கற்பனைக்கோர் கலை அழகிற்கோ இடம் தராமல் கருத்துக்களை அறிவுறுத்தும் இலக்கியம் சார்பு இலக்கியம் ஆகும்.

## அனுபவ நிலைப் பாகுபாடு

ஓர் இலக்கிய படைப்பானது படைப்பாளனின் அனுபவத்தன்மை, செறிவு வகை, மனித உறவு, முயற்சித்திறன் ஆகியவற்றிற்கு ஏற்ப படைக்கப்படுகிறது. இந்த அனுபவ நிலையையும் பொருளின் இயல்பையும் கருத்தில் கொண்டு இலக்கியம் ஐந்து வகைப்பட்டனவாக பாகுபடுத்த படும்.

1 தன் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் படைக்கப்படும் இலக்கியம். இவற்றுள் முதன்மை இடம் பெறுவது தன்னுணர்ச்சிப் பாடல்களாகும். அடுத்து இசைப் பாடல்களும், பக்திப் பாடல்களும், அனுபூதிப் பாடல்களும், இரங்கற்பாக்களும், தன் வரலாறுகளும், பயண நூல்களும், வாழ்க்கை விளக்கமும், கலை இலக்கியத் திறனாய்வுகளும் அடங்கும்.

2. மனித இனத்திற்கு பொதுவாக அமைந்த வாழ்க்கையைப் பற்றிய இலக்கியம். அறநூல்கள், காப்பியங்கள், வரலாற்று நூல்கள், அம்மானைப்பாடல்கள், கதை பாடல்கள், கதைகள், புதினங்கள், நாடகங்கள் முதலானவை உதாரணங்களாகும்.

3. பல்வகையாக விரிந்து கிடக்கும் சமுதாயத்தைச் சித்தரிக்கும் இலக்கியம். இதனுள் வருணனை, விளக்கம், கிளத்தல் நிறைந்த இலக்கிய வகைகள் அடங்கும். கம்பனின் இராம காதை போன்ற காப்பியங்களும், மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, மலைபடுகடாம் போன்ற வர்ணனை செய்யுள்கள் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

4. இயற்கை பற்றி எழுந்த இலக்கியம். எடுத்துக்காட்டு : அழகின் சிறப்பு, ஆற்றுப்படை நூல்கள், ஐந்திணைப் பாடல்கள், குறவஞ்சி இலக்கியங்கள், காப்பியங்களில் இடம் பெறும் நாட்டு, நகர, ஆற்றுப் படலங்கள் முதலியன.

5. இலக்கியம் பற்றியும் கலை நயம் பற்றியும் எடுத்துரைக்கும் இலக்கியம். இவற்றுள் ஐந்து இலக்கண நூல்கள் தண்டிக்கலங்காரம், உவமான சங்கிரகம் போன்ற அணி இலக்கண நூல்கள் பஞ்ச மரபு, கூத்து நூல் போன்ற கலைவிளக்க நூல்கள் அடங்கும்.

### வடிவ அமைதிப் பாகுபாடு

துறை, தாழிசை, விருத்தம் உள்ளிட்ட செய்யுள்கள், யாப்பிலக்கியங்கள் உரைநடை இலக்கியங்கள் இதன் பாற்படும்.

### இலக்கியத்தின் உள்ளடக்கம்

புறவய யதார்த்தத்தின் கலைப்படைப்பே இலக்கியத்தின் உள்ளடக்கம். முதலாவதாக இது உண்மைக்கும் கலைப் படைப்பிற்கும் உள்ள உறவையும், அடுத்து கலை பிரதிபலிப்பினை அதன் தொடர்புகளோடு ஆராய்வதாகும்.

### இலக்கியத்தில் உருவம்

உருவத்தின் இரு தன்மைகள் வருணனையும்இ உணர்ச்சி வெளியீடும் ஆகும்.

### இதன் கூறுகளாவன

1. கலை இயைபு
2. கலைப்பின்னல்
3. கலையின் உள்ளடக்கம், உருவம் இவற்றின் ஒருமை.
4. உள்ளடக்கத்தின் சாரம் உருவத்தில் பொதிந்திருத்தல்.
5. அனுபவத்தின் பொதுமை, உருவத்தில் வெளிப்படுதல்.
6. உருவ உள்ளடக்க விகாரங்கள்.

### கலை இயைபு

ஒரு கலைப்படைப்பில் அதன் பகுதிகளுக்கும் அதன் முழுமைக்கும் இடையேயான இணைப்பே கலை இயைபு ஆகும்.

### கலைப்பின்னல்

ஒரு கருத்தைக கலைப்படைப்பாக மாற்றுவதற்கு கலைப்பின்னல் ஊடகமாக இருக்கிறது. இயல்பும் கலைப் பின்னலும் உருவத்தின் இன்றியமையாதப் பகுதிகளாகும்.

மேலும் காண்க இலக்கணம்

தமிழ் இலக்கணம்

ஆங்கில இலக்கியம்

ஆங்கில இலக்கணம்

பிரெஞ்சு இலக்கியம்

பிரெஞ்சு இலக்கணம்

மேற்கோள்

## 2.சந்தி விதிகள்

ஞாயிறு என்ற சொல்லோடு ஐ, ஆல் முதலிய வேற்றுமை விகுதிகளைச் சேர்க்கும் போது ஞாயிற்றை, ஞாயிற்றால் என்று சொற்கள் அமைகின்றன.
ஞாயிறு என்ற சொல்லோடு கிழமை என்ற சொல்லைச் சேர்க்கும் போது ஞாயிற்றுக்கிழமை என்ற தொகை உருவாகிறது. ஞாயிற்றை, ஞாயிற்றாள் என்பவற்றில் றகர ஒற்று இரட்டியது ஞாயிற்றுக்கிழமை என்பதில் றகர ஒற்று இரட்டியதோடு தகர ஒற்றும் மிகுந்தது. இவ்வாறு சொல்லோடு விகுதியும் மற்றொரு சொல்லும் சேரும் போது ஏற்படும் மாற்றங்களைச் சந்தி என்பர். சந்தி பற்றிய விதிகளை சந்திகள் என்றும் சந்தியை விளக்கும் இலக்கணத்தைச் சந்தி இலக்கணம் என்றும் கூறுவர். சங்க இலக்கணத்தை நமது இலக்கணங்கள் புணரியல் என்றும் புணர்ச்சி இலக்கணம் என்றும் கூறும்.

## 3.சந்தி வரையறை

தமிழில் எழுத்திலக்கணத்தில் முக்கிய பகுதியாகவும் பெரிய பகுதியாகவும் இருப்பது சந்தி இலக்கணம் ஆகும். சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்களை பற்றிய இலக்கணம் ஆகும். இலக்கண நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் சந்தி இலக்கணத்தைப் புணர்ச்சி இலக்கணம் என்று கூறுவர்.

**எடுத்துக்காட்டு**

ஓடி + போனான் = ஓடிப் போனான் என்று வரும்.
இங்கு இரண்டு சொற்கள் சேரும்போது இரண்டுக்கும் இடையில் ப் என்ற மெய் எழுத்து தோன்றி இருக்கிறது. இவ்வாறு இரண்டு சொற்கள் சேரும்போது பல வகையான மாற்றங்கள் ஏற்படும்.

## சந்தி வகைப்பாடுகள்

இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் நான்கு வகைகளில் அமையும்.

1. கதவு மூடியது கதவுமூடியது இயல்பாக இருக்கிறது
2. மாலை கூட்டல் பொழுது மாலைப்பொழுது ஒரு மெய் எழுத்து தோன்றியது.
3. மரம் கூட்டல் நிழல் மரநிழல் ஓர் எழுத்து கெட்டது. (அழிந்தது)
4. கல் சிலை கற்சிலை இல் என்ற எழுத்து ற் ஆக திரிந்து மாறியது.

எனவே இரண்டு சொற்கள் சேரும்போது இயல்பாக வருத்தல், தோன்றுதல் திரிதல், கெடுதல் ஆகிய நான்கு வகைகளில் வரும் என அறியலாம். இங்கு இரண்டு சொற்கள் இருக்கின்றன. முதல் சொல்லை நிலை மொழி என்றும், இரண்டாம் சொல்லை வருமொழி என்றும் கூறுவர். இந்த மாற்றங்கள் நிலை மொழி இறுதி எழுத்துக்கும், வருமொழியின் முதல் எழுத்துக்கும் ஏற்ப அமையும். எனவே ஒரு சொல்லின் முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் பற்றி அறிய வேண்டியது அவசியம் ஆகிறது.

## 4. **சந்தியின் தேவை**

உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகிய மூன்று வகை எழுத்துக்கள் சொற்களின் வரும். சந்தி இலக்கணத்தில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்ற இருவகை எழுத்துக்களை மட்டுமே கொண்டு இலக்கணம் சொல்லப்படும். உயிர்மெய் எழுத்து, உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உருவானது ஆகும். அதை மெய்யெழுத்து, உயிர் எழுத்து என்று பிரித்து கொண்டு சந்தி இலக்கணத்தின் பயன்படுத்த வேண்டும.

***எடுத்துக்காட்டு***

பல் என்ற சொல்லின் முதலில் உள்ள ப என்ற உயிரமெய் எழுத்து ப் + அ என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்ந்தது.

பாம்பு என்ற சொல்லின் இறுதியில் உள்ள பு என்ற உயிர்மெய் எழுத்து ப் + உ என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்ந்தது. இதன் அடிப்படையில் சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

ஓடை உயிரெழுத்தில் தொடங்கும் சொல்.
மாடு மெய் எழுத்தில் தொடங்கும் சொல்
பழம் மெய்யெழுத்தில் முடியும் சொல்
கிளி உயிர் எழுத்தில் முடியும் சொல்

இவற்றைக் கொண்டு பார்க்கும் போது சொற்கள் அமையும் விதத்தை பின்வருமாறு காட்டலாம். ஈறு என்னும் சொல் இறுதி அல்லது கடைசி என்ற பொருளைக் கொண்டது.

உயிர் ஈறு மெய் முதல் (ஓடை கரை)

உயிரீரு உயிர் முதல் (மணி அடித்தது)

மெய்யீரு உயிர் முதல் (பழம் உதிர்ந்தது)

மெய் ஈறு மெய் முதல் (முள் குத்தியது)

### வேற்றுமையும் அல்வழியும்

சந்திகளில் வேற்றுமை சந்தி, என்று இருவகை உண்டு. வேற்றுமை அல்லாத சந்தி எனப்படும்.

- நாய் ஓடியது
- நாயை விரட்டினேன்
- நாய்க்கு மணிக்கட்டு

இந்த சொற்களில் நாய் என்ற சொல்லுடன் ஐகு என்ற எழுத்துக்கள் சேர்ந்துள்ளன நாய் என்ற சொல்லுடன் இந்த எழுத்துக்கள் சேர்ந்தவுடன் நாய் என்ற சொல்லின் பொருள் வேறுபடுகிறது முதல் தொடரில் நாய் எழுவாயாக இருக்கிறது இரண்டாம் தொடரில் நாய் என்ற சொல்லுடன் ஐ என்ற எழுத்து சேர்ந்தவுடன் நாய் செயப்படுபொருளாக மாறுகிறது மூன்றாம் தொடரிலும் அவ்வாறே கு என்ற எழுத்து சேர்ந்தவுடன் அதன் பொருள் வேறுபடுகிறது இவ்வாறு ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பின்னால் நின்று அதன் பொருளை வேறுபடுத்தும் எழுத்தை அல்லது சொல்லை வேற்றுமை என்கிறோம்.

அவ்வாறு வேறுபடுத்துவதற்கு காரணமாக உள்ளவற்றை வேற்றுமை உருபு என்பர். எழுவாய் வேற்றுமை முதல்விளி வேற்றுமை வரை எட்டு வகை வேற்றுமைகள் உள்ளன. அவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைகளுக்கே உருபு உள்ளது. வேற்றுமையின் இலக்கணம் பற்றி பின்னர் விரிவாக விளக்கப்படும்.

**எ.டு**

நாயை கண்டேன் - இரண்டாம் வேற்றுமை வந்துள்ளது

கல்லால் அடித்தேன் - மூன்றாம் வேற்றுமை வந்துள்ளது

பசிக்கு உணவு - நான்காம் வேற்றுமை வந்துள்ளது

இங்குச் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் சேர்ந்து வந்துள்ளது. இவற்றை வேற்றுமை தொடர்கள் என்று கூறுவர்.

மண்குடம்

பொன் வளையல்

இவையும் வேற்றுமை தொடர்களேஇ இவற்றை விரித்துப் பார்த்தால், மண்ணால் ஆகிய குடம், பொன்னால் ஆகிய வளையல், என்று வரும். இந்தத் தொடர்களில் பெயர்ச்சொற்களுக்கு பின்னால் வரும் வேற்றுமை உருபுகள் மறைந்து வந்துள்ளன. எனவே இவை வேற்றுமை தொகை எனப்படும்.

வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்தாலும், மறைந்து வந்தாலும், அது வேற்றுமை சந்தி எனப்படும்.

- வந்த கண்ணன் (பெயரெச்சம)
- வந்து போனான் (வினையெச்சம)
- ஓடு ஓடு (அடுக்குத்தொடர்)
- மழை பொழிந்தது (எழுவாய் தொடர்)
- கண்ணா செல் (விழித்தொடர்)

மேலே காட்டப்பட்ட பெயரெச்சம், வினையெச்சம், அடுக்குத்தொடர், எழுவாய் தொடர், விளித்தொடர் முதலியவை வேற்றுமை அல்ல என்பதால் இவற்றை அல்வழி தொடர் என்று கூறுவர்.

## தற்காலத்தில் உடம்படுமெய் ஒலிகள்

தற்கால தமிழில் யகரமும் வகரமும் உடம்படுமெய் ஒலிகளாக சொற்களின் புணர்ச்சியில் வருகின்றன. மொழியியலாளர் தற்கால தமிழில் இரு சொற்கள் புணரும் புணர்ச்சியை அகச்சந்தி என்றும், புற சந்தி என்றும் இருவகையாகப் பிரிக்கின்றனர். அகச்சந்தி, புறச்சந்தி என்றால் என்ன என்பதை சற்று விளக்கமாகக் காண்போம்.

## 5. சந்தி வகைப்பாடுகள்

ஒரு தனி உறுப்போடு ஒரு கூட்டுருபு சேர்ந்து நிற்பது அகச்சந்தி எனப்படும.

**சான்று**

கை + யை = கையை

தனி உருபு என்பது தனிச்சொல் ஆகும். இது தனித்து வழங்கும்போது எந்த பொருளை தருகிறதோ அந்த பொருளிலேயே புணர்ச்சியில் சேர்ந்து வரும்போதும் தரும். கூட்டுருபு என்பது தனித்து வழங்காது. அதற்குப் பொருள் உண்டு என்றாலும், தனி ஒருவோடு சேர்ந்து வழங்கும்போதே அப்பொருளை தரும். இங்கே காட்டிய சான்றில் 'கை' என்பது தனி உருவம் ஆகும். இது தனித்து வழங்கும்போது தரும் பொருளையே ஐ என்ற கட்டுருபுபோடு சேர்ந்து வரும்போதும் தருகிறது. ஐ என்பது கட்டுறுப்பு ஆகும். இது இரண்டாம் வேற்றுமை உருபு ஆகும். இதற்கு செயப்படுபொருள் என்பது பொருளாகும். ஆனால் கை என்ற தனிச்சொல்லோடு சேர்ந்து வரும்போது அப்பொருளை தருகிறது

## 5.2 புறச்சந்தி

இரண்டு தனி உறுப்புகள் அல்லது தனி சொற்கள் சேர்ந்து வருவது புறச்சந்தி எனப்படும். தனி உருபுகள் இரண்டும் தனித்தனியே வரும்போது என்ன பொருளை தருகின்றனவோ அதே பொருளையே அவை சேர்ந்து வரும்போதும் தரும்.

**சான்று**

தமிழ் + சங்கம் = தமிழ்ச்சங்கம்

மரம் + கிளை = மரக்கிளை

## 5.3 அகச்சந்தியில் உடம்படுமெய் ஒலிகள்

தற்காலத் தமிழில் அகச்சந்தியில் உயிர் ஒலியை இறுதியாகக் கொண்ட நிலைமொழியும் உயிரொலியை முதலாகக் கொண்ட வருமொழியும் புணரும் போது அவற்றிற்கு இடையில் உடம்படுமெய் ஒலி கட்டாயம் வரவேண்டும்.

சான்று

யானை + ஆ = யானையா (யானை வந்தது) (யானையைப் பார்த்தேன்).

தெரு + இல் = தெருவில் (தெருவில் வந்தான்)

ஆ + இன் = ஆவின் பால்

இங்கே காட்டிய சான்றுகளில் யகர, வகர உடன்படுமே ஒலிகள் கட்டாய நிலையில் வருகின்றன. இச்சான்றுகளில் அகச்சந்தியை மட்டும் காண்கிறோம்.
இவற்றை யானைஆ யானை தெருஇல் ஆஇன் என உடம்படுமெய் ஒலிகள் இல்லாமல் எவரும் எழுதுவது இல்லை.

## 5.4. புறச் சந்தியில் உடம்படுமெய் ஒலிகள்

புறச்சந்தியில் யகர வகர உடன்படுமேய்க் ஒலிகள் கட்டாயம் வரவேண்டும் என்பது இல்லை

சான்று
இந்த ஆண்டு வேண்டிய அளவுக்கு மழை இல்லை.

இத்தொடரில் புறச்சந்தியை மட்டும் காண்கிறோம். ஏனெனில் உடம்படுமெய் ஒலிகள் இல்லை உடம்படுமெய் ஒலிகள் வந்திருந்தால் இதே தொடர்.

இந்த ஆண்டு வேண்டிய அளவுக்கு மழை இல்லை என அமைய வேண்டும். ஆனால் இவ்வாறு எழுதுவது பெரு வழக்கு அன்று. இந்த ஆண்டு வேண்டிய அளவுக்கு மழை இல்லை என உடம்பொடுமை ஒலிகள் இல்லாமல் எழுதுவது ஏற்புடையதாகவும், பெருவழக்காகவும் உள்ளன.

## 6.வல்லினம் மிகும் இடங்கள்

வல்லினம் மிகும் இடங்கள் என்பது தமிழ் மொழியில் அடுத்தடுத்து இரண்டு சொற்கள் வரும்போது முதல் சொல்லின் நிலைமொழி இறுதியில் ஒரு வல்லின எழுத்து சேர்வதைக் குறிக்கும். ஒரு நிலை மொழியோடு வருமொழி க, ச, த, ப, வருக்க எழுத்துக்களில் தொடங்கும் சொல்லாக அமையும் பொழுது அவ்வல்லொற்று சில இடங்களில் மிகுந்தும் சில இடங்களில் மிகாமலும் வரும். இவற்றை அறிந்து பயன்படுத்தாமையைச் சந்திப்பிழை எனக் கூறுவர்.

## 6.1.வல்லெழுத்து மிகும் இடங்கள்

**1. அ,இ,உ சுட்டெழுத்துக்களின் பின்னும் ஓ என்னும் வினாவிடத்தின் பின்னும் வரும் வல்லினம் மிகும்.**

அக்கனி

இப்பையன்

எச்சிறுவன்

**2.அந்த, இந்த, எந்த, என்னும் சுட்டு, வினாத் திரிபுகளின் பின வரும் வல்லினம் மிகும்.**

அந்தக் கனி

இந்தப் பையன

எந்தக் குதிரை

**3. அப்படி, இப்படி, எப்படி, என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்**

அப்படிக் கற்றான்

இப்படிச் சொன்னான்

எப்படித் தருவான்

**4. அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்**

அங்குக் கண்டான்

இங்குப் பெற்றான்

எங்குச் சென்றனர்

**5. இனி, தனி, திரு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

இனிச் செய்யலாம்

தனித்தமிழ்

திருச்செந்தூர்

திருக்குறள்

**6. வேற்றுமை புணர்ச்சியில் வல்லினம் மிகும் இடங்கள் இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

மயிலைக் கண்டேன்

மலையைச் சார்ந்தேன்

உணவைத் தந்தேன்

குறளைப் படித்தேன்

**7.நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

தந்தைக்குக் கொடுத்தான்

தாய்க்குச் சொன்னான்

தங்கைக்குத் தந்தான்

**8.நான்காம் வேற்றுமைத் தொகையில் முன் நின்ற சொல் (நிலைமொழி) அ∴ர்வினை பெயராக இருந்தால் பின்வரும் வல்லினம் மிகும்.**

குறிஞ்சித் தலைவன்

படைத்தளபதி

கூலிப்படை

**9.ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அ∴றிணைப் பெயராக இருப்பின் பின்வரும் வல்லினம் மிகும்.**

நாய்க்குட்டி

புலித்தலை

நரிப்பல்

**10.ஏழாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.**

மனைப் பிறந்தார்

சென்னைப் பல்கலைக்கழகம்

**11.அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் மிகும் இடங்ள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.**

ஓடாக்குதிரை

கூடாச்சந்தை

ஆடாத்தசை

பாடாப் பாட்டு

**12.பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

இனிப்புப் பண்டம்

வட்டப்பலகை

வெள்ளைத்தாள்

சிவப்புச் சட்டை

**13.இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

ஆவணித் திங்கள்

சாரைப்பாம்பு

உளவுத்தொழில்

செவ்வாய்க்கிழமை

**14. அரை, பாதி எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்.**

அரைக்காசு

பாதிப்பணம்

எட்டுத்தொகை

பத்துப்பாட்டு

**15.உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.**

மலர்க்கை

தாமரைப்பாதம்

சங்குக்கழுத்து

புளிப்பாய்ச்சல்

**16.ஆய், போய் என்னும் வினையெச்சச் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.**

போய்க் கண்டேன்

நன்றாய்ச் சொன்னாய்

**17.இகர, அகர ஈற்று வினையெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.**

தேடிப் பார்த்தேன்

தேடப் போனேன்

**18.ஆக, என என்று முடியும் வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகும்.**

தருவதாகச் சொன்னான்

பார்ப்பதாகக் கூறினாள்

தாயெனக் கூறினார்

படி எனக் கூறினார்

## 7. வல்லினம் மிகா இடங்கள்

இரண்டு சொற்கள் சேரும்போது நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் எந்தெந்த எழுத்துக்கள் இருந்தால் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை புணர்ச்சி இலக்கணத்தில் படிக்கலாம்.

இப்போது இரண்டு சொற்கள் சேரும்போது வருமொழி முதல் எழுத்து வல்லினமாக இருந்தால் எந்தெந்த இடங்களில் எல்லாம் வல்லினம் மிகாது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

க, ச, ட, த, ப, ற ஆறு எழுத்துக்களும் வல்லினம் எனப்படும்.

இவற்றுள் ட, ற ஆகிய இரண்டு எழுத்துக்கள் மொழி முதல் வராது.

மீதமுள்ள க, ச, த, ப ஆகிய நான்கு எழுத்துக்களும் வருமொழி முதல் எழுத்தாக வரும்போது எந்தெந்த இடங்களில் எல்லாம் மிகாமல் இயல்பாக வரும் என்பதை காண்போம்.

### 1. உண்மை தொகையில் வல்லினம் மிகாது

இரண்டு சொற்களின் இடையில் அல்லது இடையிலும் இறுதியிலும் வரும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்பது உம்மைத்தொகை எனப்படும்.

இத்தகைய உம்மைத்தொகை சொற்களில் வல்லினம் மிகாது.

தாய் தந்தை தாய்தந்தை. (தாயும் தந்தையும்)

இரவு பகல் இரவுபகல். (இரவும் பகலும்)

### 2 வினைத்தொகையில் வல்லினம் மிகாது

பெயர்ச்சொல்லின் ஒரு பகுதி மூன்று காலத்துக்கும் பொருந்தி வருமாறு வரும் வினைச்சொல் அடங்கிய பெயர்ச்சொல் வினைத்தொகை எனப்படும்.

எடுத்துக்காட்டாக எரிதழல் என்பது எரியும் தழல், எரிந்த தழல், எரிகின்ற தழல் என முக்காலமும் உணர்த்தும்.

இத்தகைய வினைத்தொகை சொற்களில் வல்லினம் மிகாது.

பாய்புலி

குடிதண்ணீர்

படர்கொடி

சுடுசோறு

ஓடுதளம்

### 3. இரட்டைக்கிளவி அடுக்குத் தொடர்களில் வல்லினம் மிகாது.

பிரித்தால் பொருள் தராதது இரட்டைக்கிளவி.

பிரித்தால் பொருள் தருவது அடுக்குத்தொடர்.

இத்தகைய இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் சொற்களில் வல்லினம் மிகாது.

சலசல - இரட்டைக்கிளவி

கலகல - இரட்டைக்கிளவி

ஆடு ஆடு - அடுக்குத்தொடர்

ஓடு ஓடு - அடுக்கு தொடர்

**4. விழி தொடரில் வல்லினம் மிகாது.**

கண்ணா வா!

இறைவா கேள்!

தம்பி பார்!

**5. வியங்கோள் வினைமுற்றுக்கபின் வல்லினம் மிகாது.**

முதலாவது வியங்கோள் வினைமுற்று பற்றி அறிவோம்.

வியங்கோள் வினைமுற்று விகுதிகள் க, இய, இயர் என்பனவாம்.

வாழ்க, வாழிய, வாழியர் என வரும்.

இத்தகைய வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வரும்.

க, ச, த, ப மிகாது.

வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ்

விழ்க படைகள் விழ்க படைகள்

வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாண்டு

வெல்க தமிழர் வெல்க தமிழர்

வருக சான்றோரே வருக சான்றோரே

**6.இரண்டாம் வேற்றுமை தொகையில் வல்லினம் மிகாது.**

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ மறைந்து வந்துள்ளது.

இரண்டாம் வேற்றுமைத்தொகை என்பதை நினைவில் கொள்க.

(இரண்டாம் வேற்றுமை உருவம் பயனும் உடன் தொக்க தொகை என்பது வேறு)

இரண்டாம் வேற்றுமை தொகையில் மட்டும் க, ச, த, ப மிகாது.

கதை சொன்னார் கதை சொன்னார். (கதையைச் சொன்னார்)

தமிழ் கற்றேன் தமிழ் கற்றேன். (தமிழைக் கற்றேன்)

**7. அத்தனை இத்தனை எத்தனை என்னும் சொற்களுக்கு பின் வரும் வல்லினம் மிகாது.**

அத்தனை பழங்கள் அத்தனை பழங்கள்

இத்தனை பேர் இத்தனை பேர்

எத்தனை கடைகள் எத்தனை கடைகள்

**8. எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் தவிர பிற என்னுப் பெயர்களுக்குப் பின் வல்லினம் மிகாது.**

ஐந்து பழங்கள் ஐந்து பழங்கள்
இரண்டு பேர் இரண்டு பேர்
மூன்று புலி மூன்று புலி

**9. எழுவாய் தொடரில் வல்லினம் மிகாது.**

வண்டு பறந்தது வண்டு பறந்தது
முல்லை படித்தாள் முல்லை படித்தாள்

**10. அவை இவை என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.**

அவை பறந்தன அவை பறந்தன
இவை சென்றன இவை சென்றன

**11. அது இது என்னும் சுற்றுப்பயர்களின் பின் வல்லினம் மிகாது.**

அது போனது அது போனது
இது சென்றது இது சென்றது

**12.எது, எவை என்னும் வினை வினா சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.**

எது கேட்டது எது கேட்டது
எவை பார்த்தன எவை பார்த்தன

**13. அ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துக்களின் பின் வரும் வல்லினம் மிகாது.**

அவனா சொன்னான் அவனா சொன்னான்
அவனோ போனான் அவனோ போனான்
அவனே கேட்டான் அவனே கேட்டான்

**14. மூன்றாம் வேற்றுமை உருபுகளில் ஓடு, ஓடு ஆகியவற்றின் பின் வரும் வல்லினம் மிகாது.**

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆண், ஓடு, ஓடு, என்பனவாம். இவற்றுள் ஒடு, ஓடு என வரும் சொற்களுக்குப் பின் வரும் க, ச, த, ப மிகாது.

பூவோடு சேர்ந்த பூவோடு சேர்ந்த
கபிலரோடு பரணர் கபிலரோடு பரணர்

**15. ஈறுகட்ட எதிர்மறை பெயரெச்சம் தவிர பிற பெயரெச்சங்களின் பின்வரும் வல்லினம் மிகாது.**

முற்றுப்பெறாத ஒரு வினைச்சொல் ஒரு பெயரைக் கொண்டு முடியுமானால் அது பெயரெச்சம் எனப்படும்.

படித்த பையன் என்ற சொல்லில் படித்த என்ற வினைச்சொல் முற்று பெறவில்லை. பையன் என்பது ஒரு பெயர்.

எனவே படித்த பையன் என்பது பெயரெச்சம் ஆகும்.

பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

படித்த பெண் படித்த பெண்

நடித்த கலைஞர் நடித்த கலைஞர்

**16. படி என்னும் சொல்லுக்கு பின் வரும் வல்லினம் மிகாது.**

சொன்னபடி செய்தார் சொன்னபடி செய்தார்

பாடியபடி தொடர்ந்தார் பாடியபடி தொடர்ந்தார்

## 8. நிலத்தனிக் குறிப்புகள்

நிலம் என்பது நிரந்தரமாக நீரில் மூழ்கியிராத புவியின் திண்ம மேற்பரப்பு ஆகும். வரலாறு முழுவதும் பெரும்பாலான மனிதச் செயல்பாடுகள், வேளாண்மை, வாழிடம், பல்வேறு இயற்கை வளங்கள் ஆகியவை அடிப்படையான நிலத்திலேயே நடந்துள்ளன. நிலம், பெரிய நீர்ப்பரப்புகளைச் சந்திக்கும் பகுதிகள் கரையோரப் பகுதிகள் என அழைக்கப்படுகின்றன. நிலத்துக்கும், நீருக்கும் இடையிலான பிரிப்பு மனிதனுடைய அடிப்படை கருத்துகளுள் ஒன்று. நிலம், நீர் என்பவற்றுக்கு இடையிலான எல்லை குறித்த பகுதியின் ஆட்சி அதிகாரங்களிலும், வேறு பல காரணிகளையும் பொறுத்து மாறுபடக்கூடும். கடல்சார் எல்லை, அரசியல் எல்லை வரையறுத்தலுக்கு ஒரு எடுத்துக்காட்டு. நீர் எங்கே நிலத்தை சந்திக்கிறது என்பதை தெளிவாக வரையறுப்பதற்கு உதவக்கூடிய பல இயற்கையான எல்லைகள் உள்ளன. பாறை நிலஅமைப்பு கொண்ட இடங்களில் எல்லை வரையறுப்பது சதுப்பு நிலப்பகுதிகளில் எல்லை வரையறுப்பதை விட இலகு. ஏனெனில் சதுப்பு பகுதிகளில் பல நேரங்களில் நிலம் எங்கே முடிகிறது, நீர் எங்கே தொடங்குகிறது என்பதை கூறுவது கடினமானது. வற்றுப்பெருக்கு, காலநிலை என்பவற்றை பொருத்தும் இந்த எல்லை வேறுபடக்கூடும்.

பொருளியலின்படி உற்பத்தியில் பயன்படுத்தக்கூடிய சகல இயற்கை வளங்களும் நிலம் என்பதுள் அடங்கும். நிலத்தை மனிதனால் உற்பத்தி செய்யமுடியாது.

நிலம் என்பது நீர் போல் இயங்காது ஒரே இடத்தில் நிலையாக நிற்கும் பூதவகை எனப் பொருள் கூறப்படுகிறது. நிலையாக நிற்பது என்னும் பொருளில் நில் என்னும் அடியில் இருந்து நிலம் என்னும் சொல் உருவானது. பிற திராவிட மொழிகளில் இதற்கு நிலம் மலையாளம், நெல (கன்னடம், துளு, குடகு, படகர்), நெல (தெலுங்கு), நெல்ன் (துட) போன்ற சொற்கள் பயன்படுகின்றன.

நீட்சபி பொருள் கொண்ட வேர்ச்சொல் நூல். இதிலிருந்து நிலம் என்னும் சொல் பின்வருமாறு பெறப்படும்: நுல், நெல், நெள், நெரு, நெகிழ் நெகிள் நீள்,. நிள் நில் நிலம்.

**பொருளியலில் நிலம்,**

நிலம் அல்லது இயற்கை வளம் - பொருட்களின் உற்பத்தியில் பயன்படும் மண் மற்றும் கனிப்பொருள்கள் முதலிய இயற்கையாகக் கிடைக்கும் பொருட்கள். நிலத்துக்கான கொடுப்பனவு வாடகை ஆகும்.

**நிலத்தின் இயல்புகள்.**

. இயற்கையின் கொடைகள் ஆகும் அதாவது மனிதனால் உருவாக்க முடியாது. உற்பத்தி செலவற்றது.

. செயலற்றவை அது மனித முயற்சி மற்றும் ஏனைய காரணிகளின் இணைப்பினாலே நிலம் செயல் உள்ளதாகும்.

.இடப்பெயரும் தன்மை அற்றது.

. விரைவாகக் குறைந்து செல் விளைவு விதி தொழிற்படும்.

**நிலத்தின் முக்கியத்துவம்:**

. உற்பத்தி மேற்கொள்ள நிலம் அவசியம்.

. சகல மூல வளங்களும் நிலைத்திருக்க நிலம் அவசியம்.

. மனித முயற்சி மற்றும் ஏனைய காரணிகளை உட்புகுத்துவதனால் நிலத்தின் பெறுமதி அதிகரிக்கும்.

. நிகழ்ச்சியற்ற நிரம்பலைக் கொண்டுள்ளது.

## 9. பழச்சந்தி, இக்காலச்சந்தி வேறுபாடுகள்:

### சந்தி இலக்கணம் ஏன்?

சந்திர கணம் இல்லாமல் மொழி இயங்காதா தொடர்களிலும் சொற்களிலும் சந்தி இலக்கணம் இல்லாமல் போனால் என்ன குறை? இப்படிச் சில கேள்விகள் எழுந்தால் வியப்பில்லை.

முதலாவதாக, சந்தி இலக்கணம் கைவிடப்பட்டால் பொருளில் தெளிவு குன்றி மயக்கத்துடன் இடம் ஏற்படக்கூடும். மாட்டுக்கன்று என்பதற்கு பதிலாக மாடு கன்று என்று எழுதினால் பொருள் மாறுபடுகிறது. இவ்வாறே பழக்கூடை என்பதற்கு பதில் பழங்கூடை என்று எழுதினாலும் பொருள் மாறுபடுகிறது. பொருள் குழப்பத்தை நீக்கி தெளிவைக் காக்கச் சந்தி இலக்கணம் ஒரு இன்றியமையாத கருவியாகும்.

இரண்டாவதாக, சோர்சேர்க்கையில் தோன்றும் மாற்றங்களை எழுத்து வடிவால் காட்டுவதற்கு சந்தி இலக்கணம் உதவுகிறது. மரம் என்ற சொல்லும் கல் என்ற விகுதியும் சேரும்பொழுது இயல்பாகவே மகர ஒற்று, ஙகர ஒற்றாக மாறி மரங்கள் என்று ஒழிக்கக் காண்கிறோம். இத்தகைய மாற்றங்கள் எல்லாம் எழுத்து வடிவால் காட்ட சந்தி இலக்கணம் திட்டவட்டமாக விதி வகுத்துச் செல்கிறது.

மூன்றாவதாக மொழியில் வழிவழியாகக் காக்கப்பட்ட மரபு காக்கப்படுவதற்குச் சந்தி உதவி புரிகிறது.

## எப்படிப்பட்ட சந்தி வேண்டும்?

கடல் தாவு படலம் என்பது கடற்றாவு படலம் என்றும், சிழ்தாழிசைக் கொச்சகம் என்பது சிற்றாழிசைக் கொச்சகம் என்று மாறுகின்ற மாற்றங்களை நாம் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் கண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட கடும் சந்ததிகள் இப்போதைய இலக்கிய தமிழில் இடம்பெறுவதில்லை. “உன்னை பார்த்தேன்” மற்றும் “உனக்கு கொடுத்தேன்” முதலிய தொடர்களில் வேற்றுமை விகுதியை அடுத்து வரும் ஒற்றுக்களை இன்றைய செந்தமிழில் விளக்கி எழுதுவது பிழை என்று கருதுகிறோம். ஆகவே இன்றைய செந்தமிழில் எல்லோரும் ஏற்றுப் போற்றும் சந்ததிகளை மட்டுமே பார்ப்போம்.

### கருவிகள்

சந்தி இலக்கணம் பற்றி பேசவும் விதிகளை வகுக்கவும் விளக்கம் கூறவும் சில இன்றியமையாத இலக்கண குறியீடுகளையும், மரபுகளையும் நாம் விளங்கி கொள்ள வேண்டும். சந்தி இலக்கணத்துக்கு தேவையான கருவிகளை அமைத்துக் கொள்வதே இந்தப் பகுதியின் நோக்கம்.

### எழுத்து வகை

தமிழ் உள்ள எழுத்துக்கள் உயிர், ஆயுதம், மெய் என மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும்

#### உயிர்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய 12 எழுத்துக்களையும் உயிர் என்பர. இவை குறில், நெடில் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படும்.

#### குறில்

அ, இ, ஊ, ஏ, ஓ ஆகிய ஐந்தும் குறிலாகும். இவற்றைக் குறில் எழுத்து என்றும் சுட்டுவர்.

### 2.1.3 நெடில்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, ஆகிய ஏழும் நெடில்கள் ஆகும். இவற்றை நெட்டெழுத்து என்றும் சுட்டுவர். இங்கே கூறப்பட்ட சில உயிர்கள் (ஐ,ஔ) தன் இயல்பான அளவில் இருந்து குறுகி ஒழிப்பதும் உண்டு.

### 2.1.4.குற்றியலிகரம்

தனக்கு இயல்பான அளவில் இருந்து குருவி குறுகி ஒழிக்கும் “இகரத்தை”க் குற்றியலிகரம் என்பர்.

எடுத்துக்காட்டு காண்க:

பாம்பியாது (பாம்பு யாது)

## 2.1.5.குற்றியலுகரம்

தனக்கு இயல்பான அளவிலிருந்து குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும். க்,ச்,ட்,த்,ப்,ற் ஆகிய வல்லொற்றுகளின் மேல் ஏறி வரும் உகரம் படு, கெடு எனத் தனிக்குறிலின் பின் வரும் போது மட்டும் குறுகுவதில்லை. ஏனைய இடங்களிளெல்லாம் அது குறுகியே ஒலிக்கும். .குற்றியலுகரத்தைக் குற்றுகரம் என்றும் குறுகிய உகரம் என்றும் குறிப்பதுண்டு. குற்றுகரம் கீழ்க்கண்டவாறு ஆறு வகையாக பிரிக்கப்படும். (எடுத்துக்காட்டு)

1. வன்தொடர் கொக்கு 2.மென்தொடர்க் குரங்கு 3. இடைத்தொடர் நல்கு 4.ஆயுதத் தொடர் எக்கு 5. நெடில் தொடர் ஆடு 6.உயிர்த்தொடர் (அழகு, மிலாறு)

தனி நெடிலை அடுத்து வரும் குற்றுகரம் மட்டுமே நெடில் தொடராகும். ஆடு என்பது நெடில் தொடர் என்றும் மிலாற என்பது உயிர்த்தொடர் என்றும் கொள்ளப்படுவதற்கான காரணத்தை நன்கு தெளிந்து கொள்க நெடில் தொடர்க்கும், உயிரத்தொடருக்கும் மேலும் சில எடுத்துக்காட்டுகள் தரப்படுகிறது. அவற்றையும் கண்டு தெளிவு பெறுக.

நெடில் தொடர் (பாடு, கூறு, ஏடு, ஓடு, ஆறு, ஏறு)

உயிர் தொடர் (பழகு, வேசறு, கழுகு, களிறு, பலாசு, விளாசு, உரசு)

நெடில் தொடரக் குற்றியலுகரச் சொற்களில் குற்றுகரத்தின் முன் நெட்டெழுத்து மட்டுமே நிற்பதையும் உயிர்த்தொடர்க் குற்றுகரச் சொற்களில் குற்றுகரத்தின் முன் தனி நெடில் நில்லாமல் குறிலும் நெடிலுமாகவோ குறிலும் குறிலுமாகவோ குறைந்து இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து நிற்பதையும் நன்கு நோக்கி இவற்றிடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்க.

## 2.1.6 ஐகாரக்குறுக்கம்

ஐகாரம் நெடில் என்று கொல்லப்பட்டாலும் இது நெட்டுயிர்க்குறிய மாத்திரையிலிருந்து குறைந்தே ஒலிக்கும். மொழியில் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் இது குறுகியே நிற்கும்.

**எடுத்துக்காட்டு**

முதல் (பையன்)

இடை( தலைவன், நிலையம்)
கடை (அவரை, கலை) மொழி முதலில் உள்ள ஐகாரத்தை விட இடையிலும் கடையிலும் உள்ள ஐகாரங்கள் மேலும் குறுகி ஒழிப்பதனை மீண்டும் ஒழித்து உணர்க.

### 2.1.7. ஔகாரக் குறுக்கம்

ஔகாரமும் ஐகாரம் ஐகாரம் போலவே மொழியில் நெட்டுயிர்க்குரிய மாத்திரையிலிருந்து குறைந்தே ஒலிக்கும். ஔகார உயிரும் உயிர்மெய்யும் மொழியின் இடையிலும் கடையிலும் வாராமையால் ஔகாரக்குறுக்கம் மொழி முதலுக்கு மட்டுமே பொருந்தும்.
எடுத்துக்காட்டு (ஔவ்வை, கௌவ்வை, வௌவ்வால், ஔவியம்)

### 2.1.8. ஆயுதம

ஆயுத எழுத்தினைத் தனிநிலை என்றும் கூறுவர். ஆயுதமும் தனக்கு இயல்பான மாத்திரையிலிருந்து குறுகி ஒழித்தல் உண்டு. அவ்வாறு குறுகிய ஆயுதம் குற்றாயுதம் என்றும் குறுகாத ஆயுதம் முற்றாய்தம் என்றும் பெயர்பெறும். குற்றாயுதத்தை ஆயுத குறுக்கம் என்றும் குறிப்பர். **கறீது, முக்றீது** எனச் சந்தி விதிகளால் பிறக்கும் ஆயுதம் குற்றாயுதத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும். **அது இது எது முதலிய** சொற்களில் காணப்படும் ஆயுதம் முற்றாயுதம்.

### 2.1.9.மெய்

மெய்யெழுத்துக்களை ஒற்று என்றும், புள்ளி என்றும் கூறுவர். க்,ங்,ச்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் ஆகிய 18-ம் தமிழில் உள்ள மெய்களாம் இவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாகப் பிரிக்கப்படும்.

### 2.1.10. வல்லினம

மெல்லினம், மெங்கணம் மெலி ஆகியன ஒரு பொருட்கிளவிகள் க், ச், ட் த், ப், ற் ஆகிய ஆறும் வல்லின மெய்களாகும்.

### 2.1.11. மெல்லினம

மெல்லினம், மெங்கணம், மெலி ஆகியன ஒரு பொருட்கிளவிகள் **ஞ், ங், ண், ந், ம், ன் ஆகிய** ஆறும் மெல்லின மெய்களாம்.

### 2.1.12. இடையினம

இடையினம், இடைக்கணம் இடை ஆகியன ஒருபொருட்கிளவிகள். ய், ர் ல் ,வ், ழ், ள் ஆகிய ஆறும் இடையின மெய்யலாம்.

### 2.1.13. உயிர்மெய்

மெய்யோடு உயிர்கள் சேர்ந்து க, கா கி கீ என இவ்வாறு தோன்றும் எழுத்துகள் யாவும் உயிர்மெய் என பெயர் பெறும். 18 மெய்களும் 12 உயிர்களும் சேர்ந்து 216 உயிர்மெய்கள் தோன்றுகின்றன.

### 2.1.14. அளபெடை

உயிர், மெய், ஆயுதம் ஆகிய எழுத்துக்கள் தத்தமக்கு உரிய மாத்திரையினின்று மிக்கு ஒழிப்பதும் உண்டு. அவ்வாறு மிக்கு ஒலிப்பதனை அளபெடை என்பர். இந்த அளபெடை அளவு என்றும் குறிக்கப்படும். இது உயிரளபு ஒற்றபு என இரு வகைப்படும்.

### 2.1.15.உயிரளபு

நெட்டெழுத்துக்கள் ஏழும் அளபெடுக்கும். அளபெடுக்கும்போது ஆகாரத்துக்கு அகரமும் ஈகாரத்துக்கு இகரமும் ஊகாரத்துக்கு உகரமும் ஏகாரத்திற்கு எகரமும் ஓகாரத்திற்கு ஒகரமும் அளபெடைக் குறியாக வரும். ஐகாரத்துக்கு இகரமும் ஔகாரத்துக்கு உகரமும் அளபெடை குறியாக வருதல் மரபு.

### 2.1.16. ஒற்றளபு

உயிரளபெடை போலவே ஒற்றளபடையும் உண்டு. ங், ண், ந், ம், ன், ய், வ்,ல் ஆகிய ஒற்றுக்கள் மட்டுமே அளபெடுக்கும். ஆயுதமும் அளபெடுக்க வல்லது. ஆயுத அளபெடை என்று தனியே ஒரு அளபெடை வகையை அமைக்காமல் நமது மரபு இலக்கணங்கள் அதனையும் ஒற்றளவில் அடக்கி கொண்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

### 2.1.17. மொழி முதல் எழுத்துக்கள்

12 உயிர்களும் க், ச், த் ,ந் ,ப் ,ம் ,வ் ,ய் ஆகிய மெய்களும் மொழி முதல் எழுத்துக்களாக வரும். மெய்கள் மொழி முதலில் வரும்போது தனி மெய்யாக வராது. உயிர் மெய்யாகவே வரும். ங் என்ற மெய் மொழி முதலாக வரும் என்று இலக்கணங்கள் கொண்டாலும் இக்கால வழக்கிற்கு அது பொருந்தாமையால் நாம் அதை இங்கே மொழி முதல் எழுத்தாக குறிப்பிடவில்லை.

### 2.1.17.1. மொழி முதலில் உயிர்கள்

எடுத்துக்காட்டு

(அவன், ஆடு, இது, ஈகை, உலகு, ஊசி, எடு, ஏடு, ஐந்து, ஒன்பது,ஓடு, ஔவை)

### 2.1.17.2. மொழி முதலில் மெய்கள்

எடுத்துக்காட்டு (கடல், சால்பு, தண்மை, நன்மை, பழகு, மணம், வளம், யார், ஞாயிறு)

## 2.1.18. மொழி இறுதி எழுத்துக்கள்

12 உயிர்களும் மொழி இறுதி எழுத்துக்களாக வரும். ஞ்,ச்,ண், ந், ம், ன், ய், ர்,ல்,வ், ழ், ள் ஆகிய 11 மெய்களும் மொழிக்கு இறுதியில் வரும். நமது மரபு இலக்கணங்கள் குற்றியலுகரத்தையும் மேற்கூறிய மொழி இறுதி எழுத்துக்களோடு சேர்ந்து மொழி இறுதி எழுத்துக்கள் 24 என்று கூறும்.

மொழி இறுதியில் உயிர்கள் எடுத்துக்காட்டு : நிலா கிளி தி கொடு, பூ ஏ தே கலை நோ கோ கௌ மொழி இறுதி மேய்கள் எடுத்துக்காட்டு உரி கண் பொருந்து மரம் மான் நாய் தேர்பால் தேவையால் நாள் மொழி இறுதியில் புற்று உகரம் எடுத்துக்காட்டு பட்டு வண்டு உலகு ஆடு இக்கால வழக்கில் யகர ஒகர இறுதியும் இன்ச் இன் இவ்வாக்கியமே இறுதியும் அருகில் காண்க அசைகள் தமிழ் மொழி அமைப்பில் அசை கோட்பாட்டுக்கு ஒரு தனி இடம் உண்டு உயிரும் உயிர்மெய்யும் குறிப்பிட்ட நெறியில் சேர்ந்த சேர்க்கைக்கு அசை என்று பெயர் ஒரு அசையில் இரண்டுக்கும் மேற்பட்ட உயிர்கள் அமைவதில்லை அசைகள் அவற்றின் அமைப்புக்கேற்ப நேரசை நெறைய செய் என இரு வகைப்படும்.

### 2.1.19.1.நேரசை

குறில் தனித்தோ ஒற்றெடுத்தோ வரும்பொழுது நெடில் தனித்தோ ஒற்றெடுத்தோ வரும்போது நேரசை அமையும்.

எடுத்துக்காட்டு உலகு (குறில் தனித்து வந்தது) உலகம் (குறில் ஒற்றெடுத்து வந்தது) பா (நெடில் தனித்து வந்தது) பால் (நெடில் ஒற்றெடுத்து வந்தது)

குறிலுக்குப் பின் இன்னொரு குறில் இருந்தால் இரண்டும் இணைந்தது நிறையசையாகும். அப்படி இன்னொரு குறில் இல்லாதபோது குறில் தனித்து நின்று நேரசை ஆகும்.

### 2.1.19.2. நிரையசை

இரு குறில்கள் இணைந்தோ இணைந்து ஒற்றெடுத்தோ வரும்போது ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்தோ சேர்ந்து ஒற்றெடுத்தோ வரும்போது நிறையசை அமையும்.

**எடுத்துக்காட்டு**

படி (இரு குறில்கள் இணைந்து வந்தது) படம் (இரு குறில்கள் இணைந்து ஒற்றெடுத்து வந்தது) நிலா (ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்து வந்தது) விளாம் ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்து ஒற்றெடுத்து வந்தது)

நெடிலும் குறிலும் சேர்ந்து ஒரு அசை அமைவதில்லை என்பது குறிலோ நெடிலோ ஒற்று இடையிடாமல் பின் தொடரும் போது அதன் முன்னிற்கும் குறில் நேரசை ஆகாது என்பது இங்கே நன்கு கவனிக்கத்தக்க செய்திகள். அதாவது ஆடு, பாடு என்பன ஓரசை அல்ல. அவை இரண்டும் நேரசை சேர்ந்த சொற்கள். உலகு, பழகு என்பவற்றில் உ, ப என்பன நேரசை ஆகா. உல, பழ என்பன நிறையசையாகி எஞ்சி தனித்து நிற்கும் குறில் மட்டும் நேரசையாகும். நிறையசைகளில் நெடில் ஈற்று நிறையசையும் (நிலா) குறிலீற்று நிறையசையும் (பிடி) உண்டு என்பதை கவனித்து நினைவில் நிறுத்த தக்கது.

## 2.2 சொல்வகை

நமது மரபு இலக்கணங்கள் தமிழ் சொற்களைப் பொதுவாக பெயர், வினை, இடை, உரி என நான்காக பிரித்துள்ளன. ஓரசைச்சொல், ஈரசைச் சொல் முதலிய பிரிவுகளும் உணர்த்த தக்கன.

### 2.2.1. பெயர்ச்சொல

கால இடைநிலைகளை ஏதானவாய் வேற்றுமை உருபுகளை ஏற்க வள்ளலனாய்த் திணை, பால், எண், இடம் முதலிய இலக்கண கூறுகளை உணர்த்துவனவாய் அமைவன பெயர் சொற்களாகும். எழுவாய், பயனிலை இயைபுகளின் அடிப்படையிலும் சுட்டுப் பெயர்களின் அடிப்படையிலும் பெயர்கள் ஐந்து வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு ஆண்பாற் பெயர் (அவன், மாணவன்) பெண்பாற் பெயர் (அவள், மாணவி) பலர்பாற்பெயர் (அவர்கள், மக்கள) ஒன்றன்பாற் பெயர் (அது, மரம்) பலவின்பாற் பெயர் (அவை, பழங்கள்)

இக்கால வழக்குக்கேற்ப உயர்பாற்பெயர் என்ற ஒரு பிரிவும் தேவைப்படுகிறது. உதாரணம் அவர், தலைவர், இங்கே கூறிய பிரிவை நாம் இலக்கணங்கள் பால் என்றும் கூறும். பால் என்பது வகை அல்லது பகுப்பு என்று பொருள்படும்.

இங்கே கூறிய பால் பகுப்போடு திணை பருப்பு வெற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆண், பெண், பலர் ஆகிய மூன்று பால்களையும் உயர்திணை என்பர். ஒன்று, பல ஆகிய இரு பால்களையும் அ்.றிணை என்பர். இப்பாகுபாட்டைப் படத்தில் பார்த்து நன்கு விளக்கிக் கொள்ளுங்கள். இவற்றோடு இக்காலத்தமிழில் உயர் பால் என்று பகுப்பு உருவாகி வளர்ந்துள்ளது.

மேற்கண்ட பாகுபாடு தொடரியல் அடிப்படையில் அமைந்தது பொருள் அடிப்படையில் பெயர்கள் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என அறுவகையாகப் பகுக்கப்படும்.

இவற்றோடு எண்ணுப்பெயர், இடப்பெயர் முதலாக பிரிவுகளும் உணர்ந்து கொள்ளத்தக்கன.

### 2.2.1.1. எண்ணுப்பெயர்

ஒன்று, இரண்டு முதலிய எண்களைக்குறிக்கும் பெயர்களை எண்ணுபெயர் என்பர்.

### 2.2.1.2 இடப்பெயர்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகைப்படும். பேசுவோரைக் குறிப்பது தன்மை கேட்போரைக் குறிப்பது முன்னிலை ஏனைய பெயர்கள் படர்க்கை.

பொருளடிப்படையில் அமைந்த அறுவகைப் பெயர்களில் காணும் இடப்பெயர் வேறு, இது வேறு என்பதை நினைவில் நிறுத்துக.

### 2.2.1.3 சுட்டுப்பெயர்

சுட்டிக்கூறப் பயன்பெறும் பெயர்கள் சுட்டுப் பெயர்களாம். இது அண்மைச்சுட்டு சேய்மைச்சுட்டு என இரு வகைப்படும். இவன், இவள், இவர், இவர்கள், இது, இவை ஆகிய அண்மைச்சுட்டு. அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை ஆகியன சேய்மைச்சுட்டு.

### 2.2.1.4. வினாப்பெயர்

வினவுதற்கு பயன்படும் பெயர் வினாப்பெயராம். இது பொது வினா, சிறப்பு வினா என இரண்டாகப் பிரிக்கப்படும். யார், என்ன என்பவற்றை பொதுவினா என்றும், எவன், எவள், எது, என்பவற்றை சிறப்பு வினா என்றும் கொள்ளலாம்.

### 2.2.1.5 பெயர்களின் இரு வகை வடிவங்கள்

பெயர்கள் எழுவாயாக நிற்கும் பொழுது உள்ள வடிவத்தை எழுவாய் வடிவம் என்றும் வேற்றுமை ஏற்கும் போது உள்ள வடிவத்தை வேற்றுமை ஏற்கும் வடிவம் என்றும் சுட்டலாம். சில பெயர்களுக்கு இவை வேறு வேராக அமையும்.

அவன் என்ற பெயருக்கு எழுவாய் வடிவமும் வேற்றுமை ஏற்கும் வடிவமும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அவன் வந்தான். அவனைக் கண்டேன் முதலிய தொடர்கள் நோக்கி இதனை உணர்க. ஆடு என்ற பெயருக்கு எழுவாய் வடிவம் வேறு வேற்றுமை ஏற்கும் வடிவம் வேறு. ஆடு வந்தது எனவும், ஆட்டை கண்டேன் எனவும் வரும் தொடர்களில் எழுவாய் வடிவமும் வேற்றுமை ஏற்கும் வடிவமும் வேறு வேறாக, இருப்பதனைக் கொண்டு இதனை இதை உணரலாம்.

நான் என்பது எழுவாய் வடிவம், என் என்பது வேற்றுமை ஏற்கும் வடிவம், நீ என்பது எழுவாய் வடிவம், உன் என்பது வேற்றுமை ஏற்கும் வடிவம்.

### 2.2.2 வினைச்சொல

கால இடைநிலைகளையும், பாலிட விகுதிகளையும் ஏற்க வல்லன வினைச் சொற்களாம். கால இடைநிலைகள் ஏற்பட தெரிநிலைவினை என்றும் கால இடைநிலைகளை ஏற்க இயலாதன குறிப்பு வினை என்றும் பெயர் பெறும்.

**எடுத்துக்காட்டு :**

படித்தான் (தெரிநிலை வினை)

நல்லன் (குறிப்புவினை)

தெரிந்து வினைகள் முற்றுவினை எச்ச வினை என இருவகைப்படும் குறிப்பு வினைகளில் சிலவற்றுக்கு எச்சவினை வடிவங்களும் உண்டு.

#### 2.2.2.1 முற்றுவினை :

கால இடைநிலைகளையும் பாலிட விகுதிகளையும் ஏற்று செய்தன செய்தான் செய்தால் முதலிய வாய்ப்பாட்டில் வருவனவும் எதிர்மறை இடைநிலைகளையும் பாலிட விகுதிகளையும் ஏற்றுச் செய்யான், செய்யமாட்டான் முதலியன வாய்ப்பாட்டில் வருவனவும் செய், செய்யும், செய்யுங்கள் எனவும், செய்யாதே, செய்யாதீர், செய்யாதீர்கள் எனவும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் ஏவல் வாய்ப்பாடுகளில் வருவனவும் செய்யலாம் செய்க முதலிய வாய்ப்பாடுகளில் வருவனவும் இவை முதலிய பெறவும் முற்று வினைகளாம்.

#### 2.2.2.2 எச்ச வினை :

பொருள் இயல்பு நோக்கில் வேறொரு சொல் என் ஜி நிற்க அமைவது எச்ச வினை எச்ச வினைகள் பெயரெச்சம் வினையெச்சம் என இரு வகைப்படும்.

##### 2.2.2.2.1 பெயரெச்சம்

பெயர்களைக் கொண்டு முடியும் வினையெச்சங்கள் பெயரெச்சம் என பெயர் பெற்றன இறந்தகால பெயரெச்சம் நிகழ்காலப் பெயரெச்சம் எதிர்கால பெயரெச்சம் எதிர்மறை பெயரெச்சம் என நான்கு வகைப்படும்.

**எடுத்துக்காட்டு :**

வந்த இறந்த கால பெயரெச்சம் வருகின்ற நிகழ் கால பெயரெச்சம் வரும் எதிர்கால பெயரெச்சம் செய்யாத எதிர்மறை பெயரெச்சம்

எதிர்மறை பெயரெச்சங்களில் தா என்ற இரு இல்லாமல் செய்யாம வாய்ப்பாட்டில் வரும் பெயரெச்சங்களை ஈறுகட்ட எதிர்மறை பெயரெச்சம் என்பர்.

### 2.2.2.2.2. வினையெச்சம்

வினைகளைக் கொண்டு முடியும் எச்ச வினைகளை வினையெச்சம் என்பர் வினையெச்சங்கள் கீழக்கண்டவாறு பிரிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு :**

செய்ய ஓட படிக்க நடக்க செய்து ஓடி படித்து, நடந்து, செய்தால், ஓடினால், படித்தால், நடந்தால், செய்யாமல், (ஓடாமல், படிக்காமல், நடக்காமல்) செய்யாமல் (ஓடாது, படிக்காது, நடக்காது )

### 2.2.2.3 வினைப்பெயர்

வினையடியாகப் பிறக்கும் பெயர்களை வினைத்தன்மை குன்றின, குன்றாதன என இருவகையாகப் பிரிக்கலாம். போக்கு, வரவு முதலிய பெயர்கள் வினைத்தன்மை குன்றியன. இவை பெயர் தன்மை மட்டுமே பெற்ற பேரடைகளை ஏற்றல், வேற்றுமை ஏற்றல், ஆகிய இயல்புகளுடன் வரும். போதல் வருதல், முதலிய பெயர்கள் வினைத்தன்மை குன்றாதன வாய் நான் போதல், நீ வருதல் என எழுவாய் ஏற்றல் போன்ற வினைத்தன்மையோடு போதனை வருதலை என வேற்றுமை ஏற்றல் முதலிய பெயர் தன்மையோடும் வருதல் காண்க வினைத்தன்மை குன்றாத பெயர்கள் மட்டுமே இங்கு வினைப்பெயர் என்று குறிக்கிறோம். தொழில் பெயர் என்பதும் இதுவே.

**எடுத்துக்காட்டு:**

படித்தல், நடத்தல், போதல், சாதல், வருதல், வரல், போவது, வருவது, போனமை, வந்தமை ஆகியன.

### 2.2.2.4. வினையலணையும் பெயர்

வினையடியாகப் பிறந்து கால இடைநிலை அல்லது எதிர்மறை இடைநிலையும் பாலிட விகுதிகளையும் ஏற்று வேற்றுமை ஏற்கும் இயல்போடு வரும் பெயர்களை வினையால் அணையும் பெயர்கள் என்பர். இவையும் வினைத்தன்மை குன்றாத பெயர்களே வந்தவன் என்ற வினையாலணையும் பெயர் இங்கு வேகமாக வந்தவன் என வினை அடைகளை ஏற்று வருதல் காண்க.

எடுத்துக்காட்டு: வந்தவன், வந்தவள், வந்தவர், வந்தவர்கள், வந்தது, வந்தவை ஆகியன.

### 2.2.2.5. குறிப்பு வினை

மேலே தெரிநிலை வினைகளுக்குக் கூறியவரே குறிப்பு வினைகளிலும் முற்றுவினை எச்ச வினை என்ற வகையில் உண்டு. நல்லன், இனியன் முதலான சொற்கள் குறிப்பு வினை. நல்ல, இனிய முதலியவை குறிப்புப் பெயரெச்சம் அன்றி, இன்றி முதலியவை குறிப்பு வினையெச்சம். நல்லவன், இனியவன் முதலியவை குறிப்பு வினையால் அணையும் பெயர்கள்.

### 2.2.3 இடைச்சொல்

அடிச்சொல்லாக நில்லாமல் அடிச்சொல்லோடு சேர்ந்து நின்று இலக்கண நோக்கில் செயல்படும் சொற்களும் உணர்ச்சி வெளிப்பாட்டுக் கிளவிகளும் இடைச்சொற்கள் எனறு பெயர் பெறும். அன்றியும் ஏய், அடேய் போன்ற விளிகளும் அன், இன் போன்ற சாரியைகளும் பல்வகை அசை நிலைகளும் அடைச்சொல் என்றே பெயர் பெறும்.

### 2.2.3.1.வேற்றுமை உறுபுகள்

ஒரு முற்றுத்தொடரில் நிற்க்கும் பெயரை எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் கருவியாகவும் இடமாகவும் இவ்வாறு பல வகையில் வேற்றுமைப்படுத்தும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்பர். தமிழில் உள்ள வேற்றுமைகளை எட்டு வகையாகப் பிரிப்பர். இவற்றுள் முதல் வேற்றுமைக்குத் தனியே ஒரு உருபு இல்லை. எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் எனலாம்.

வேற்றுமைகளின் பெயர்களும் உருபுகளும் தரப்பட்டுள்ளன. வேற்றுமைகள் உருபாலும் பொருளாலும் எண்ணு முறையாலும் பெயர் பெற்றிருப்பதை காணலாம்.

### 2.2.3.2.பின்னொட்டுகள், பின்னுருபுகள்

வேற்றுமை உருபுகளின் இலக்கணப்பணியை முன், பற்றி, இருந்து, உடைய, மீது முதலான சொற்கள் பெயர்களோடும் வுற்றுமை உருபுகளோடும் ஒட்டி நின்று இயற்றுவதுண்டு. இவை பின்னொட்டுகள் அல்லது பின்னுருபுகள் என்று பெயர் பெறும்.

***எடுத்துக்காட்டுகள்:***

எனக்குமுன், என்னைப்பற்றி, என்னுடைய, என்மீது

### 2.2.3.3 அடைகள்

நல்ல, தீய முதலிய சொற்களும் வந்த, சென்ற முதலிய சொற்களும் பெயர்கட்கு அடையாக வரும். வந்து, சென்று முதலிய எச்சங்களும் மெல்ல, விரைந்து முதலிய சொற்களும் வினைகளுக்கு அடைகளாக வரும். இவ்வாறு பெயர்களையும் வினைகளையும் கொண்டு முடியும் சொற்கள் பொதுவாக அடைகள் என்று பெயர் பெறும். பெயர் கொண்டு முடிவன பெயரடைகள் என்றும் வினை கொண்டு முடிவான வினையடைகள் என்றும் குறிக்கப்படும்.

எடுத்துக்காட்டு, அழகான மலர் கோபமாக வந்தான்.

### 2.2.4.அசைமுறை வகைப்பாடு

சொற்களை ஓரசைச்சொல், ஈரசைச்சொல் என்றும், நேரசைச்சொல், நிரையசைச்சொல் என்றும், நெடிலீற்று நிரையசைச்சொல், குறிலீற்று நிரையசைச்சொல் என்றும் சாந்தி இலக்கணத்தில் சுட்டிக்கூறவேண்டிய தேவை ஏற்படக்கூடும்.

ஓரசைச்சொல் (பூ, மலர்) ஈரசைச் சொல் (நாடு, பாட்டு, பழகு) நேரசை சொல் (பூ, பால்) நிரையசைச்சொல் (மலர், பல, பலா) நெடிலீற்று நிரையசைச்சொல் (பலா, நிலா) குறிலீற்று நிரையசைச்சொல் (பல, தெரு)

## 2.2.5 மேலும் சில சொல்வகை

மேலே கொண்ட வகைப்பாடுகளோடு, தனிச்சொல், கூட்டுச்சொல், வேர்ச்சொல், அடிச்சொல், செம்மொழிச்சொல், பிறமொழிச்சொல், தற்சூட்டுக் கிழவிகள் முதலிய வகைப்பாட்டுக் குறியீடுகளையும் இங்கே நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### 2.2.5.1 தனிச்சொல்

நீ, நான் எனவும் போ, வா எனவும் நல்ல, தீய எனவும் வரும் சொற்களை தனிச்சொற்கள் எனலாம். ஒரு வேர்ச்சொல் தனித்தோ அல்லது ஒன்றும் பலவுமாய் விகுதிகள் அல்லது ஒட்டுக்களுடனோ வருதல் தனிச்சொல் எனப்படும்.

### 2.2.5.2 சுட்டுச்சொல்

இயல்பாகவோ திரிந்தோ ஒன்றுக்கு மேற்பட்ட வேர்ச்சொற்கள் சேர்ந்து அமையும் சொல் ஒரு சொல் போல வரும்போது அதை கூட்டுச்சொல் எனலாம்.

**எடுத்துக்காட்டு**

கண்டுபிடி, பகுத்தறிவு

### 2.2.5.3 வேர்ச்சொல்

பகுப்பாய்வு முறையில் பிரிக்க முடியாத நிலையில் உள்ள சொல் வேர்ச்சொல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

கல்,நெல்,செல், நில்

### 2.5.4 அடிச்சொல்

விகுதிகள் சேர இடங்கொடுத்து நிற்பவனவெலல்லாம் அடிச்சொற்கள் எனலாம். வேர்ச்சொற்களெல்லாம் அடிச்சொற்களாக வரும். அடிச்சொற்களெல்லாம் வேற்சொற்களாகாது. நிலையம் என்பதில் அம் என்ற விகுதி நிலை என்ற அடிச்சொல்லோடு சேர்க்கப்பட்டுள்ளது. கோலை என்பதில் “ஐ” என்ற விகுதி கொல் என்ற அடிச்செல்லோடு சேர்க்கப்பட்டது. கொல் என்ற வேர்ச்சொல் இங்கு அடிச்சொல்லாகவும் அமைந்துள்ளது. கொல் என்பது மேலும் பிரிக்க இடந்தராமையால் வேர்ச்சொல்லாகும்.

### 2.2.5.5 செம்மொழிச்சொல்

பிற மொழிகளில் இருந்து கடன் பெறாமல் ஒரு மொழி தானே உருவாக்கிய சொல்லை செம்மொழிச் சொல் என்று குறிப்போம். பிற மொழிகளில் இருந்து வந்து செம்மொழி நிலையை எய்திய சொற்களை செம்மொழி மயமான சொற்கள் என்று குறிப்போம்.

நிலம், தலை, கை, கால் முதலானவை செம்மொழிச் சொற்கள், கன்னம், தனம், தானம் முதலியவை செம்மொழி மயமான சொற்கள் எனலாம்.

### 2.2.5.6 பிறமொழிச்சொல்

பிற மொழிகளிலிருந்து தேவையை முன்னிட்டுக் கடன் கொண்ட சொற்கள் பிற மொழிச்சொற்கள் என்ற வகையில் அடங்கும்.டாக்டர், ரயில், லாரி, முதலானவை பிறமொழிச் சொற்களுககுச் சில எடுத்துக்காட்டுகள்.

### 2.2.6. பகுபத உறுப்புகள்

சொற்களை பொதுவாக பகுபதம், பகாபதம் என்று பிரிப்பர். பிரிக்க இடம் தராத பதம் பகாபதம் என்றும், பிரிக்க இடம் தரும் பதம் பகுபதம் என்றும், பெயர்பெறும். பகுபதங்களில் பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் முதலிய உறுப்புகள் அமைந்திருக்கும்.

### 2.2.6.1. பகுதி

ஒரு சொல்லிலுள்ள பகாபதமே பகுதி என்று பெயர் பெறும். நடந்தான் என்பதில் நட என்பது பகுதி.

### 2.2.6.2. விகுதி

பகுதியோடு சேர்ந்து வலப்பக்கம் நிற்க வல்ல கிளவிகளை விகுதி என்பர்.

சொல் (பகுதி விகுதி)

நல்ல (நல்: அ)

ஓடி (ஓடு இ)

### 2.2.6.3 இடைநிலை

காலங் காட்டவும் எதிர்மறை உணர்த்தவும், இடையில் கிளவிகள் இடைநிலைகளாம்.

எடுத்துக்காட்டு. நடக்கிறான்

### 2.2.6.4 சாரியை

தனக்கெனத் தனிப்பொருளின்றிச் சொற்களை உருவாக்கத்தக்க வகையில் சார்ந்து இயைந்து நிற்பது சாரியையாம்.

எடுத்துக்காட்டு: நடந்தனன், அன்ஊரினன்.

### 2.2.6.5.சந்தி

பகுதியும், கால இடைநிலையும் சந்திக்கும் வகையில் அமைந்தது சந்தி

எடுத்துக்காட்டுகள்:

கொடுத்தான் (கொடு த் த் ஆன்)

தடுத்தான் (தடு த் த் ஆன்)

இங்கு பகுதியை அடுத்துள்ள தகர ஒற்றைச் சந்தி என்பர்.

### 2.2.6.6. விகாரம்

சந்தி எழுத்துகள் சில சொற்களில் விகாரப்படுவதும் உண்டு. இதை விகாரம் என்பர்.

எடுத்துக்காட்டு:

நட + த் + த் + ஆன் என்பது நடந்தான் என்று ஆகும்போது த் என்பது ந் ஆகி விகாரப்பட்டது.

### 2.2.7 தற்சுட்டுக்கிளவிகள்

ஐ,ஔ என்பன ஐ,ஔ என்ற எழுத்துககள் என்ற பொருளிலும், புளி என்பது புளி என்ற சொல் பொருளிலும் வரும்போது அவை ஒவ்வொன்றும் தன்னையே சுட்டி நிற்பதால் தற்சுட்டுக் கிளவிகள் எனப்பெயர் பெறும்.

மூன்றாவதாக, மொழியில் வழிவழியாகக் காட்டப்பட்ட மரபு காக்கப்படுவதற்குச் சந்தி உதவிபுரிகிறது.

### 10. நிறுத்தக்குறி பயன்பாடு:

நிறுத்தக்குறிகள் பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்திப்பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும் கருத்துத் தெளிவு துலங்கவும், படிப்பவரின் அக்கறையை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படும் குறிகளாகும். பரவலாகப் பயன்பாட்டில் உள்ள நிறுத்தக்குறிகள் பின்வருன:

கால் புள்ளி (தமிழ் நடை) (,)

அரைப்புள்ளி (தமிழ் நடை) (“)

முக்கால் புள்ளி (தமிழ் நடை) (:)

முற்றுப்புள்ளி (தமிழ் நடை) (.)

புள்ளி (தமிழ் நடை) (.)

முப்புள்ளி(தமிழ் நடை) (...)

கேள்விக்குறி (தமிழ் நடை) (?)

உணர்ச்சிக்குறி (தமிழ் நடை) (!)

இரட்டை மேற்கோள் குறி (தமிழ் நடை) (" ")

ஒற்றை மேற்கோள் குறி (தமிழ் நடை) (' ')

தனி மேற்கோள் குறி (தமிழ் நடை) (")

மேற்படிக்குறி (தமிழ் நடை) (")

பிறையடைப்பு (தமிழ் நடை) ( () )

சதுர அடைப்பு (தமிழ் நடை) (ஜஸ)

இணைப்பு கோடு இணைப்பு கோடு (தமிழ் நடை) (-)

இடைக்கோடுத (தமிழ் நடை) (-)

சாய் கோடு (தமிழ் நடை) (∴)

அடிக்கோடு (தமிழ் நடை) (ூ)

உடுக்குறி (தமிழ் நடை) (*)

**தொகுப்புரை**

தமிழின் எழுத்துகளின் பாகுப்பாடுகளை அறிந்துகொண்டு வலி மிகுதல் மற்றும் மிகாத விதிகளை அறிந்துகொள்வதன் மூலம் மொழித்திறனை வளர்த்துக்கொள்ள முடியும்

விகுதி மற்றும் சந்தி விதிகளை அறிந்துகொள்வதன் அவசியம் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இலக்கியம் மொத்தம் எத்தனை பிரிவுகளைக் கொண்டுள்ளது?

அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

2.தமிழ் மொழி தோன்றிய ஆண்டு யாது?

அ) 1000 ஆ)2000 இ) 3000 ஈ) 4000

3.மனித உணர்ச்சியையும் சிந்தனையையும் வெளிப்படுத்துவது எது?

அ) அகத்தூண்டுதல் ஆ) புறத்தூண்டுதல் இ) இலக்கியம் ஈ) இலக்கணம்

4.தனி உருப்புகள் அல்லது தனிச்சொற்கள் சேர்ந்து வருவது """"""" எனப்படும்.

அ) புறச்சந்தி ஆ) சின்னத்திரை இ) ஆரம்பத்தில் ஈ) அல்வழிச்சந்தி

5.சந்தி மொத்தம் எத்தனை வகைப்படும்?

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.அகச்சந்தி புறச்சந்தி பற்றி விவரி.

2.வேற்றுமை புணர்ச்சியில் வல்லினம் மிகும் இடங்களை பற்றி எழுதுக.

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. வல்லினம் மிகும் இடங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் தருக.

**பார்வை நூல்கள்**

1. தமிழ் நடைக் கையேடு, 2001, பா. ரா. சுப்பிரமணியன் வ. ஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்) மொழி வெளியீடு, சென்னை
2. தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம், 2003. பொற்கோ, பூம்பொழில் வெளியீடு, சென்னை
3. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? 2000, அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை
4. மொழிப்பயன்பாடு, 2004, கா. பட்டபிராமன், நியூ செஞ்சுரி புக்அவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை
5. தவறின்றித் தமிழில் எழுத?, 2004 மருதூர் அரங்கராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை

**இணைய இணைப்புகள்**

1. Tamil Heritage Foundation – www. Tamilheritage.org http://www.tamilheritage.org
2. Projrct Madurai – www.projectmadurai.org
3. Tamil E – Books Downlaods – tamilebooksdownloads.blogspot
4. Tamil Books on line – books.tamil cube.com

# அலகு 2

## அலகின் நோக்கம் :

- மாணவர்கள் இலக்கணப் பிழையின்றிப் பேசுதல், எழுதுதல்
- சொற்களைச் சேர்த்து மற்றும் பிரித்து எழுதும் முறையினை அறிந்திருத்தல்
- நிறுத்தற்குறிகளின் பயன்பாடுகளை அறிந்து கொள்ளுதல்

## அலகில் இடம்பெறுபவை

நிறுத்தற்க்குறிகள் பயன்பாடு – சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறைகள் - பேச்சும் கால இடைவெளியும் நிறுத்தற்குறிகளும் - நிறுத்தற்குறிகளும் - காற்புள்ளி – அரைப்புள்ளி – முக்காற்புள்ளி – புள்ளி – முப்புள்ளி – கேள்விக்குறி – உணர்ச்சிக்குறி - இரட்டை ஒற்றை மேற்கோல் குறிகள் - மேற்படிக்குறி – அடைப்புக்குறிகள் - பிறை அடைப்பு – சதுர அடைப்பு - இணைப்புக்கோடு - இணைப்பு சிறுகோடுகள் - சாய்கோடு – அடிக்கோடு – உடுக்குறி

### 2.1 நிறுத்தக் குறியீடு பயன்பாடு

நல்ல தமிழில் எழுத விரும்புவோர் அதற்கேற்ற தமிழ் நடிகை கையாள வேண்டும் . மொழி நடை என்பது ஒழுங்கான அமைப்பில் எழுதுவதற்கான நெறிமுறையை குறிக்கும்

.

இத்தகைய நெறிமுறையில் நிறுத்தக்குறிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. .பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்தி பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும்,கருத்துத் தெளிவு துலங்கவும், படிப்பவரின் அக்கறையை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படும் குறிகளாகும்.

நிறுத்தக்குறிகளுள் புள்ளி என்பது அடிப்படையானது. .அது கால் புள்ளி, அரைப்புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப்புள்ளி, முப்புள்ளி, புள்ளி என்று வேறுபடுத்தப்பட்டு எழுத்தில் கையாளப்படுகிறது.

கருத்துக்களை வெளிப்படுத்தவும் விளக்கவும் எழுதும் பொழுது பல்வேறு குறிகளைப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு குறிகள் இடுவதை நிறுத்தக் குறியீடு என்று கூறுகின்றோம். இந்த நிறுத்த குறியீடுகள் சொற்கள் பிரித்து காட்டவும் பொருளை தெளிவாக புரிந்து கொள்வும் பெரிதும் உதவுவனாக உள்ளன. படிப்ப வருடைய கவனத்தை ஈர்ப்பதற்கும் நிறுத்தக்குறிகள் மிகவும் பயன்படுகின்றன.

இப்படி இடம்பெறும் குறியீடுகள் பற்றி பலருக்குத் தெரியும் என்றாலும், இக்குறிகளை பயன்படுத்துவதற்கென பின்பற்றப்படும் வகை முறைகளை அறிந்து, அதன்படி பயன்படுத்துகிறார்கள் என்பன ஐயப்பாடே!

### 2.1.1 பண்டைக் குறியீடுகள்

பண்டைய காலத்தில் ஏடுகளில் எழுதும் பொழுதும் கல்வெட்டுகளிலும் ஒரு பாடல் அல்லது உரைநடை பகுதி எழுதி முடிந்ததும், அது முடித்தமைக்கு அடையாளமாக, அதன் இறுதியில் “ சுழிதம் “ (0) அல்லது(∴) என்று இரண்டு கோடுகளில் இடுதல் அல்லது(∴) என்று ஒரு கோடு இடுதல் என்னும் வழக்கம் இருந்துள்ளது

## 2.2 பேச்சும் கால இடைவெளியும் நிறுத்தக்குறிகளும்

ஐரோப்பியர்களே பல்வேறு நிறுத்தக்குறியீடுகளை நமக்கு அறிமுகப்படுத்தி வெவ்வேறு இடங்களில் குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும் என விளக்கினர். நிறுத்த குறியீடுகளைப் பயன்படுத்தி தமிழ்மொழி இலக்கணத்திற்குக் கேடு நிகழாவாறு பார்த்துக்கொள்ள வேண்டுவதும் இன்றியமையாத ஆகும். பரவலாக பயன்படுத்தப்படும் பல்வேறு நிறுத்தக் குறிகளான.

1.காற்புள்ளி -( ,)
2.அரைப்புள்ளி(“)
3.முக்காற்புள்ளி (:)
4.முற்றுப்புள்ளி (.)
5.புள்ளி( .)
6.முப்புள்ளி (.)
7.வினாக்குறி (?)
8.உணர்ச்சிக் குறி (!)
9.ஒற்றைக் மேற்கோள் புள்ளி(“ “)
10.இரட்டை மேற்கோள் குறி(” ”)
11.மேற்படிக்குறி
12.அடைப்புக்குறிகள்()
13. பிறையடைப்பு
14.சதுரஅடைப்பு
15.சிறுகோடு -(-)
16.சாய் கோடு (∴)
17.அடிக்கோடு(-)

## 2.3. சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறைகள்

**ஆர்வமூட்டல்**

கால்நடை என்னும் சொல்லை சேர்த்தும், பிரித்தும் எழுதுவதால் இரு வேறு பொருட்கள் தரும் சொல்லாக அமைந்திருப்பதை காண முடிகிறதா? என வினா எழுப்பி ஆர்வமூட்டல்.

தமிழ் சொற்கள் சிலவற்றைச் சேர்த்தும், பிரித்தும் எழுதும்போது இரு வேறு பொருட்கள் தரும் தொடர்களாக உள்ளன. அவ்வகைச் சொற்களைத் தெரிந்து கொள்வதன் மூலம் நம் மொழி வளம் பெருகும்.

**சான்று: கானடை**

கான் அடை என்று பிரித்தால் காட்டைச் சேர்த்தல் என்னும் பொருள் தருகிறது.
கான் + நடை என்னும் போது காட்டுக்கு நடத்தல் என்னும் பொருள் கிடைக்கிறது
கால் நடை என்றானால் காலால் நடத்தல் என்று பொருள் தருகிறது.

**பிண்ணாக்கு:**

கடலை, எள் போன்றவற்றை அரைத்து எண்ணெய் எடுத்த பின் கிடைக்கும்.
பாம்பு தன் பின் நாக்கை நீட்டியது.

**பலகையொலி:**

பல கைகள் சேர்ந்து தட்டுவதால் பிறக்கும் ஒலி
பலகை ஒலி- மரப்பலகையின் சத்தம்
அறிவில்லாதவன் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல்
வைகை இரண்டு தொடராக எழுதிப் பழகுதல்.
நஞ்சிருக்கும் -பிரித்தும் சேர்த்தும் எழுதி பயிற்சி பெற செய்தல்.

**மதிப்பீடு**:

1. தங்கை - பிரித்தும் சேர்த்தும் எழுதுக.
   தன்கை - தனது கை
   தங்கை- உடன் பிறந்த தங்கை

2. எட்டுவரை, எள்துவரை- விளக்குக
   எட்டுவரை -எட்டு என்ற எண் (8) வரை
   எள்துவரை-எள் மற்றும் துவரை ஆகிய தானியங்கள்.

## 2.3. நிறுத்தக்குறிகள்

### 2.3.1 காற்புள்ளி :

பொருள்களை என்னும் இடங்களிலும், வெளி முன்னும், வினையெச்சங்களுக்குப் பின்னும், மேற்கோள் குறிக்கும் முன்னும், ஆதலால் ஆகவே ஆயினும் முதலிய சொற்களுக்குப் பின்னும், முகவரியில் இறுதி வரைக்கும் முன்னைய வரிகளில் இறுதியிலும் இடம்பெறுகின்றது. காற்புள்ளி என்பது நிறுத்தக்குறிகள் ஒன்றாகும் இக்குறி, பேச்சின் மொழிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும், கருத்து தெளிவுத் தொடங்கவும் படிப்பவரின் அக்கறை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படுத்தப்படுகிறது

எழுத்தில் கருத்துகளை வெளிப்படுத்தும்போது மிகக் குறைந்த அளவு கால இடைவெளியைக் குறிக்க கால் புள்ளி பயன்படுகிறது. கால் புள்ளி இட வேண்டிய இடங்கள் எடுத்துக்காட்டுகளுடன் கீழே தரப்படுகின்றன.

1 ஒரே எழுவாய் கொண்டு அடுக்கி வரும் முற்றுவினைகளுக்கு…

2. ஒரே பெயரைத் தழுவும் சொற்களுக்கு இடையிலும் தொடர்களுக்கு இடையிலும் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: இனிமையான, பொருள் பொதிந்த, நெஞ்சை அள்ளும் பாடல் ஒன்று காற்றில் மிதந்து வந்தது.

3. ஒரே வினையைத் தழுவும் சொற்களுக்கு இடையிலும் தொடர்களுக்கு இடையிலும் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: அந்தப் பாடல் இனிமையாக, உள்ளதற்கு நிறைவளிப்பதாக, கடந்த காலத்தை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது.

4. தொடர்பு படுத்தி கூறப்படும் சொற்களுக்கு இடையிலும் தொடர்களுக்கு இடையிலும் எண்களுக்கு இடையிலும் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: தந்தை, மகன் இருவர் முகத்திலும் மலர்ச்சி.

5. ஒரே சொல் அல்லது (மரபுத் தொடர் அல்லாத) தொடர் இருமுறை அடுக்கி வரும்போது அவற்றுக்கு இடையில் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: அவள் வருவாள், வருவாள் என நான் எதிர்பார்த்திருந்தேன்.

6. ஒரு வாக்கியத்தை அதன் முன் உள்ள வாக்கியத்துடன் தொடர்புபடுத்தும் சொற்களையும் தொடர்புப்படுத்தும் அடுத்து கார்புள்ளி இடுவது முறை.

எ.கா: அவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளர். ஆனால், அவரால் மேடைகளில் சிறப்பாக பேச முடியாது.

7. வாக்கியத்தின் தொடக்கத்தில் வாக்கியத்திற்கு வினையடையாக வரும் சொற்களையும் தொடர்களையும் அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: பொதுவாக, அவர் அரசியலில் ஈடுபடுவதில்லை.

8. அதாவது, குறிப்பாக, என்னும் சொற்க்களை கொண்ட தொடருக்கு முன்னும் பின்னும் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், சிறந்த உழைப்பாளிகள்.

9. அழுத்தத்திற்காக வரிசை முறை மாற்றி எழுதப்படும் தொடர்களக்கு இடையில் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: அறையில் மண்டிகிடந்தது இருள்.

10. ஒரு முழுமையான சுற்று வாக்கியத்தைத் தொடர்ந்து வரும் இல்லையா, அல்லவா போன்ற சொற்களுக்கு முன் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: ஆசிரியர் கொஞ்சம் கடுமையாக பேசி விட்டார், இல்லையா?

11. ஒரே வாக்கியத்தில் அடுக்கி வரும் வினா தொடர்களுக்கு இடையில் காற்புள்ளி இடுவது முறை. எ.கா: உங்களுக்கு என்ன வேண்டும் இனிப்பா, காரமா?

12. ஒரே வாக்கியத்தில் அடுத்தடுத்து வரும் ஏவல் வினைகளுக்கு இடையில் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா : அவரை தடுக்காதே, போகவிடு.

13. எழுவாயைக்கும் பயனிலைக்கும் இடையில் தொடர் வரும்பொழுது எழுவாயை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: தங்கையின் திருமணம், வருகிற பத்தாம் தேதி நடைபெறுகிறது.

14. விடையளிக்கும் போது விடையின் ஒரு பகுதியாக வரும் வினாவை அடுத்து கார் புள்ளியிடுவது முறை.

எ.கா: இது என்ன? இதுவா, இது ஒரு புதுமாதிரிப் வினா.

15. உணர்ச்சியைத் தெரிவிக்கும் வாக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சியைக் குறிக்கும் சொல்லை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: ஐயோ, வலி தாங்க முடியவில்லையே!

16. வாக்கியத்தின் தொடக்கத்தில் வரும் ஆமாம், இல்லை, ஓ, ஓகோ போன்ற சொற்களை அடுத்து காற்புள்ளி இடுவது இடுவது முறை.

எ.கா: ஆமாம், அவர் நேற்றே வந்துவிட்டார்.

17. இரு வினாக்களுக்கு இடையில் வரும் இல்லை என்று சொல்லை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: இது படகா, இல்லை, மிதக்கும் வீடா?

18. விளிக்கும் சொற்களை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: தம்பி, இங்கே வா.

19. கடிதத்தில் இடம்பெறும் விளிக்கும் சொல் அல்லது தொடர், முடிக்கும் சொல் அல்லது தொடர் ஆகியவற்றை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: ஐயா, தங்கள் வழங்கிய நன்கொடையை பெற்றுக் கொண்டோம். இப்படிக்கு, மா கிள்ளிவளவன்.

20. முகவரியை கிடைக்கை வரிசையில் தரும்போது பெயர், பதவி, நிறுவனம், வீட்டு என், தெரு போன்ற விவரங்கள் ஒவ்வொன்றையும் அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: முனைவர் இளங்குமரன், தமிழ்த் துறை, கலைவாணர் கல்லூரி, கன்னியாகுமரி.

21. தலைப்பு எழுத்தைப் பெயருக்குப் பின்னால் பயன்படுத்தும்போது பெயரை அடுத்து காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: வரதராசனார்.மு.

22. பட்டங்களைக் குறிக்கும் சுருக்க குறியீடுகளுக்கு இடையில் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: முனைவர் கா.இளங்கோவன், எம்.ஏ., டி. லிட்.

23. மாதத்தின் பெயரைத் தொடர்ந்து வரும் தேதிக்கும் ஆண்டுக்கும் இடையில் காற்புள்ளி இடுவது முறை.

எ.கா: நவம்பர் 14, 1958.

24. சொற்களை தனித்தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்கும் போது காப்புள்ளி இடவேண்டும். எ.கா: தனித்தனியாக பிரித்தல்: அறம், பொருள் , இன்பம், வீடு என்பன உறுதிப்பொருள் ஆகும்.

அடுக்கடுக்காக பிரித்தல்: நட்புக்கு குகனும், பரதனும், பிசிராந்தையாகும், கோப்பெருஞ்சோலமும், உதயனும் யூகியும் சிறந்த எடுத்து க்காட்டுகளாக கூறலாம்.

25. சொற்றொடரில், எழுவாய் ஒன்றாக நின்று, பல பயனிலைகளைப் பெற்று வரும்போது, இறுதிப் பயனிலை தவிர பிறவற்றிக்குப்பின் காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: கணவன் கொலை செய்யப்பட்டான் என்று கேட்ட கண்ணகி பொங்கி எழுந்தாள், விம்மினாள், அரற்றினாள், ஏங்கினாள், கலங்கினாள், மயங்கினாள், விழுந்தாள்.

26. பொருள் மயக்கம் நீக்கித் தெளிவுபடுத்தி வேண்டிய இடத்தில் காற்புள்ளி இடவேண்டும். எ.கா: அண்ணன், தம்பி வீட்டுக்குச் சென்றதால் நான் பார்க்கவில்லை.

27. கல்வி, அறமும், பொருளும், இன்பமும், வீடும், நல்கும் - என்னும் சொற்றொடரில் எண்ணுமைகளுக்குப் பின் காற்புள்ளி இடுதல் தவறு. பெரிய சொற்றொடர்கள் இணைக்கப்படும் பொழுது எண்ணும்மை இருப்பினும் தெளிவாக்காகக் காற்புள்ளி இட வேண்டும்.

எ.கா: குறிஞ்சிக் காட்சிகளைக் கூறுவதில் வல்லவராகிய கபிலரும், வரலாற்றுக் குறிப்புகளை வழங்குவதில் சிறந்தவராகிய பரணரும், பத்துப்பாட்டில் இரண்டு பாடல்களை இயற்றியவராகிய நக்கீரரும் கடைச்சங்க புலவர்கள்.

“உம்” இடைச்சொற்கள் நெருங்கி வரும் இடங்களில் காற்புள்ளி இட வேண்டியதில்லை. அவை ஒன்றற்கொன்று தொலைவில் அமைந்திருக்குமாயின் காற்புள்ளி இடவேண்டும் என்பதை மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன.

### 2.3.2. கால்புள்ளி தேவை இல்லாத இடங்கள்:

1. தேதியைப் பின்வரும் முறைகளில் குறிப்பிடும்போது கால்புள்ளி தேவை இல்லை.

எ.கா: 25 மார்ச்சு 1978

1978 மார்ச்சு 25

2. முகவரியைப் பின்வரும் முறையில் எழுதும்போது கால்புள்ளி தேவை இல்லை.

எ.கா: உமா அச்சகம்

### 2.3.2 அரைப்புள்ளி

எழுத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும் போது கால்புள்ளி குறிக்கின்ற இடைவெளியை விட சற்றே மிகுந்த அளவு இடைவெளியைக் குறிக்க அரைப்புள்ளி பயன்படுகிறது.

#### 2.3.2.1 அரைப்புள்ளி இட வேண்டிய இடங்கள்:

1. ஒரு குறிப்பிட்ட கருத்தை மையமாகக் கொண்ட முற்றுத்தொடர்களுக்கு இடையில் அரைப்புள்ளி இடுவது முறை.

எ.கா: புயற்காற்று வீசியதும் மரங்கள் சாய்ந்தன் ஓலை கூரைகள் பறந்தன மண் சுவர்கள் இடிந்து விழுந்தன.

2. காரணத்தையும் விளைவுகளையும் குறித்து வரும் முற்றுத்தொடர்களுக்கு இடையில் அரைப்புள்ளி இடுவது முறை.

எ.கா: காந்தி சொன்னார் கதர் அணிந்தோம்

3. ஒப்புமைப்படுத்துதல், மாறுபட்ட நிலைகளை இணைத்துக் காட்டுதல் என்னும் பொருட்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட முற்றுத் தொடர்களுக்கு இடையில் அரைப்புள்ளி இடுவது முறை.

எ.கா: அறிஞர்கள் அடக்கமாக இருப்பார்கள் மூடர்கள் ஆரவாரம் செய்வார்கள்.

4. ஒரு தொகுப்பு ஒன்றுக்கு மேற்பட்ட விவரங்களைக் கொண்டிருக்கும் போது தொகுப்புகளுக்கு இடையில் அரைப்புள்ளி இடுவது முறை.

எ.கா: பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டவர்கள்: செல்வி, மதுரை அமுதன், குளத்தூர் அறவாணன், திருவையாறு கண்ணகி, பூம்புகார்.

5. ஒரே எழுவாயில் பல பயனிலைகள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், எழுவாய்க்குரிய உடன்பாட்டு கருத்தும் எதிர்மறை கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

எ.கா: பலர் வயிற்றளவை மீறி உண்பர் பசியாலும் உண்பர் கிடைத்தபோதெல்லாம் உண்பர் நாவிற்காக உண்பர் வயிறு கெட்டும் உண்பர்.

எ.கா: கண்ணன் தேர்வு எழுதினான் ஆனால் அதில் தேரவில்லை.

6. காரணம் கட்டும் ஏனென்றால் என்பதற்கு முன் அரைப்புள்ளி இட வேண்டும்.

எ.கா: நான் இன்று பேசமாட்டேன் ஏனென்றால், என் தொண்டை நோயுற்றிருக்கிறது.

### 2.3.3. முக்காற்புள்ளி :

உள் தலைப்பு அமைக்கும் போதும், ஒருவர் கூற்றை விளக்குமிடத்தும், சொற்றொடரில் கூறியதொன்றை விரித்து கூறும்போது முக்காற்புள்ளி இடப்படுகின்றது.

எழுத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும்போது அரைப்புள்ளி குறிக்கின்ற இடைவெளியை விட மேலும் சற்று மிகுந்த அளவு இடைவெளியைக் குறிக்க முக்கால்புள்ளி பயன்படுகிறது. ஒரு வாக்கியத்தில் சம முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வேறுபடுத்திக் காட்ட அரைப்புள்ளி பயன்படுகிறது என்றால், முக்கால்புள்ளி ஒரு சொற்றொடரைத் தொடர்ந்து வரும் பகுதி அச்சொற்றொடரின் கருத்தை மேலும் விரிவாக்கி, தெளிவுபடுத்தி, விளக்கியுரைப்பதைக் குறிக்கின்றது.

**2.3.3.1 முக்கால்புள்ளி இட வேண்டிய இடங்கள்:**

1. செய்தியை அறிமுகப்படுத்தும் என்னவென்றால் போன்ற சொற்கள் இல்லாத போது முக்கால்புள்ளி விடுவது முறை.

எ.கா: தலைவரைச் சந்தித்ததும் எல்லோரும் கேட்ட கேள்வி: அடுத்த கூட்டம் எப்போது?

2. தலைப்பு போல் பொதுவாக கூறப்பட்டதற்கும் அதன் விரிவாகக் கூறப்பட்ட விவரங்களுக்கும் இடையில் முக்கால்புள்ளி இடுவது முறை.

எ.கா: நல்ல தமிழில் எழுத வேண்டும் என்றால் நாம் அறிய வேண்டியவை: இலக்கணம், இலக்கியம், மொழிநடை.

3. வரையறையை அல்லது விளக்கத்தை அறிமுகப்படுத்தும் என்பது, என்றால் போன்ற சொற்கள் இல்லாத போது முக்கால் புள்ளி இடுவது முறை.

எ.கா: சான்றோர்: அறிவில் சிறந்தோர்.

4. கூற்றையும் அறிமுகப்படுத்தும் கூறியதாவது போன்ற சொற்கள் இல்லாத போது முக்கால்புள்ளி இடுதல் முறை.

எ.கா: ஆசிரியர்: மூவேந்தர் யார்?
மாணவர்: சேர சோழ பாண்டியர்.

5. விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்கால்புள்ளி இடுவது முறை.

எ.கா: பெயர்: வைரமுத்து. ஊர்: திருவண்ணாமலை

6. ஒருவரை அவருடைய செயல்பாட்டோடு அல்லது செயல்பாட்டுக்கு உரியதோடு தொடர்புபடுத்த முகால்புள்ளி இடுவது முறை.

எ.கா: இயக்கம்: மணியன், இசை: பாணன்

7. நாளேட்டுத் தலைப்புச் செய்திகளில் தலைப்பை முதன்மைப்படுத்திக் கூறும்போது அந்தத் தலைப்புக்கும் அதனோடு தொடர்புடைய நபர், நிறுவனம் போன்றவற்றுக்கும் இடையில் முகால்புள்ளி இடுவது முறை.

எ.கா: வரலாறு காணா நிலநடுக்கம் : ஈரானில் பத்தாயிரம் பேர் பலி

8. நாளோடுத் தலைப்புச் செய்திகளில் இடத்தையும் நிகழ்ச்சியையும் தொடர்புப்படுத்தும்போது அவற்றுக்கு இடையில் முகால்புள்ளி இடுவது முறை.

எ.கா: சென்னை: தமிழ்ப் புத்தகக் கண்காட்சி

9 விவிலிய நூலிலிருந்து மேற்கோள் காட்டும் போது அல்லது அவற்றை அடிக்குறிப்பில் இடும்போது அதிகாரம் வசனம் எனப் பிரிப்பதற்கு முகால்புள்ளி இடுவது முறை.

எ.கா: இயேசு, விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே என்றார்.

10. நேரம் குறிப்பிடும்போது இத்தனை மணிக்கு என்று கூற மணிக்கும் மணித்துளிக்கும் இடையே முகால்புள்ளி இடுவது முறை.

எ.கா: காலை 10:30-க்கு நாங்கள் வந்து சேர்ந்தோம்.

பேருந்து மாலை 6:45க்குப் புறப்பட இருக்கின்றது.

**2..3.4. முற்றுப்புள்ளி:**

ஒரு சொற்றொடர் அல்லது வாக்கியம் முடிவுற்றது என்பதைக் குறிக்க முற்றுப்புள்ளி பயன்படுகிறது.

**2.3.4.1. முற்றுப்புள்ளி இட வேண்டிய இடங்கள்:**

1. கூற்று வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடுவது முறை.

எ.கா: தமிழ் இலக்கியம் கடந்த இரு நூற்றாண்டுகளில் விரைவாக வளர்ச்சியடைந்தது.

2. ஏவல் வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடுவது முறை.

எ.கா: விளக்கம் அறிய இருபதாம் பக்கம் புரட்டுக.

3. மேற்கோள் பெற்றுவரும் வாக்கியத்தின் இறுதியில் மேற்கோளகுறிக்கு முன் முற்றுப்புள்ளி விடுவது முறை.

எ.கா: “செய்வினைத் திருந்தச் செய்க.”

4. கிடக்கை வரிசையில் அமைக்கும் பட்டியலில் இறுதியில் முற்றுப்புள்ளி இடுவது முறை.

எ.கா: திருக்குறளில் மூன்று பெரும் பிரிவுகள் உண்டு. அவை அறுத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்.

5. கிடக்கை வரிசையில் அமைக்கும் முகவரியின் இறுதியில் முற்றுப்புள்ளி இடுவது முறை.

எ.கா: வ. எழில், கதவு எண் 24, வடக்குத்தெரு, பூந்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

6. ஒரு வாக்கியம் முழுவதும் பிறை அடைப்பிற்குள் வந்தால் முடிவில் வரும் பிறை அடைப்பிற்கு உன்னால் முற்றுப்புள்ளி இடுவது முறை.

எ.கா: நாட்டுக்கு நற்பணியாற்ற மாணவர்கள் முன் வர வேண்டும். (பிறருக்கும் அக்கடமை உண்டு.)

7. ஒரு வாக்கியத்தின் முடிவில் கூடுதல் தகவல் பிறை அடைப்பிற்குள் தரப்பட்டிருந்தால் பிறை அடைப்பிற்கு வெளியே முற்றுப்புள்ளி இடுவது முறை.

**2.3.5. புள்ளி:**

புள்ளி (point) என்பது கன அளவு, பரப்பளவு மற்றும் நீளமற்று, உரையாடலை இருப்பிடம் (location) மட்டுமே கொண்டு ஒரு வெளியில் வரையறுக்கப்பட்ட வடிவேல் கோட்பாடு ஆகும்.

இக்கோட்பாடு இயற்பியல், திசையான் வரைகலை (vector graphics) ஆகியவற்றில் பயன்படுகிறது. கணிதத்தில் எந்த ஒரு வடிவமோ, வெளியோ, புள்ளிகளால் ஆனதாகக் கருதப்படுகிறது. நவீன கணிதத்தில் வெளி என்ற கணத்தின் ஒரு உறுப்பாகப் புள்ளி கருதப்படுகிறது. குறிப்பாக யூக்ளிடிய வடிவவியலில் புள்ளியை அடிப்படைக் கருத்துருவாகக் கொண்டு பிற வடிவில் கோட்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. அடிப்படைக் கருத்துருவாதனால் புள்ளியை ஏற்கனவே வரையறுக்கப்பட்டவற்றைக் கொண்டு வரையறுக்க முடியாது. எனவே, அதன் பண்புகளை அடிக்கோள்களாக வரையறுப்பதன் மூலம் புள்ளியானது வரையறுக்கப்படுகின்றது.

**2.3.5.1. யூக்ளிடிய வடிவவியலில்.**

இரு பரிணாம யூக்ளிடிய வெளியில் குறிக்கப்பட்டுள்ள புள்ளிகள் (நீலம்). யூக்ளிடிய வடிவவியலில் மிக முக்கியமான அடிப்படை வடிவவியல் பொருட்களில் ஒன்றாக புள்ளி கருதப்படுகின்றது. யூக்ளிடின் புள்ளிக்கான வரையறையானது அதனை "எதுவும் இல்லாத ஒன்று"(that which has no part) என்கிறது. இரு பரிமாண யூக்ளிடிய வெளியில் ஒரு புள்ளி, இரு எங்களைக் கொண்ட வரிசைச் சோடியால் ( x,y ) குறிக்கப்படுகிறது. முதல் எண் ஓ கிடைமட்டத்தையும், இரண்டாவது எண் ல செங்குத்து மட்டத்தையும் குறிக்கின்றன.

வெளியிலமைந்த புள்ளி, மூன்று எண்களைக் கொண்ட வரிசைப்படுத்தப்பட்ட மும்மையால் ( x,y,z ) குறிக்கப்படுகின்றது. பரிமாண வெளியில் அமையும் புள்ளி, வரிசைப்படுத்தப்பட்ட உறுப்புகளை கொண்ட (a1>a2>>an ) எனக் குறிப்பிடப்படுகிறது.

**2.3.6. முப்புள்ளி (... )**

மூன்று புள்ளிகளாலாகிய முப்புள்ளி கீழ்வருவனவற்றைக் குறிக்க பயன்படுகிறது:

விடுபட்ட சொல்
சொற்றொடர்
நிறுத்தம்
சிந்தனைத் தொடர்ச்சி
ஒழிப்புத் தொடர்ச்சி
உணர்ச்சி நீட்டம்

**2.3.6.1. முப்புள்ளி இடும் இடங்கள்.**

1. பாக்கியத்தில் விடப்பட்ட பகுதியை குறிக்க முப்பு புள்ளி இடுவது முறை.
   எ.கா. அறையில் குடும்பமே கூடிவிட்டது. அம்மா, அப்பா, அக்கா...

2. நூல்களில் இருந்து மேற்கோள் காட்டும் போது வேண்டுமென்றே விடுத்த சொற்றொடர் ஆகியவற்றை குறிக்கும் முப்புள்ளி இட வேண்டும்.

எ.கா: யாயும் ஞாயும் யாராகியரோ... செம்புலப் பெயனீர் போல அன்புடன் நெஞ்சம் தங்கலந் தனவே

3. எழுத்தில் நிறுத்தம் உரிக்கும் உப்பள்ளி இடுவது முறை.

எ.கா: கண்ணன் தந்தியைக் கையில் வாங்கிய போத அவன் நெஞ்சம் படபடுத்தது. தந்தியை மெதுவாக பிரித்தான். அவன் கண்கள் மங்கின... மயங்கி விழுந்தான்.

4. வாக்கியத்தின் இறுதியில் சிந்தனைத் தொடர்ச்சியை குறிக்க முப்புள்ளி இடுவது முறை.

எ.கா: சில வேளை அங்கே மும்பையில் கூட அவன் இருக்கலாம்...

5. சொற்களின் ஒலிப்புத் தொடர்ச்சியை குறிக்க முப்புள்ளி விடுவது முறை.

எ.கா: அம்மா, கத்தரிக்காய், கத்தரிக்காய் ...

6. உணர்ச்சியை வெளிப்படுத்தும் போது அது இன்னும் தொடர்கின்றது என்பதை காட்ட முப்பள்ளி இடுவது முறை.

எ.கா: மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தன் தந்தை இறந்து விட்டார் என்ற செய்தியை கேட்டதும் பொன்னி மயங்கி விழுந்தாள்... அவள் மூச்சு நின்றுபோனது.

### 2.3.7 வினாக்குறி :

வினா சொற்றொடரில் இறுதியில் இடப்படுகின்றது.

எ.கா: பாடுபட்டால் பயன் இல்லாமல் போகுமா?

சொற்றொடர்க்கு நடுவில் கேள்விக்குறி வரக்கூடாது. ‘நீங்கள் யார் என்று அவர் கேட்டார்’என்னும் சொற்றொடரில் யார் என்று சொல்லுக்குப் பின்னால் வினாக்குறி கண்டிப்பாக இருக்கக் கூடாது.

### 2.3.8 கேள்விக்குறி

நல்ல தமிழில் எழுத விரும்புவோர் அதற்கேற்ற தமிழ் நடையை கையாள வேண்டும். மொழிநடை என்பது ஒழுங்கான அமைப்பில் எழுதுவதற்கான நெறிமுறையை குறிக்கும் .

இத்தகைய நெறிமுறையில் நிறுத்த குறிகள் (punctuation marks) பெரும் பங்கு வகிக்கின்றன. பேச்சின் ஒழிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்தி பரிமாற்றத்தில், குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும் கருத்து தெளிவு துலக்கவும் படிப்பவரின் அக்கறையை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படும் குறிகளாகும். நிறுத்தக்குறிகளுள் ஒன்று கேள்விக்குறி ஆகும். இதனை வினாக்குறி என்றும் கூறுவர்.

### 2.3.9 கேள்விக்குறி (?)

ஒரு பொருள் குறித்து மேலும் அறியவோ ஐயம், வியப்பு போன்ற உணர்வுகளை தயக்கத்தோடு வெளிப்படுத்தவே கேள்விக்குறி பயன்படுகின்றது.

**2.3.9.1. கேள்விக்குறி இட வேண்டிய இடங்கள்:**

1. வினா வாக்கியத்தின் முடிவில் கேள்விக்குறி இடுவது முறை.

எ.கா: மதுரைக்கு போய் வந்துவிட்டீர்களா?

2. ஐயம் நம்பிக்கையின்மை தொணிக்கும் வாக்கிய முடிவில் கேள்விக்குறியிடுவது முறை.

எ.கா: இன்னும் இரு நாட்களில் பருவமழை பெய்யும் ?

3. ஒரு செய்தி உறுதியாக தெரியாத நிலையில் ஐயப்பாடு எழுப்ப கேள்விக்குறி இடுவது முறை.

எ.கா: கலிங்கத்துப் போர் (கி.மு.256? ) அசோகரின் வாழ்க்கை வேரோடு மாற்றி அமைத்தது.

4. வியப்போடு ஒன்றை வினவும்போது கேள்விக்குறியையும் உணர்ச்சிக்குரியையும் சேர்த்து பயன்படுத்தலாம்.

எ.கா: உங்களால் இவ்வளவு சீக்கிரம் எப்படி வர முடிந்தது?!

**2.3.9.2. கேள்விக்குறி தேவையில்லாத இடங்கள்:**

1. அடிக்கி வரும் வினாக்களுக்கு இடையில் கேள்விக்குறி இடுவதில்லை. இறுதி வினாவில் மட்டும் இட்டால் போதும்

.எ.கா: மும்பைக்கு எபப்டிப் போவீர்கள், விமானத்திலா, பேருந்திலா?

2. என, என்று ,என்ற ,என்பது ஆகிய சொற்களுக்கு முன் மேற்கோள் குறி இல்லாமல் வரும் வினாவை அடுத்து கேள்விக்குறி இடுவதில்லை.

எ.கா: இதைச் செய்யலாமா, வேண்டாமா என்ற கேள்விக்கு இடமே இல்லை . அயல் நாட்டு பயணத்தை அடுத்த ஆண்டுக்குத் தள்ளிப் போடலாமா என்று அவர் கேட்டதும் கண்ணனுக்கு எரிச்சல் தான் வந்தது.

**2.3.10 ஒற்றை மேற்கோள் குறி:**

ஒற்றை மேற்கோள் கூறி சிறப்புக் காரணம் கருதி ஏதேனும் ஒரு சொல்லை அல்லது தொடரை குறித்து காட்டுகின்ற இடங்களிலும், உரையாடலுக்குள் இடம்பெறும் மற்றொரு உரையாடலைக் குறிக்க இடப்படுகின்றது.

பிரித்துக் காட்டுவதற்கும், பிறருடையது என்று அறிவதற்கும் பழமொழிகளைத் தெரிவிப்பதற்கும் ஒற்றை மேற்கோள் குறி பயன்படுத்தப்படுகின்றது.

சிறப்பு காரணம் கருதி ஏதேனும் ஒரு சொல்லை அல்லது தொடரை எடுத்துக்காட்டுகின்ற இடங்களிலும், உரையாடலுக்குள் இடம்பெறும் மற்றொரு உரையாடலை குறிக்கவும் ஒற்றை மேற்கொள் கூறி இடப்படுகின்றது.

எ.கா: பரதன், “நான் என் செய்வேன்! அண்ணன், ‘நீ போ. நான் பதினான்கு ஆண்டுகள் கழித்தே வருவேன்’ என்று சொன்னார் அதனால் வந்து விட்டேன்”.

எ.கா: 'வு', 'வூ', 'வொ', 'வோ' இன்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வரா. 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது பழமொழி.

**2.3.11. மேற்படிக்குறி:**

நிறுத்தக்குறிகளுள் ஒன்று மேற்படிக்குறி (ditto mark) ஆகும். இது ஒரு முறை கூறப்பட்ட பொருளை மீண்டும் ஒரு முறையோ பலமுறைகளோ அப்படியே எடுத்துரைக்கும் தேவையை தவிர்த்து அதை ஓர் அடையாளத்தால் வெளிப்படுத்த உதவுகின்றது.

**2.3.11.1 மேற்படிக்குறி (")**

மேலே குறிப்பிட்டது போல எண்ணும் பொருள்களில் மேற்படிக்குறி பயன்படுகின்றது.

எ.கா. மிளகு ஒரு கிலோ..... ரு..30

அரிசி. " ".... ரு.40

(இந்த எடுத்துக்காட்டில் மிளகு, ஒரு கிலோ, அரிசியும் ஒரு கிலோ என்பது குறிக்கபடுகிறது)

**2.3.11.2. இரட்டை மேற்கோள் குறி:**

தன் கூற்றை வலியுறுத்த அண்ணனும் சிறந்தோர் கூறியவற்றை எடுத்தாளுகின்ற இடங்களிலும், பிறர் உரையாடலை அப்படியே கூறும் இடங்களிலும், அப்படியே கூறும் இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறியிட வேண்டும் .

எடுத்துக்காட்டு: (அ) "அறம்தலை நின்றார்க்கு இல்லை அழிவு"என்றார் கம்பர்.

(ஆ) நெடுஞ்செழியன், "இப்போரில் நான் வெல்லாமற் போனால் என் குடிகள் தூற்றும் கொடுங்கோலனாவேனாக!"என்று சூளுரைத்தான்.

**2.3.12 பிறை அடைப்பு ( )**

கூறப்படும் கருத்திற்க்கு மேலாகக் கூடுதல் தகவல் தரும்போது பறை அடைப்பு இடலாம்.

1. விருந்துக் கூறுதள், விளக்கிக் கூறுதள், கூடுதல் தகவல் போன்றவற்றைக் குறிக்க வாக்கியத்திற்குள் பிறை அடைப்பு இடலாம்.

எ.கா: கல்லூரியில் வன்முறையில் ஈடுபட்டதற்காக இரு மாணவர்கள் வயது (22, 23) கைது செய்யப்பட்டார்கள்.

செவ்வாய்க்கிழமை ( மார்ச்சு 22 ) மாலை இசை விருந்து நிகழ்ந்தது.

பத்து வயதுக்குட்பட்ட சிறுவர் அனைவரும் (25 பேர்) நலமாய் போய்ச் சேர்ந்தார்கள்.

2. ஆண்டு, மாதம், நாள் ஆகியவற்றைத் தமிழ் முறையில் எழுதும்போது அவற்றுக்கு இணையாக ஆங்கிலத் தேதியை உள்ளடக்கிக் கட்ட பிழை அடைப்பு இடலாம்.

எ.கா: நிகழும் பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் (11-6-1999) வெள்ளிக்கிழமை.

3. தமிழ்ச் சொல்லை அடுத்துப் பிறமொழிச் சொல் தரப்படும் போது பிறமொழிச் சொல்லைக் கட்ட பிறை அடைப்பு பயன்படுகிறது…

எ.கா: உயிர்வளி (ழஒலபநெ)

நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic)

4. தமிழில் எழுத்துப் பெயர்ப்புக்கும் மொழிபெயர்ப்புக்கும் மூலமாக பிறமொழிச் சொல்லைக் காட்ட பிறை அடைப்பு பயன்படுகிறது.

எ.கா: அமெரிக்க அதிபர் ரானல்ட் ரேகன் (Ronald Reagan) குடியரசு கட்சியைச் சார்ந்தவர்.

5. மேற்கோளில் ஆதார நூல் மற்றும் அதன் விவரங்களைக் காட்ட பிறை அடைப்பு பயன்படுகிறது.

எ.கா: இமயமலையை வர்ணிக்கும் பாரதியார் "விண்ணை இடிக்கும் மலை இமயம்"(பாரதி பாடல்கள் செந்தமிழ் நாடு 9) என்று கூறுவார்.

6. நாடகம், திரைப்படம் முதலியவற்றின் உரையாடல் பகுதிகளில் காட்சி அமைப்பு, பாத்திர வருணனை, நடிப்பு முறை முதலியவற்றுக்கான குறிப்புகளைக் காட்ட பிறை அடைப்பு பயன்படுகிறது.

எ.கா: கண்ணன்: (ஏளனச் சிரிப்போடு) யார் வீரன் என்பது விரைவில் தெரிந்துவிடும்!

7. தொடர் முறையில் வரும் கதையின் அல்லது கட்டுரையின் இறுதியில் அது முடிவுபெற்றது அல்லது தொடர்கிறது என்பதைக் காட்டும் சொற்களை உள்ளடக்க பிறை அடைப்பு பயன்படுகிறது.

எ.கா: (தொடரும்), (முற்றும்)

8. வரிசையாகக் காட்டப்படுபவற்றுக்குத் தரப்படும் என் அல்லது எழுத்தை உள்ளடக்க ஒரு புறத்தில் அல்லது இருபுறங்களிலும் சிறையடைத்து பயன்படுகிறது.

எ.கா: 1) 2) 3), அ) ஆ) இ)

### 2.3.13. உணர்ச்சிக்குறி:

வியத்தல், வரவேற்றல், வாழ்த்தல், வைதலின் போது பயன்படுத்தப்படுகின்றது. நம்ப முடியாது என்பதையும் இகழ்ச்சியுடையது என்பதையும் காட்டுமிடங்களிலும் உணர்ச்சிக்குறியிடுதல் உண்டு.

எ.கா: (அ)அந்தோ! பல பழந்தமிழ் நூல்கள் அழிந்தனவே.

(ஆ) வாழி! வாழி! தமிழ்நாடு வாழியவே!

கண்டவாறு உணர்ச்சிக்குறியை ! ,!! , !!! இவ்வாறெல்லாம் இந்த டுதல் விரும்பத் தக்கதன்று.

செய்யுளில் நிறுத்தக்குறிகள் இடுவது பற்றி இரு வேறு கருத்துக்கள் உள்ளன. இருந்தபோதிலும், எளிதில் புரிந்து கொள்ள இயலாதாருக்கு உதவியாக தேவை நேருமிடங்களில், பொருத்தமான குறிகளை இடலாம். எனினும், 'நிறுத்தக் குறிகளை மூலத்துள் நுழைப்பது முறையன்று சொல் பிரிக்கையில் அடைப்புக் குறிக்குள் சந்திகளை நுழைப்பதும் முறையன்று சீர் ஒழுங்கைக் குலைத்த அச்சிடுவது, பாவடிவை மாற்றும் என்று கூறுவாரின் கவலையை புறக்கணிக்கணித்தல் தவறாகும்'

எ.கா: கீழே காண்பது நல்வழி 15 ஆம் பாடல். எந்த நிறத்துக்குரியும் இன்றி உள்ளது.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

இப்பாடலில் கீழ்க்காணுமாறு குறியீடு இட்டால், எளிதில் புரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை ! - உபாயம் இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்.

இப்பாடலையே கீழ்காணுமாறு தவறாக குறியிட்டால் பொருளைக் கெடுத்து குழப்பிவிடும்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம்! ஒரு நாளு மில்லை உபாயம்! இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்.

எனவே, தக்க இடத்தில் தகுந்து நிறுத்தக்குறியிடத் தெரியாத போது , செய்யுளில் நிறுத்தக்குறி யிடாமல் விடுதலே சாலச் சிறந்ததாகும்.

**தொகுப்புரை**

நிறுத்தற்குறிகளின் பயன்பாடுகளை அறிந்துகொள்வதன் மூலம் எழுத்துப்பிழையில்லாமல் கட்டுரை எழுதுவதையும் கட்டுரையின் அவசியத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்

விகுதி மற்றும் சந்தி விதிகளை அறிந்துகொள்வதன் அவசியம் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது

## பயிற்சி வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் தம் கருத்தை எவற்றில் எழுதி வைத்தான்?

(அ) பனை ஓலை (ஆ) கல்வெட்டு (இ) செப்பேடு (ஈ) அனைத்தும்

2. காற்புள்ளி எவ்விடத்தில் பயன்படுத்த வேண்டாம்?

(அ) உம் (ஆ) கு (இ) ஐ (ஈ) ஆல்

3. சொற்றொடர் மற்றும் வாக்கியம் முடிவு பெறும் போது எப்புள்ளிஇடம் பெறும்?

(அ) முற்றுப்புள்ளி (ஆ) காற்ப்புள்ளி (இ) அரைப்புள்ளி (ஈ) முக்காற்ப்புள்ளி

4. "point" என்பதன் ஆங்கில சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்?

(அ) புள்ளி (ஆ) மையம் (இ) நடுப்பகுதி (ஈ) கரு

5. உயிர்வளி என்பதன் தமிழ்ச் சொல்லுக்கு நேரான ஆங்கிலச்சொல்?

(அ) Oxygen (ஆ) hytrogen (இ) Carbon (ஈ) carbon monaoxside

**ஐந்துமதி பெண் வினாக்கள் :**

1. அசைகள் பற்றி விவரி?
2. சொல் வகைகள் பற்றி விவரி?

**பத்து மதிப்பெண் வினாக்கள்:**

1. நிறுத்தக் குறியீடுகள் பற்றி கட்டுரை வடிவில் விடை தருக?
2. பேச்சுக்கால இடைவெளியும் நிறுத்த குறியீடுகளின் பயன்களை கட்டுரைக்க?

**பார்வை நூல்கள்**

1.தமிழ் நடைக் கையேடு, 2001, பா. ரா. சுப்பிரமணியன் வ. ஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்) மொழி வெளியீடு, சென்னை

2.தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம், 2003. பொற்கோ, பூம்பொழில் வெளியீடு, சென்னை

3.நல்ல தமிழ் எழுத வேண்டுமா? 2000, அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை

4..மொழிப்பயன்பாடு, 2004, கா. பட்டபிராமன், நியூ செஞ்சுரி புக்அவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை

5..தவறின்றித் தமிழில் எழுத? 2004 மருதூர் அரங்கராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை

**இணைய இணைப்புகள்**

1.Tamil Heritage Foundation – www.Tamilheritage.org http://www.tamilheritage.org

2.Projrct Madurai – www.projectmadurai.org

3.Tamil E – Books Downlaods – tamilebooksdownloads.blogspot Tamil Books on line – books.tamil cube.com

# அலகு- 3

## அலகின் நோக்கம்

- ஊடகத் தமிழ்ச் செய்திகளை அறிந்து கொள்ளுதல்
- நடைமுறை சார் மொழித்திறன்களை அறிந்து கொள்ளுதல்
- நூல் மதிப்புரை, கடிதம் ஆவணம் எழுதும் முறை

## அலகில் இடம்பெறுபவை

நடைமுறை சார் மொழித் திறன்கள் - எழுத்துத்திறன் - செய்தி கடிதம் - ஆவணம் எழுதும் முறைகள - செய்தி எழுதும் முறைகள் - செய்திக்கட்டமைப்பு - தலைப்பு - முகப்பு - உடல் - செய்தியில் மொழி பயன்பாடு - உடற்பகுதி செய்தி கட்டுரை தலைப்பு தெறிவு - தகவல் சேகரிப்பு வகைகள் - தமிழில் நெகிழ்வுரை எழுதும் முறை - நெகிழ்வுரையில் மொழிப்பயன்பாடு - கருத்துரைகள் - தலையங்கம் - நூல் மதிப்புரைகள் - கடிதம் ஆவணம் எழுதும் முறைகள்.

### 3.1. நடைமுறைசார் மொழித்திறன்கள்:

நடைமுறை சார் மொழித் திறன் என்பது “மற்ற நபர்களுடன் ஒப்பிடுகையில், ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் ஒரு வெளிநாட்டு மொழியை எவ்வளவு நன்றாக கற்க முடியும்” என்பதைக’ குறிக்கிறது. வெளிநாட்டு மொழித் திறன் என்பது கற்றல் விதத்தைக் கணிக்கும் அறிவற்றல் திறன்களின் தொகுப்பாக வரையறுக்கப்படுகிறது, அல்லது மற்றவர்கள் இரண்டாவது அல்லது வெளிநாட்டு மொழியில் எவ்வளவு விரைவாக தங்கள் திறமையை அதிகரிக்க முடியும், மற்றும் அல்லது கற்றவர்கள் எவ்வளவு நெருக்கமாக இருப்பார்கள். வகுப்பறை மற்றும் நிஜ-உலக சூழ்நிலைகளில், இரண்டாவது அல்லது வெளிநாட்டு மொழியில் ஒரு பூர்வீகத்தை போல தொடர்பு கொள்ள முடியும். இரண்டாவது மொழி கையகப்படுத்தல் செயல்முறையின் முழுமையான பாடத்திற்கு திறமையை புரிந்து கொள்வது முக்கியமானது. மொழித் திறன் பற்றிய அறிவு, பயன்பாட்டு மொழியியல் துறையில் இரண்டாம் மொழி கையகப்படுத்தல் கோட்பாடு மற்றும் மொழிககளைக் கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறையில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

கல்வி மற்றும் உளவியலில் வரலாற்று தோற்றம் கொண்ட ஒரு கருத்தாக, பயன்பாட்டு மொழியியலில் அதன் பயன்பாடு, அந்த ஆய்வுத் துறைகளில் சமீபத்தில் கண்டுபிடிப்புகளால் தொடர்ந்து பாதிக்கப்படும். கடந்த சில தசாப்தங்களாக மனித அற்வற்றல் ஆய்வுகளில் ஏற்பட்ட புரட்சி மற்றும் குறிப்பாக அறிவாற்றல் உளவியல் மற்றும் அறிவாற்றல் நரம்பியல் துறைகளில் இருந்து பெரும் பங்களிப்புகளை தொடர்ந்து. மனித அறிவாற்றல் திறன்கள் பற்றிய நமது புரிதல்

கணிசமாக அதிகரித்து உள்ளது. வேறு வார்த்தைகளின் கூறுவதனால், பிற துறைகளில் ஆராய்ச்சி முன்னேற்றங்களுக்கு இல்லை என்றால்,பயன்பாட்டு மொழியியலில் வெளிநாட்டு மொழிதிறன் பற்றிய சமகால விவாதங்கள் கணிசமாக போதுமானதாக இருக்காது. திறமையின் பல நடவடிக்கைகளைப் போலவே, ஒரு நபர் முதிர்ச்சியடைந்தவுடன் மொழி கற்றல் திறன் ஒப்பிட்ட அளவில் நிலையானதாக கருதப்படுகிறது.

### 3.1.1. மொழி கற்றல் குறைபாடு

சில உயர்நிலைப் பள்ளிகள்"', பல்கலைக்கழகங்கள் அல்லது பிற நிறுவனங்கள் குறைந்த மொழி கற்றல் திறனை மொழி கற்றல் இயலாமையின் அடையாளமாக விளங்குகின்றன. பல ஆதாரங்களில் இருந்து ஒரு மாதிரியான ஆதாரம் வெளிநாட்டு மொழி கற்ற குறைபாடு கண்டறிய உதவும். நவீன மொழித்திறன் தேர்வு மொழித்திறன் பேட்டரி, நவீன மொழித் திறன் தேர்வு-தொடக்க அல்லது பாதுகாப்பு மொழித்திறன் பேட்டரி கற்றல் திறன் மதிப்பீடுகளில் மோசமாக மதிப்பெண் பெறுவதில் இருந்து சான்றுகள் பெறலாம்.

பொது அறிவு போன்ற. பொருத்தமான நேரத்தில் எடுக்கப்பட்ட மொழித்திறனாய்வுத' தேர்வுகளின் பரிசில் மோசமாக மதிப்பெண் பெறுதல் மற்றும் மொழிக்கற்றல் குறைபாடுக்கான வலுவான ஆதாரங்களை வழங்க முடியும். அயல்நாட்டு மொழிபாடங்களில் கடந்த காலத்தின் மோசமான செயல் திறனை, மொழி கட்டலுடன் தொடர்பில்லாத பிற படிப்புகளால் பல்வேறு மொழிக் கற்றல் குறைபாடு அதிகரித்துள்ளது.

### 3.1.2. ஜான் பி. கரோல்:

கல்வி மொழியில் துறையில் செல்வாக்கு மிக்க உளவியலாளரான ஜான் பி க்ரோல், வாய்மொழி நுண்ணறிவு மற்றும் உந்துதல் ஆகியவற்றிலிருந்து தனித்தனியாக மொழி காற்றல் திறனைக் கொண்டு நான்கு திறன்களை கொண்ட ஒரு கோட்பாட்டை உருவாக்கினார் இந்த நான்கு தனித்துவமான திறன்களை பயன்படுத்தினார்.

### 3.1.3. நடைமுறை சார் மொழித் திறன்கள் வகைகள்:

- ஒலிப்பு குறியீட்டு திறன்,
- இலக்கண உணர்திறன்,
- சுழலும் கற்றல் திறன்,
- தூண்டல் கற்றல் திறன்

### 3.1.4 ஒலிப்புக்குறிட்டுத் திறன்:

ஒலிப்பு குறியீட்டு திறன் என்பது தனித்துவமான ஒலிகளை உணரும் திறன், அந்த ஒலியுடன் ஒரு சின்னத்தை இனைத்து, அந்தத் தொடர்பை தக்கவைத்துக் கொள்ளும் திறன்.

**3.1.5. இலக்கண உணர்திறன்:**

இலக்கண உணர்திறன் என்பது இலக்கணத்தில் வெளிப்படையான பயிற்சி இல்லாமல் ஒரு வாக்கியத்தில் ஒரு லெக்சிகல் உறுப்பு (சொல், சொற்றொடர், முதலியன) இலக்கண செயல்பாட்டை அடையாளம் காணும் திறன்.

**3.1.6 சூழலும் கற்கும் திறன்**:

சூழலும் கற்கும் திறன் என்பது ஒரு வெளிநாட்டு மொழியில் உள்ள சொற்களுக்கும் அவற்றின் அர்த்தங்களுக்கும் இடையிலான தொடர்புகளை கற்று அந்த தொடர்பைத் தக்க வைத்துக் கொள்ளும் திறன்.

**3.1.7 தூண்டல் கற்றல் திறன்:**

தூண்டல் கற்றல் திறன் என்பது ஒரு மொழியின் கட்டமைப்பை நிர்வகிக்கும் விதிகளை ஊகிக்கும் அல்லது தூண்டும் திறன்.

மொழி கற்றல் திறனுடன் தொடர்புடையதாக அவர் நம்பும் நான்கு காரணிகளை ஆராய்வதில் நேரத்தை செலவிட்டார். பொதுக் கல்வி சாதனை மற்றும் அவரது காரணிகளில் உந்துதலின் குறியீடாக கிரேடு புள்ளி சராசரியை உள்ளடக்கியது. கூடுதலாக, ஒரு மாணவர் விளையாட்டு மொழியைக் கற்கும் இயக்கவியலை எவ்வளவு சிறப்பாகக் கையாள முடியும் என்பதை வாய்மொழித் திறன் காரணி சுட்டிக்காட்டுகிறது. மற்றும் ஒரு மாணவர் வெளிநாட்டு மொழியில் சொற்றொடர்களை எவ்வளவு நன்றாகக் கேட்கவும் உருவாக்கவும் முடியும் என்பதை செவிவழி காரணி சுட்டிக்காட்டுகிறது.

**3.1.8. திறன் அளவீட்டின் பயன்பாடுகள்:**

மொழி கற்றல் திறனின் அளவீடுகள் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. தீவிர மொழிப் பயர்ச்சித் திட்டங்களில் பயனாளர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்துவதற்கான ஒரு கருவியாக எம்எல்ஏடியை அரசு நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. வணிகங்கள் மற்றும் மிஷனரிகள் மொழிப் பயர்ச்சியைத் தேர்ந்தெடுக்க, இடம் மற்றும் திட்டமிடுவதற்கு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் வெளிநாட்டு மொழி கற்றல் குறைபாடுகளை கண்டறிவதில் எம்எல்ஏடியைப் பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் அதன் சொந்தக் கொள்கையை கொண்டிருந்தாலும். வரலாறு அல்லது மொழியியல் பாடத்திற்கு ஆதரவாக வெளிநாட்டு மொழி கற்றல் குறைபாடு ஏற்பட்டால் பலர் வெளிநாட்டு மொழித் தேவையை தள்ளுபடி செய்வார்கள்.

**3.1.9. திறன் சோதனைகள்:**

நவீன மொழித்திறன் தெர்வு முக்கியமாக ஜான் பி. கரோல் எழுதியது பெரியவர்களுக்கு பொருத்தமானது. முக்கியமாக அரசு மற்றும் இராணுவ நிறுவனங்களால் மொழிப் பயிற்சிக்காக பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து வைக்கப் பயன்படுத்தப்படுகிறது. பாதுகாப்பு மொழி அப்டிட்யூட் பேட்டரி வெளிநாட்டு மொழியில் சரளமாக பேசுவதற்கு தேவைப்படும் வேலைகளுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க அமெரிக்கா பாதுகாப்புத் துறையால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

ைஅளடநரச மொழி ஆப்டிட்யூட் பேட்டரி பால் பிம்ஸ்லூரால், 7 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் மொழிகற்றல் திறனை மதிப்பிட பயன்படுகிறது.

**3.1.10. நவீன மொழித் திறன் தேர்வு:**

தொடக்கநிலை முக்கியமாக ஜான் பி. கரோல் எழுதியது, 3 முதல் 6 வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்றது.

மொழியைப் பெறுவதில் புதுமைக்கான அறிவாற்றல் திறன் - வெளிநாட்டு 2000 ஆம் ஆண்டில் கிரிகோரென்கோ, ஸ்டெர்ன்பெர்க் மற்றும் எர்மான் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.

**3.2 எழுத்துத் திறன்:**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, எழுத்து ஒருவரின் கருத்தை மற்றவர்களுக்கு தெரிவிக்க உதவியுள்ளது. அதே நேரத்தில் எழுத்து உருவாக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து வந்த வரலாற்றில் அறிவியல் மற்றும் கலாச்சாரம் போன்ற துறைகளில் இன்றைக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பல சமூகங்கள் பயனடைந்துள்ளன.

இன்றைய காலத்தில், எழுத்துக் கலை என்னும் பரிசை நீங்கள் எவ்வாறு வெற்றிகரமாகப் பயன்படுத்துகிறீர்கள் என்பது முற்றிலும் உங்களைப் பொறுத்தது. எழுதுவது என்பது ஒருவரின் வாழ்க்கைத் திறன், ஒரு அத்தியாவசிய திறன் என்று மட்டும் கூறவும் முடியாது. முக்கியமாக உங்கள் கற்றல், உங்கள் வாழ்க்கை தரம், உங்கள் சுய கருத்துக்கள் மற்றும் சமூகத்தில் உங்கள் பங்களிப்பு ஆகியவற்றை மற்றவர்கள் தீர்மானிக்கும் ஓர் அடிப்படை விஷயமாகும்.

உங்கள் தொழில் எதுவாக இருந்தாலும், ஏனைவர்களுடன் உத்தியோக பூர்வமாக தொடர்பு கொள்வதற்கு கட்டாயம் எழுத வேண்டும். அதுவும் பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும். இங்கே மின்னஞ்சல்கள், வணிக குறிப்புகள், அறிக்கைகள், பல்வேறு தொழிலுக்கான விண்ணப்பங்கள், உங்கள் வியாபார செய்திகளை வெளியிடுதல் போன்ற முக்கியமான இடம் வகிக்கின்றன.

நீங்கள் ஒரு ஆங்கில செய்தி, இணையதளம் வைத்திருப்பவர் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் எழுதும் செய்திகள் வாசகர்களின் மனதைக் கவரக்கூடிய தலைப்புகளில் அமைய வேண்டும். மேலும் உங்கள் வாசகாரிடமிருந்து நீங்கள் எவ்வாறான ஒரு பின்னூட்டளைப் பெறுவீர்கள் என்பதை உங்கள் எழுத்துத் திறன் தான் தீர்மானிக்கிறது. ஒரு செய்தியை அதன் உண்மைத் தன்மை மாறாமல் பல விடிவங்களில் வாசகர்கயளிடம் கொண்டு சென்று சேர்த்துவிடலாம். உங்கள் எழுத்துத் திறனில் தான் அவை எல்லாம் தங்கியிருக்கிறது. நீங்கள் எழுதும் விஷயத்தைப் பற்றி ஒரு சிறு தகவல் உங்களிடம் இருந்தால் கூட உங்கள் எழுத்துத் திறமையை பயன்படுத்தி இன்னும் சில தகவல்களை சேர்த்து அதனை உங்களால் பெரிய ஒரு கட்டுரையாக மாற்றி எழுத முடியும்.

நீங்கள் ஆங்கிலத்தில் எழுதும் ஒரு விஷயத்தில் விடும் சிறிய ஒரு பிழை ஒரு பெரிய பிரச்சினையாக மாறிவிடும் வாய்ப்பு உள்ளது. ஒரு சொல்லில் உள்ள ஒரு எழுத்துப்பிழை அல்லது ஒரு சொல்லின் இடம்பெறும் ஒரே இடத்தில் ஏற்படும் மாற்றம் நீங்கள் எழுதும் ஒரு கட்டுரை இருந்தே நீங்கள் சொல்ல வரும் விஷயத்தை தலைகீழாக மாற்றி விடும். ஆகவே ஆங்கில எழுத்து திறனில் சிறந்து விளங்க வேண்டும் எனில் நீங்கள் ஆங்கில சொற்களில் அதிக அளவு கவனம் செலுத்த வேண்டும். முடிந்தவரையில் அதிகமான சொற்களைத் தெரிந்துவைத்துக் கொள்வதோடு அவற்றை எழுத்துப்பிழையின்றி எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் எழுதும் ஒரு விஷயம் உங்கள் வாழ்நாட்களின் பிறகும் நீங்கள் யார் என்பதை இந்த உலகுக்கு எடுத்துக் கூறும். உங்கள் அறிவு மட்டம், உங்கள் இயல்புகள், உங்கள் குணாதிசயங்கள் மற்றும் உங்களிடம் உள்ள தனித்துவமான திறமைகள் என்பவற்றை உங்கள் எழுத்துத் திறன் உங்கள் வாழ்நாட்களின் பிறகும் இந்த உலகுக்கு எடுத்துக் கூறும். ஒருவரின் எழுத்துத் திறமை அவ்வளவு சக்தி வாய்ந்தது என்றே கூற வேண்டும். இன்றைக்கும் பல உலகப் பிரபலங்கள் எழுதிய நூல்களும் நாவல்களும் இதற்குச் சான்று பகிர்கின்றன.

### 3.2.1. எழுதும் திறனை வளர்த்துக்கொள்வது:

எழுதும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனில் நீங்கள் முதலில் செய்ய வேண்டிய விஷயம், உங்கள் எண்ணங்களை ஒழுங்குபடுத்துவது தான். காரணம் பெரும்பாலும் உங்கள் எண்ணங்களை தான் நீங்கள் எழுத்து வடிவில் கொண்டு வரப் போகிறீர்கள்.

நீங்கள் ஒரு ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதுவதாக வைத்துக் கொள்வோம். அதில் நீங்கள் உங்கள் கருத்துக்களை விளக்க வேண்டும், நீங்கள் உங்களிடம் உள்ள ஆதாரங்களை முன் வைக்க வேண்டும் மற்றும் உங்கள் வாசகர்களை உங்கள் கருத்துடன் இணக்க வைக்க வேண்டும். உங்கள் கட்டுரையில் நீங்கள் எடுக்கும் முடிவை உங்கள் வாசகர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு உங்கள் எழுத்துத் திறன் அமைய வேண்டும். இங்கே வாசகர்கள் உங்கள்

கருத்துக்களையும், உங்கள் முடிவையும் ஏற்றுக்கொள்ளவில்லை எனில் அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற மாற்றுக் கருத்துக்களுக்கும் உங்கள் எழுத்து திறமையை பயன்படுத்தி நீங்கள் முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும். இவை அனைத்துக்கும் உங்கள் எண்ணங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

### 3.3. செய்தி கடிதம் எழுதும் ஆவணம் முறைகள்:

- செய்தி சேகரித்தலும் எழுதுதலும்.
- செய்தி, வரையறை வகைகள்.
- செய்தியாளர் (நிருபர்) தகுதிகள், பொறுப்புகள் கடமைகள்.
- செய்திக் களங்கள்.
- ஆசிரியர் துணை, ஆசிரியர் தகுதிகள், கடமைகள், பொறுப்புகள்.
- நேர்காணல்(பேட்டி)-விளக்கம், வகைகள்.
- செய்தி எழுதுதலும் செம்மையாக்கமும்.

### 3.3.1. ஆவணம்:

ஆவணம் என்பது ஒரு தயாரிப்பு, அமைப்பு அல்லது சேவையை விவரிக்கும் மற்றும் விளக்கம் எழுதப்பட்ட தகவல். இது பயனர் கையேடுகள், தொழில்நுட்ப வழிகாட்டிகள் மற்றும் ஆன்லைன் உதவி ஆதாரங்கள் போன்ற பல்வேறு வடிவங்களை எடுக்கலாம். ஒரு தயாரிப்பு அல்லது சேவையின் பயனர்களுக்கும் தகவல் மற்றும் வழிமுறைகளை வழங்கவும் அதன் மேம்பாடு மற்றும் பராமரிப்பை ஆதரிக்கவும் பொதுவாக ஆவணப்படுத்தல் பயன்படுகிறது.

### 3.3.2. உள் ஆவணமாக்கல்:

உள் ஆவணமாக்கல் என்பது ஒரு நிறுவனத்திற்குள் உருவாக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படும் ஆவணமாகும், மேலும் இது பொதுவாக வெளிப்புற பயன்பாட்டுக்காக அல்ல இது வடிவமைப்பு மற்றும் செயல்பாடுத்தல் திட்டங்கள், தொழில்நுட்ப விவர குறிப்புகள் மற்றும் உள் செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கலாம். ஒரு நிறுவனத்தில் உள்ள குழுக்களுக்கு ஒரு தயாரிப்பு அல்லது சேவையை புரிந்து கொள்வதற்கும் வேலை செய்வதற்கும் உதவுவதற்கும் தயாரிப்பு அல்லது சேவையின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு ஆதரிப்பதற்கும் உள் ஆவணங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.3.4. வெளிப்புற ஆவணமாக்கல்:

வெளிப்புற ஆவணமாக்கல், மறுபுறம், ஒரு தயாரிப்பு அல்லது சேவையின் வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் அல்லது பயணங்கள் போன்ற வெளிப்புற பங்குதாரர்களால் பயன்படுத்தப்படும் ஆவணம் ஆகும். இது பயனர் கையேடுகள் ஆன்லைன் உதவி ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டிகள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கலாம். ஒரு

தயாரிப்பு அல்லது சேவையின் பயனர்களுக்கு தகவல் மற்றும் வழிமுறைகளை வழங்கவும், தயாரிப்பு அல்லது சேவையை பயன்படுத்துவதை ஆதரிக்கவும் வெளிப்புற ஆவணங்கள் பெரும்பாலும் பயன்படுகின்றன.

உள் மற்றும் வெளிப்புற ஆவணங்களை சரியாக செய்தால், உங்கள் டெவெலப்பர் அனுபவத்தையும் பயனர் அனுபவத்தையும் வேறு நிலைக்கு கொண்டு செல்ல முடியும். வெளிப்புற ஆவணங்கள் ஒரு நல்ல தயாரிப்புக்கு மாற்றாக இல்லை. ஆனால் உறுதியான ஆவணங்கள் இல்லாமல் சில நல்ல தயாரிப்புகள் சந்தையில் வெற்றி பெற முடியும்.

### 3.3.5 ஆவணங்களின் வகைகள்

- வெளிப்புற ஆவணம்
- இறுதிப் பயண ஆவணங்கள்
- நிறுவன பயண ஆவணங்கள்

### 3.3.5.1 வெளிப்புற ஆவணங்கள்:

வெளிப்புற ஆவணங்கள் ஒரு மென்பொருள் அமைப்பின் பயனர்களுக்காக உருவாக்கப்பட்ட எழுதப்பட்ட பொருள்களை குறிக்கிறது. வெளிப்புற ஆவணங்களை பல வகைகளாக பிரிக்கலாம், அவற்றுள்:

### 3.3.5.2 இறுதி பயணர் ஆவணங்கள்:

இந்த வகை ஆவணங்கள் மென்பொருள் அமைப்பில் இறுதி பயனாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது அவர்கள் பொதுவாக தொழில்நுட்பம் அல்லாத நபர்கள். மென்பொருளை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் பொதுவாக சிக்கல்களை சரி செய்வது என்பதை விளக்கும் பயணக் கையேடுகள், உதவிக்கோப்புகள் மற்றும் ஆன்லைன் பயிற்சிகள் ஆகியவை இறுதிப்பயணம் ஆவணமாக்களில் அடங்கும்.

### 3.3.5.3 நிறுவன பயணர் ஆவணங்கள்

இந்த வகை ஆவணப்படுத்துதல் இறுதி பயணநர் ஆவணமாக்களைப் போன்றது. ஆனால் நிறுவன பயனர்களை இலக்காகக் கொண்டது அவர்கள் நிறுவனத்தில் உள்ள மென்பொருளை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாகும். என்று பிரைஸ்சஸ் பயண ஆவணங்களில் மென்பொருளை எவ்வாறு நிறுவுவது மற்றும் கட்டமைப்புத, பராமரிப்பு பணிகளை செய்வது மற்றும் சிக்கல்களை எவ்வாறு சரி செய்வது போன்ற தகவல்களை தகவல்கள் இருக்கலாம்.

### 3.4. ஆவணம் எழுதும் முறைகள்

#### 3.4.1 அறிமுகம்

முதலில் www.tnreginet.gov.in என்ற தளத்தில் ஒரு கணக்கை தொடங்கி அதில் User Name and password ஆகியவற்றை உருவாக்கி உள்நுழையவும். பின்னர் திரையில் தோன்றும் தலைப்பை ‘கிளிக்’ செய்து கிடைக்கும் நான்கு துணை தலைப்புகளில் வரைவு ஆவணத்திற்கான சுருக்கம் என்பதை ‘கிளிக்’ செய்யவும். அதில் ஆவணத்தின் தன்மை மற்றும் முந்தைய ஆவண விவரம் என்ற இரு வி'யங்கள் இருக்கும்.

#### 3.4.2ஆவணத்தின் தன்மை

கிரயம், பாகப் பிரிவினை, தான செட்டில்மெண்ட் உள்ளிட்ட பல்வேறு வகை ஆவணங்களின் தலைப்புகளில் தேவையான ஆவணத்தை தேர்வு செய்ய வேண்டும்.

#### 3.4.3 முந்தைய ஆவண விவரம்

புதிய ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொத்துக்கள் கிடைக்கப்பெற்ற மூல ஆவணத்தின் (தாய் பத்திரம்) என், பதிவு வருடம், சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை குறிப்பிட்ட வேண்டும். பட்டா மூலம் சொத்துரிமை கிடைத்திருந்தால் அது பற்றிய தகவல்கள் வேண்டியதில்லை. பின்னர் ஆவணத்திற்கு ஏற்ப கீழ்க்கண்ட தலைப்புகளுக்கான தகவல்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

- கட்சிக்காரர்கள் விவரம்
- சொத்து விவரம்
- சாட்சிகள் விவரம்
- பிரதிநிதிகள் விவரம்
- எழுதிக் கொடுப்பவர்
- எழுதிப் பெறுபவர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் அவர்களது அடையாள அட்டை என்னை குறிப்பிட வேண்டும்.
- சொத்து விற்பவர் பெயர் முகவரி அடையாள அட்டை எண் ஆகியவற்றைப் பதிவு செய்வதுடன் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சொத்து உரிமையாளராக இருந்ததா இருந்தால் அனைத்து உரிமையாளர்கள் பெயரையும் பதிவு செய்ய வேண்டும்.

எழுதி பெறுபவருடைய தொலைபேசி எண் முக்கியம். அதற்கே ஆவணத்தின் நிலை, திரும்ப பெரும் முறை, பட்டா மாற்றம் செய்யப்படும் நிலை ஆகிய செய்திகள் எஸ்.எம்.எஸ்-ஆக அனுப்பப்படும்.

சாட்சிகள் பகுதியில் இருவர் பெயர், அவர்களது அடையாள அட்டை எண், முகவரி போன்றவற்றை குறிப்பிட வேண்டும்.

பிரதிநிதிகள் விவரம் பகுதியில் பவர் மைனர்கான கார்டியன் நியமனம் போன்ற தகவல்கள் இருந்தால் குறிப்பிட வேண்டும்.

தாக்கல் என்ற பகுதியில் பத்திரத்தை திரும்ப பெரும் நபர் பற்றி குறிப்பிட வேண்டும்.

பதிவு செய்யப்படும் சொத்து விவசாய நிலமான வீட்டு மனையா, அடுக்குமாடி குடியிருப்பா, வீடு உள்ள மழையா எனத் தெரிவு செய்து கீழ்க்கண்ட தகவல்களைப் பதிவு செய்யவும்,

- சொத்து விவரம்
- புல எண் விவரம்
- எல்லைகள் விவரம்.
- சொத்தின் அளவுகள்
- கட்டிடத்தில் அளவுகள்
- சொத்து விவர குறிப்புகள்
- சொத்து விவர இனங்கள்
- சொத்து விவரம்
- சொத்து அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகம் கிராமம் சொத்துக்கான தாய் பத்திரம் இல்லாவிட்டால் பட்டா எண் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

### 3.3.4 புல எண் விவரம்.

புல எண், சொத்தின் அளவுகள் (விவசாய நிலங்களுக்கு ஏக்கர் கெட்ட வீட்டுமனைகளுக்கு சதுர மீட்டர் சதுர அடி) சந்தை மதிப்பு, பதிவு செய்யும் சொத்தின் சர்வே எண்ணில் மாற்றப்படும் வீஸ்தீரணம், அதன் சந்தை மதிப்பு ஆகியவற்றை பதிவிட வேண்டும்.

### 3.3.5. எல்லைகள் விபரம்

சொத்துக்கான நான்கு திசைகளிலும் உள்ள வீடு நிலம் ஆகியவற்றின் சர்வே எண்கள் குறிப்பிட வேண்டும். அதில் முறையான எல்லைகள் என்றால் சொத்துக்கான நீளம் மற்றும் அகலம் இரண்டும் சம அளவாகவும், முறையற்ற எல்லை என்றால் நான்கு திசைகளிலும் வெவ்வேறு அளவுகளும் கொண்டதாக இருக்கும்.

### 3.3.6. சொத்தின் அளவுகள்

வீட்டுமனை என்றால் அதன் நீளம் மற்றும் அகலத்தை இப்பகுதியில் குறிப்பிடவும்.

### 3.3.7. கட்டிடத்தின் அளவுகள்

சொத்து மணியும், கட்டிடமும் சேர்ந்து இருக்கும் நிலையில் கதவு எண், மின் இணைப்பு எண், கட்டிடத்தின் மதிப்பு ஆகியவற்றைப் பூர்த்தி செய்யவும்.

**3.3.8 சொத்து விர குறிப்புகள்:**

வாங்கப்படும் சொத்து அமைந்துள்ள பகுதியின் போக்குவரத்துக்கான வழி, பைப் லைன் மற்றும் இதர கழிவு நீர் குழாய்கள் அமைப்புகளுக்கான பாத்திரம் போன்ற தகவல்களை குறிப்பிட வேண்டும்.

**3.3.9 சொத்து விவர இனங்கள்**

சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள மரங்கள், கிணறு, மீன் மோட்டார், பம்பு செட் மற்றும் அதற்கான மதிப்பு ஆகியவற்றைக் குறிப்பிடப்பட வேண்டும்

**3.3.10ஆவணத்திற்கான மதிப்பீடு**

ஆவணத்திற்கான முத்திரை தீர்வை, பதிவு மற்றும் இதற வகை கட்டணங்களை தெரிவிக்கும் இப்பகுதியில் அதன் விவரங்களைக் கவனித்து வரைவு ஆவணத்திற்கான சுருக்கம் என்ற பகுதியை 'கிளிக்' செய்யவும். அப்போது தோன்றும் தற்காலிக எண்ணை வைத்தே சார்பதிவாளர் அலுவலகத்தில் டோக்கன் போடவும் ஆவணத்தை கண்டறியவும் இயலும்.

**3.4 செய்தி எழுதும் முறைகள்**

செய்திகளை எழுதும்போது கீழ்கு குறிப்பிடும் செயல்முறைகளை பின்பற்ற வேண்டுவது அவசியமாகும்.

1. செய்திகளை எழுதும் பொழுது எளிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும். தெளிவற்ற கருத்துகளைக் கூறக் கூடாது.
2. சிக்கலான பொருள்களை வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எழுத வேண்டும்.
2. தேவைக்கு அதிகமாக சொற்களையோ தொடர்களையோ பயன்படுத்தக்கூடாது.

4.தொடர்புடைய சொற்களையே பயன்படுத்த வேண்டும் நிகழ்காலத்திலோ இறந்த காலத்திலோ செய்தியை எழுதிக் கொண்டு இருந்தால் அந்த காலங்களை மாற்றி எழுதி விடாமல் கவனமாக எழுத வேண்டும்.

5. எதிர்மறையில் கூறுவதை தவிர்க்க வேண்டும்.

6. பெரும்பாலும் செய்வினை வாக்கியங்களாகவே அமைக்க வேண்டும்.

7.அனைவருக்கும் தெரிந்த சொல் சுருக்கங்களையே பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம்:**

ஐ.நா.சபை ஈ.வெ.ரா போன்றவை.

(2) “க்ஷாந்தி” என்றால் புரிந்து கொள்வது. நமக்கு வியாதி, விபத்து, தாரித்ரியம் முதலானவற்றால் உண்டாகிற க்‘டங்களை பொறுத்து கொள்வது ஒன்று. கஷ்டத்துக்கு நமக்கு என்ன பஞ்சம். மேலே மேலே தான் வந்து கொண்டு இருக்கிறதே. நமக்கு ஒருத்தர் கஷ்டத்தை கொடுக்கிற போது அவரையும் மன்னித்து அன்பை காட்டுவது இன்னொரு வித பெருமை. இது உண்மையில் நாம் செய்ய முயற்சிக்காக ஒரு காரியம். இதை முதலில் பழக்கம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

(3) “அநஸூயா” என்பது அத்ரி மஹரிீயின் பத்னியான மஹாபதிவிரதையின் பேர். உங்களுக்கு தெரிந்திருக்கலாம். இல்லையென்றால் இப்போது தெரிந்து கொள்ளவும். அஸூயை(பொறாமை) இல்லாதவள் அநஸூயை (அநுஸூயை என்றால் வேறு அர்த்தமாகிவிடும்). நம்மை விட ஒருத்தன் நல்ல நிலையில் இருந்தால் வயிற்றெரிச்சல் படக்கூடாது. இருந்தால் பொறாமைக்கு பதிலாக பெருமை படுவோமே. “அவன் நம்ம பையன் நன்னா இருக்கான்” இப்படி சிலபேர் சொல்லிக் கேட்டதில்லையா. பொறாமையின்மைதான் அநஸூயை. முதலில் சொன்ன அன்பு எல்லாரிடமும் காட்ட இருக்க வேண்டியது.

இரண்டாவதாக சொன்ன பொறாமை நமக்கு இடைஞ்சல், தப்பு பண்ணுகின்றவனிடம் இருக்கவேண்டிய குணம். பொறாமை இன்மை நம்மை விட மேல் ஸ்தானத்தி லிருக்கின்றவனிடம், உயர்ந்திருக்கிறவனிடம் (நம்மை காட்டிலும் யோகியத்தில் குறையாதவனாக இருந்தாலும் கூட) நமக்கு மேல் ஸ்தானத்துக்கு போய் விட்டான் என்றால் அஸூயைப்படக் கூடாது. பூர்வ ஜன்மாவில் நம்மை விட புண்ணியம் பன்னிருப்பவன். ஏதோ அதிர்‘டம் என்று அவனை கருதவேண்டும். பகவான் அருள் அவனுக்கு இருக்கிறதோ என்னவோ என்று மனஸைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(4) “சௌசம்” என்பது “சுசி” என்பதை வைத்து ஏற்பட்டது. “சுசி” என்றால் சுத்தம். ஸ்நானம் மடி வஸ்திரம், ஆஹார நிர்ணயம் முதலான அசாரங்கள் எல்லாம் சௌசம என்பதில் வரும்(ரயிலில் கழுவிடத்திற்கு “ஸௌசாலயா” என்று டாய்லட்டுக்கு இந்தியில் போர் போடுவதை பார்த்திருப்பீர்களே. சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் இடம் ஆனால் நம் அவ்வாறு செய்வதில்லை) “சுத்தம் சுகம் தரும், சுத்தம் சோறு போடும்” என்று நிறைய படிக்கிறோம், சொல்கிறோம், எழுதுகிறோம் அதோடு சரி. வெளியிலே நன்றாக சுத்தமாக இருக்கிறவனைப் பார்த்தாலே நம் மனசு சுத்தமாயிருக்கும். அவனிடம் ஒரு அன்பு மரியாதை மதிப்பு எல்லாம் ஏற்படுமே.

(5) “அநாயாஸம்” என்பது ஆத்ம குணங்களில் அடுத்தது. ஆயாஸத்துக்கு எதிர்ப்பதம் அநாயாஸம் லைட் டாக எடுத்துக்கொள்வது. “இந்த டெண்டுல்கர் எப்படி அனாயசமாக நூறு அடிச்சான்யா” ஆயாஸம் இல்லாமல் அதாவது எதையுமே ஒரு சுமையாக எடுத்துக் கொண்டு க‘டப்படாமல், லைட்டாக லேசாக அதை அணுகுவது ஆநாயாஸம். எப்போதும் உர்ரென்று இருந்து கொண்டு, வாழ்க்கையில் “எல்லாமே “கஷ்டம்” என்று புலம்பி நேர்ந்து கொள்ளாமல் கடினமாக தீவிரத்தோடு செய்யாமல், நிம்மதியோடு லேசாக செய்வது. இப்படி செய்வதிலேயே ஆயாஸப்பட்டுகொண்டு செய்வதைவிட பலமடங்கு சுலபமாகவே வேலைசெய்வது விடலாம். பதட்டம் இல்லாமல் பண்ணுவது அநாயாஸம். “பட பட” என்று செய்தால் நம்மையும் கசக்கிக் கொண்டு மற்றவர்களையும் நசுக்கிக் கொள்வது தான் மிஞ்சும். காரியம் நகராது.

அநாயாஸம் சாதாரண வி‘யமல்ல. அது ஒரு ரொம்ப மகத்தானது அலட்டிக் கொள்ளாமல் இருக்கிற குணம் அநாயாஸம். தானும் சிரமப்படாமல் மற்றவர்களையும் சிரமப்படுத்திக் கொண்டிராமால் இருப்பது அநாயாஸம். நாம் இது மாதிரி இருக்கும் ஒன்று இரண்டு பேரை லட்சியம் செய்வதில்லையே.

அனேக கர்மாநூடங்கள் உடம்பால் சிரமப்பட்டு செய்ய வேண்டி இருக்கின்றது. சிரத்தம் என்றால் மதியம் இரண்டு மணிமுதல் மூன்று மணிவரை பட்டினி கிடக்க வேண்டும். ஒரு யாகம் என்றால் அதில் நிறைய சரீர சிரமம் இருக்கின்றது. அப்படியும் நிறைய பேர் சந்தோஷத்தோடு அதில் ஈடுபடுவது மதிக்கப்பட வேண்டிய விஷயம். சிரமம் என்றால் உடம்பினால் மட்டுமல்ல. மனசினால் சிரமப்படாமல் இருப்பதாய் தான் முக்கியமாக குறிப்பிடுகிறேன். எந்தக் காரியமானாலும் விக்கினங்கள், தடைகள் ஏதாவது வரத்தான் வரும். அதற்காக மனதை கலங்க விடாமல் திடச்சித்தோடு ஈடுபடவேண்டும். எல்லாம் பகவான் செயல் என்று மனசிலே பாரம் இல்லாமல் இருக்க வேண்டும்.

சங்கீத வித்வான் அநாயாஸாமாக உச்சத்தாயிலே ஆலாபனை பன்னீரார் என்றால் என்ன அர்த்தம்? கஷ்டத்தையே அமுக்கி தனக்கு சாதகமாக்கி, சுலபமாகி கொண்டுவிட்டார் என்று தானே அர்த்தம். சிரமமான வாழ்க்கையை அப்படியே பண்ணிக் கொள்வது தான் அநாயாஸம்.

(6) “மங்களம்” என்றால் திருப்தி, சுகம். ஆனந்தமாக அதிலேயே ஒரு கம்பீரத்தோடு தூய்மையோடு ஆனந்தமாக இருந்து கொண்டிருப்பது தான் மங்கலம் எதற்கெடுத்தாலும் சல்லென்று எரிந்து விழாமல் ஆஹா என்று எப்போதும் சந்தோசமாக இருக்க வேண்டும். இதுதான் இந்த உலகிற்கே நாம் செய்கின்ற பெரிய ஒத்தாசை, பெரிய தொண்டு. பணத்தை வாரி கொடுப்பதை விட, வேறு சேவைகள் பண்ணுவதை விட நாம் போகின்ற இடமெல்லாம் நம் மங்கலத்தாலேயே ஆனந்தத்தை உண்டாக்கி கொண்டிருப்பது தான் மற்ற சீவருக்கு பெரிய தொண்டு

லேசாக எதையும் சாதிப்பது அநாயாஸம் போகிற இடமெல்லாம் தீபம் மாதிரி ஒளியை ஆனந்தத்தை கொடுப்பது மங்கலளம்.

தாம் ஒரு இடத்துக்கு போனால் மற்றவர் அறியும் படியாக தான் மட்டுமே எல்லாம் தெரிந்தவன் மாதிரி மற்றவர்களை குற்றம் கண்டுபிடிக்க வந்துவிட்டான் என்று பேர் எடுக்காமல் அவனா ஆசாமி அருமையான ஆளு, எப்பவும் எல்லோரோடும் ஜாலியா சிரிச்சுக்கிட்டே சந்தோ‘மா இருக்கிறவன் ஆச்சே. அவன் இருக்கான் என்றால் கலை கட்டுகிறது என்று சொல்லும் படியாக நடப்பது எங்கும் நாம் சந்தோஷத்தை விருத்தி பண்ண வேண்டும் நாமும் மங்கலமாக இருந்து கொண்டு பொங்கும் மங்கலம் எங்கும் தங்குமாறு செய்ய வேண்டும்.

(7) “அகார்ப்பண்யம்” லோபித்தனம், கருமித்தனம் இல்லாமல் தான தர்ம சிந்தனையோடு இருப்பது அகார்ப்பண்யம் மனசார வாரிக் கொடுக்கிற குணம் வேண்டும்.

அர்ஜுனன் ரொம்பவும் மனசு உடைஞ்சி தளர்ந்து போய் தேர்த்தட்டிலே உட்கார்ந்து, “யுத்தம் பண்ண மாட்டேன்” ஆளை விடு என்று அழுதபோது அவனுக்கு “கார்பண்ணிய தோஷம்” ஏற்பட்டதாக கீதையில் வருமே. அந்த இடத்தில் தன்னையே ரொம்பவும் தாழ்த்திக் கொண்டு தீனமாக போய்விட்டவன் என்று அர்த்தம் தன் வி‘யத்தில் தான் லோபியாகி விட்டான் என்று அர்த்தம்.

அகார்ப்பண்யம் என்றால் இப்படி தீணனாக, நோஞ்சானாக, கையாளாகாதவன் ஆக இல்லாமல் தீரனாக நல்ல உற்சாக புருஷனாக, மானஸ்வியாக இருப்பது என்றாகும்.

(8) “அஸ்க்ருஹா” அ‘ட குணத்தில் கடைசி. “ஸ்ப்ருஹா” என்றால் பற்றின்மை, ஆசையின்மை . அத்தனை கெட்டதுக்கும் ஆணிவேராக இருப்பது ஆசைதான். ஆனால் அதை அடியோடு வெட்டுவது தான் முடியவில்லை. ஸம்ஸ்காரங்களைப் பண்ணி பண்ணி அவற்றோடு அஷ்ட குணங்களையும் சேர்த்துச் சேர்த்து அப்பியாசம் பண்ணிக்கொண்டு போகும் போது கடைசியில் இந்த ஆசையின்மை, பற்றின்மை, “அஸ்ப்ருகா” என்பது பூர்த்தியாக அனுபவத்தில் வருகிறது.

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு” - என்று வள்ளுவர் கூறினார்.

இப்படி ஈஸ்வரன் என்ற பற்றானை பற்றிக்கொண்டு மற்ற பற்றுக்களை விட்டு விட்டால் மட்டும் போதாது அப்புறம் அந்த ஈஸ்வரனுடன் பற்றைக் கத்தரித்து விட வேண்டும் என்று இன்னும் ஒரு படி மேலே போய்விட்டார் திருமூலர்.

“ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்”

ஆசைதான் தாகம் “வேட்கை” என்று புத்தர் சொன்னார். “ஜலம் வேண்டும் வேண்டும்” என்று தாகத்தில் பறக்கிற மாதிரி ஆசை வயப்பட்டுப் பறப்பதை “திருஷ்ணா” என்பார்கள். பிராகிருதத்தில் இதையே “தன்ஹா” என்று புத்தர் சொன்னார். ஆசையைப் போக்கடித்துக் கொள்வது தான் புத்தருடைய முக்கியமான உபதேசம். இது அஷ்ட குணங்களில் கடைசி. முதலில் சொன்ன தயை தான் கிறிஸ்து மதத்துக்கு ஜீவநாடி.

இப்படி ஒவ்வொன்றை ஒவ்வொரு மதத்தில் ரொம்பவும் அழுத்தம் கொடுத்துச் சொன்னாலும் இந்த அஷ்ட குணங்களையும் தான் கிறிஸ்து, புத்தர், நபி, ஞான, கன்பூசியஸ் இன்னும் என்னென்ன மதங்கள் இருக்குமோ அவை எல்லாவற்றின் ஸ்தாபகர்களும் சொல்லி இருக்கிறார்கள். நேராக அவர்கள் இந்த எட்டைச் சொல்லாமல் இருந்தாலும் கூட மநுஷ்யானவன் இந்த குணங்கள் இல்லாமல் இருப்பதை எந்த மத ஸ்தாபகரும் ஆதரித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

### 4.3. உரையாடல் உத்திகள்

நல்ல உத்தி நுணுக்கங்கள் இல்லை என்றால் நாவல் சிறப்பாக அமையாது எனலாம். பொதுவாகக் கதை சொல்லும் முறையையே உத்தி என்று திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆசிரியரின் வெற்றிக்கும் தோல்விக்கும் கதை நுட்பத் திறன்களே காரணமாக அமைகின்றன.

**தலைப்புப் பொருத்தம்**

கதை தலைப்பு கதை பொருளின் அடிப்படையிலோ, பாத்திரங்களின் பெயராலோ அல்லது இடப்பெயராகவோ அமைவது உண்டு. கதை தலைப்பு கதையின் உள்ளீட்டை ஒருவராக சுருக்கி தருவதாக இருக்க வேண்டும் என்பர் ஆய்வாளர்கள்.

இந்நாவலின் தலைப்பு கதையின் இயக்கத்திற்கு முக்கிய காரணமாக அமையும் இரு பாத்திரங்களின் பெயராலேயே வழங்கப்பட்டுள்ளது. இந்நாவலின் மோகன முதலியாரும் சுந்தர முதலியாரும் நண்பர்கள். இருவரும் இணைந்து நடத்தும் கம்பெனியில் நடக்கும் கொலையும், அதை அடுத்த சம்பவங்களுக்கு தான் கதை ஆகும்.

இந்நாவலுக்கு, கொலை செய்தவரும், கொலை செய்யப்பட்டதாக கருதப்படுபவரும் என இரண்டு பாத்திரங்களின் பெயர்கள் தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது மிகவும் பொருந்துகிறது எனலாம்.

**தொடக்கம்**

ஒரு நாவலின் தொடக்கம் வாசகர்களுக்கு தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இந்நாவலின் கதையின் தொடக்கம் உரையாடலாக அமைந்துள்ளது. விசாலாட்சி தன் தந்தையிடம் உரையாடும் காட்சியில் இந்நாவல் தொடங்குகிறது.

**முடிவு**

எதிர்பாராத முறையில் முடிவு அமைந்தால் சுவையும், நிறைவும் ஏற்பட வாய்ப்பு மிகுதி. இந்நாவலின் சுபமான முடிவே தரப்பட்டுள்ளது. பூபதி முதலியாருக்கும் விசாலாட்சிக்கும் திருமணம் நடைபெறுவதாக கதை இனிதே முடிவடைகிறது பொய் தோற்க்கிறது உண்மை வெல்கிறது என்பதை கதையின் முடிவு காட்டுகிறது.

**உரையாடல்**

கதையின் வளர்ச்சிக்கு உரையாடல்கள் தூண்டுகோள்கள் ஆகின்றன. உரையாடல்களால் கதை ஓட்டம் சிறந்து காணப்படுகிறது. கதை மாந்தர் தமக்குத் தாமே பேசிக் கொள்வதன் மூலம் அப்பாத்திரத்தின் பண்பை அறிந்து கொள்ள முடியும். லீலாவதி, பூபதி முதலியார் மீது கொண்டுள்ள காதலைத் தனக்குத்தானே பேசிக் கொள்வதில் வெளிப்படுத்துகிறாள்.

துப்பறியும் நாவல் என்பதால் வினாவாக அமைந்த உரையாடல்கள் மிகுந்து காணப்படுகின்றன. துப்பறிய வந்த கோவிந்தனிடம் வடக்குத்தியான், நீ யார்? எங்கே வந்தாய்? எப்படி வந்தாய்? என்று பல கேள்விகளைக் கேட்கிறார். இவ்வாறு உரையாடல்களும் இந் நாவல்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

**பின்நோக்கு உத்தி**

கதையின் முன்னாள் நடந்த நிகழ்ச்சிகளைப் படைப்பிலக்கியத்தின் இடையில் புகுத்துவது பின்நோக்கு உத்தியாகும். இது கதையில் கட்டுக்கோப்பையும் படிப்போரிடம் ஆர்வத்தையும் உருவாக்கிச் செல்லும்.

## 4.4 சொற்பொழிவு திறன்கள்

சொற்பொழிவு திறன்கள் அவை ஏன் குழந்தைகளுக்கு முக்கியம்? 74 சதவீதம் மக்கள் பொதுவில் பேசும் பயத்தால் பாதிக்கப்படுகின்றனர் என்பது உங்களுக்கு தெரியுமா? சந்தேகத்திற்கு இடம் இன்றி, பொது இடங்களில் பேசுவது நம்மில் பலரைப் பற்றதையும் கவலையையும் உண்டாக்கும். இருப்பினும், இந்த பயத்தை போக்க உங்கள் பிள்ளைகளுக்கு

நீங்கள் உதவலாம் என்பது நல்ல செய்தி அவர்களின் வாழ்க்கையின் ஆரம்பத்தில் பொதுப் பேச்சுக்கலையை வெளிப்படுத்துவதன் மூலம் நீங்கள் அவ்வாறு செய்யலாம். இது அவர்களின் சொற்பொழிவு திறன்களை வளர்க்க உதவுகிறது மற்றும் கூட்டத்தினரிடையே தனித்து நிற்க அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் குழந்தைகளுக்கு நல்ல சொற்பொழிவு திறன் அவசியம். வலுவான பேச்சுத்திறன் கொண்ட குழந்தைகள் தங்கள் கருத்துகளை சரியான முறையில் தெரிவிக்க முடியும். அவர்கள் பயனுள்ள மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் பேச்சுகள் அல்லது விளக்க காட்சிகளை வழங்க முடியும். இது அவர்களின் சகாக்களுடன் தொடர்பு கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் ஒரு பெரிய நேர உதவியாகவும் வருகிறது. வலுவான சொற்பொழிவு திறன்களுடன், உங்கள் குழந்தைகள் தங்கள் கருத்துகளை பற்றி பேச மேடைக்கு செல்வதில் வெட்கப்பட மாட்டார்கள், மேலும் இது, நீங்கள் யூகிக்க கூடியது போல, மற்றவர்களை விட அவர்களுக்கு ஒரு திட்டவட்டமான விளிம்பை கொடுக்கும். காஜியாபாத்தில் உள்ள சிறந்த பள்ளிகளில் ஒன்றாக இருக்கும் குருகுல் தி ஸ்கூலில், எங்கள் மாணவர்களின் சொற்பொழிவு திறன்களை மேம்படுத்தவும், அந்த திசையில் அவர்களுக்கு உதவும் செயல்களில் அவர்களை ஈடுபடுத்தவும் நாங்கள் உந்துதல் பெறுகிறோம். இருப்பினும், உங்கள் வாரிசுகளை ஊக்குவித்து அவர்களின் பேச்சுத் திறனை வளர்க்க உதவுமாறு பெற்றோரை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இன்றைய கட்டுரையில் குழந்தைகளின் சரியான வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை உறுதி செய்வதில் இந்த திறன்கள் எவ்வாறு சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை நாம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம். மேலும் அறிய படிக்கவும் முக்கியமான வாழ்க்கைத் திறன்களை ஈர்க்கிறது.

குழந்தைகள் அறிமுகம் இல்லாத சூழ்நிலைகளில் வெளிப்படும் போது அவர்கள் பொதுவாக பயம் மற்றும் சுய சந்தேகத்தை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கையில் குழந்தைகள் பொதுவில் பேச வேண்டிய பல்வேறு சூழ்நிலைகள் உள்ளன. அவர்கள் புதிய நபர்களுடன் பேச கூச்சமாக இருந்தால் அல்லது மேடையை எதிர்கொள்ள ஆர்வமாக இருந்தால், அவர்கள் எந்த சவாலான சூழ்நிலைகளையும் சந்திக்கும் போதெல்லாம் மன அழுத்தத்தை உணர வாய்ப்புள்ளது. இருப்பினும், அவர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட சொற்பொழிவு திறன்களைக் கொண்டிருந்தால், அவர்கள் தங்கள் அச்சத்தின் பார்வையில் சரியாகப் பார்க்கவும், அவற்றைச் சமாளிக்கவும் சிறந்த நிலையில் இருப்பார்கள். இவ்வாறு, அவர்களின் பேச்சுத் திறன் மீது உழைப்பதன் மூலம், சிறு வயதிலேயே தங்களின் தடைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வலிமையைப் பெறுகிறார்கள்.

தொடர்பு திறன்களை பலப்படுத்துகிறது உங்கள் குழந்தையின் சொற்பொழிவு திறன்களை வளர்க்க நீங்கள் பணிபுரியும் போது, அது அவர்களின் வாய்மொழி மற்றும் சொல்லாத தொடர்பு திறன்களை மேம்படுத்த உதவுகிறது. தனிப்பட்ட உறவுகள் மற்றும் சமூக தொடர்புகளில் இந்த திறன்கள் அவசியம். புதிய விஷயங்களையும் தலைப்புகளையும் கற்றுக்கொள்ளும் செயல்

முறையை எளிதாக இது உதவும். அவர்களின் அறிவாற்றலும் விரிவடையும். உங்கள் குழந்தை அவர்களின் எண்ணங்களையும் செயல்களையும் எவ்வாறு சரியாக வார்த்தைகளில் வைப்பது என்பதைக் கற்றுக் கொள்வார். அவர்கள் தங்களைத் தெளிவான முறையில் வெளிப்படுத்தும் சிறந்த நிலையில் இருப்பார்கள்.

நம்பிக்கையை அதிகரிக்கிறது குழந்தைகளில் சுயமரியாதை உணர்வை அதிகரிப்பதிலும், சுய நினைவை கடக்க அவர்களுக்கு உதவுவதிலும் பொது பேச்சுத்திறன் பெரும் பங்கு வைக்கிறது மக்கள் முன்னின்று பேசும் தைரியம் அவர்களுக்கு கிடைக்கிறது. இது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் மற்றும் அவர்களின் வாழ்க்கையில் நீடித்த நேர்மறையான விளைவை ஏற்படுத்தும். அவர்கள் விவாதங்கள், குறும்படங்கள் மற்றும் பிற பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்களில் நம்பிக்கையுடன் பங்கேற்க முடியும். அவர்கள் எவ்வளவு அதிகமாக தொடர்பு கொள்கிறார்கள் மற்றும் பங்கேற்கிறார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் நம்பிக்கையை பெறுவார்கள்.

கல்வி செயல் திறனை மேம்படுத்துகிறது. பொதுவில் பேசும் கலையை சரியான நேரத்தில் கற்றுக் கொள்ளும் குழந்தைகள் பொதுவாக கல்வியில் சிறந்து விளங்குவதைக் காணலாம் ஏனென்றால் சொற்பொழிவு திறன்களும் தர்க்க ரீதியான மற்றும் பகுப்பாய்வு சிந்தனையுடன் தொடர்பைக் கொண்டுள்ளன. மேலும், பொது பேச்சு மூலம், குழந்தைகள் தங்கள் விளக்கக் காட்சித்திறன், வற்புறுத்தும் திறன், கேட்கும் திறன் மற்றும் பேச்சுவார்த்தை திறன் ஆகியவற்றைக் கூர்மைப்படுத்துகிறார்கள். அவர்களின் விமர்சன சிந்தனை மேம்படுகிறது. மேலும் அவர்கள் எண்ணங்களின் வெளிப்பாட்டில் அதிக தெளிவு மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்த கற்றுக் கொள்கிறார்கள். இவை அனைத்தும் இறுதியில் அவர்களின் கல்வி செயல் திறனை ஒட்டுமொத்தமாக மேம்படுத்த உதவுகிறது.

### 4.4.1 சொற்பொழிவு திறன்களின் முக்கியத்துவம்

உங்கள் தொழிலை முன்னேற்றம் போது அல்லது பதவி உயர்வு பெறும்போது பேசும் திறன் ஒரு முக்கிய காரணியாக இருக்கும். சிறந்த பொது பேசும் திறன்களில் உதவியுடன், உங்கள் மற்ற திறன்கள் மற்றும் திறன்களை நீங்கள் வெளிப்படுத்தலாம். பிறர் முன் நம்பிக்கையுடன் பேசுவது உங்கள் தொழிலில் கவனிக்கப்படவும், முன்னேறவும் உதவும். பொதுவில் அல்லது எந்த அளவிலான பார்வையாளர்கள் முன்னிலையிலும் சரளமாக பேசக்கூடிய பேச்சாளர்கள் பெரும்பாலும் கூட்டங்கள் மற்றும் விளக்க காட்சிகளை வழிநடத்தும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

### 4.4.2. தனிநபரின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்

ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்த சரியான காரணங்கள் மற்றும் காரணங்களுக்காக வாதிடும் திறனை மேம்படுத்துதல் ஒரு நல்ல பேச்சாளரின் திறன்களை வளர்ப்பதற்கான உதவி

குறிப்புகள் சிறந்த சொற்பொழிவாளராக மாறுவதற்கான திறன்களை வளர்ப்பதற்கு நீங்கள் கருத்தில் கொள்ளக்கூடிய சில முக்கியமான குறிப்புகள் மற்றும் ஆலோசனைகள் ஆகும்.

### 4.4.3 சிறந்த உரைகளை படிக்கவும் எழுதவும்

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட எழுத்தைத் தயாரித்து வாசிப்பது பொது பேச்சுத் திறனை வளர்க்க உதவும். பொருத்தமானத் தலைப்பை தேர்ந்தெடுத்து அதில் ஐந்து நிமிட உரையை எழுதுங்கள். உங்கள் பேச்சை அறிமுகம், உடல் மற்றும் இறுதி முடிவு போன்ற பல பகுதிகளாக பிரிக்கவும். அறிமுகத்தில் குறிப்பிட்ட விவரங்களுக்குச் செல்வதற்கு முன், பார்வையாளர்களுக்கு நீங்கள் வழங்கும் தலைப்பின் கண்ணோட்டம் அடங்கும் முடிவில் பேச்சின் அறிமுகப் பகுதி தொடர்பான இறுதி எண்ணங்களும் உள்ளடக்கத்தின் முக்கிய பகுதிகள் ஆகும்.

## 4.5 நேர்காணல்

நேர்காணல் என்பது கேள்விகள் கேட்டு பதில்களை பெறும் ஒரு உரையாடல் ஆகும். நேர்காணல் என்பது பொதுவாக கேள்விகள் கேட்கும் ஒருவரும் பதில்கள் தருபவர் ஒருவருமாக ஒன்றுக்கு ஒன்று உரையாடலாகவே இருக்கும். நேர்காணல் பல்வேறு துறையில் பல்வேறு வகையில் காணப்படுகின்றன.

செய்திக்கு மூலமாக இருப்பவரை அல்லது தானே செய்தியாகும் ஒருவரை நேர்காணல் கொள்வது செய்தி திரட்டுவதில் முக்கியமான ஒன்றாகும். செய்தியாளராக இருப்பவர் நேர்காணல் கொள்வதில் திறன் உடையவராக இருக்க வேண்டும். நேர்காணல்கள் இல்லாமல் செய்திகள் இல்லை எனும் அளவிற்கு செய்திகளை நேர்காணல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

### விளக்கம்

நேர்காணல் என்பது ஒருவரோடு தொடர்பு கொண்டு அவர் மூலமாக விவரங்களைக் கேட்டு பெறுவதாகும். இது நேரிலோ அல்லது தொலைபேசி வழியாகவோ அல்லது கடிதம் வழியாகவோ அல்லது புதிய தகவல் தொடர்பு சாதன வழியாகவோ இருக்கலாம். ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி நேர்காணல் என்பதற்கு “மனிதர்கள் நேருக்கு நேராக சந்தித்தல் அதாவது கூட்டம் நடத்த காணுதல் செய்தி தாளில் பணியாற்றுகின்ற ஒருவரும் வெளியிடுவதற்காக தகவல்களை தர அவர் தேடும் ஒருவரும் கூடி பேசுதல்” என்று பொருள் தருகிறது.

### நோக்கம்

நேர்காணல் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு நோக்கத்துடன் நடத்தப்படும். நோக்கமற்ற நேர்காணல் பொழுதுபோக்குப் பேச்சு போல் ஆகிவிடும். நேர்காணல் செய்பவர் நேர்காணலின் நோக்கம் குறித்துத் தெளிவாக இருக்க வேண்டும். பொதுவாக நேர்காணல் நடத்துவதற்கான நோக்கங்கள் சில உள்ளன. அவை,

**நடப்பு அறிதல்**

நடந்து கொண்டிருக்கும் சில சுவையான நிகழ்வுகள் குறித்த விவரம், கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்.

**நிகழ்வு விவரம் அறிதல்**

நடைபெறப்போகும் முக்கிய நிகழ்வு குறித்த விவரம், கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்.

**கருத்து வெளிப்படுத்துதல்**

தலைவர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் போன்றவர்களின் ஆளுமைத் திறன், தனித்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்த நேர்காணல் செய்தல்.

**நேர்காணல் வகைகள்**

நேர்காணல்கள் எப்படி வேண்டுமானாலும் அமையலாம். இருப்பினும் பொதுவாக நேர்காணல்கள் கீழ்காணும் தலைப்புகளில் கீழ் வடிவமைக்கப்படுகிறது.

**தெருவில் காண்போர் நேர்காணல் -**

தெருவில் காணும் ஒருவரிடம் ஏதாவது ஒன்றைப் பற்றி கருத்தறிய நேர்காணல் செய்தல்.

**தற்செயல் நேர்காணல் -**

திட்டம் எதுவுமில்லாத நிலையில் குறிப்பிடத் தகுந்தவர்களை எதிர்பாராமல் சந்திக்கும் நிலையில் நேர்காணல் செய்தல்.

**ஆளுமை விளக்க நேர்காணல் -**

புகழ் பெற்ற ஒருவரையோ அல்லது சோதனை முயற்சியில் சாதனையாளராக உள்ளவரையோ அவரது ஆளுமை திறனை வெளிக்கொணர நேர்காணல் செய்தல்.

**செய்தி நேர்காணல் -**

செய்தியைப் பெறும் நோக்கில் செய்தி தரும் ஒருவரிடம் நேர்காணல் செய்தல்.

**செய்திக் கூட்ட நேர்காணல் -**

செய்தி அளிப்பதற்காகற்காக அழைக்கப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் அந்த செய்தி தொடர்பாக நேர்காணல் செய்தல்.

**செய்தி சுருக்க நேர்காணல் -**

அரசு அல்லது அமைப்பு தான் வெளியிட விரும்பும் செய்திக் குறிப்பை அளிக்கும் போது அது குறித்த நேர்காணல் செய்தல். (இம்முறையில் அதிகமாக கேள்விகள் கேட்கப்படுவதில்லை)

**சிற்றுண்டிக் கூட்டம் நேர்காணல் -**

முக்கிய நகரங்களில் செய்திச் சுருக்கம் அளிக்க சிற்றுண்டி அளித்து அது குறித்த செய்தியையும் நெருக்கமான முறையில் பரிமாறிக் கொள்ளும் நேர்காணல்.

**தொலைபேசி நேர்காணல் -**

ஒரு இடத்திலிருந்து கொண்டு குறிப்பிட்ட நபரிடம் தொலைபேசி வழியாக நேர்காணல் செய்தல்.

**அடைகாத்தல் நேர்காணல் -**

சில வேலைகளில், கொள்கைகளை, தங்கள் கருத்துகளை எப்படியாவது திணிக்கும் சூழலை உருவாக்குகிறார்கள். இவற்றிற்கான நேர்காணல் அடைகாத்தல் நேர்காணல் என்று ஒதுக்கப்படுகிறது.

**பட்டம் பறக்க விடும் நேர்காணல் -**

செய்தியாளர் ஏற்பாடு செய்து நடத்தும் நேர்காணலில் சில முக்கியமானவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்களது கருத்துக்களை செய்தியாளர் கருத்து போல் வெளியிட செய்துவிடுவதுண்டு. இவ்வகை நேர்காணல் “பட்டம் பறக்க விடும் நேர்காணல்” எனப்படுகிறது.

**மின்னஞ்சல் நேர்காணல் -**

நவீன ஊடகமான இணையத்தில் மின்னஞ்சல் வழியாக சில குறிப்பிட்ட கேள்விகளை அனுப்பி பதில் பெரும் நேர்காணல்.

**நிகழ்ப்பட உரையாடல் நேர்காணல் -**

இணையத்தில் நிகழப்பட உரையாடல் மூலம் செய்யப்படும் நேர்காணல்.

**நேர்காணல் செய்தல் -**

நேர்காணல் கொள்பவரிடம் இருந்து நேர்காணல் செய்பவர் பல தகவல்களை வெளிக்கொண்டுவரும் தனி திறன் உடையவராக இருக்க வேண்டும். அவரிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவர் தனிப்பட்டு “இதனை வெளியிட வேண்டாம்” என்று கூறும் செய்திகளை வெளியிட்டு விடக்கூடாது. பொதுவாக நேர்காணலுக்கு திட்டமிடுதல், இணங்க

வைத்தல், தெளிவாக அறிதல், தொடர்பும் முயற்சி என்னும் நான்கு முக்கிய பங்குகள் இருக்க வேண்டும்.

**பயன்கள்**

நேர்காணலினால் பல நன்மைகள் கிடைத்தாலும் அவை கீழ்காணும் முக்கிய பயனைக் கொண்டுள்ளது.

- செய்திகளை உருவாக்குதல்
- வேறுபாடுகளை வெளிக் கொணர்தல்
- பொதுமக்கள் கருத்து உருவாக்குதல்
- அதிகாரப்பூர்வமான விளக்கங்கள் அறிய துணை செய்தல்
- கண்டுபிடிப்புகள், திட்டங்கள்
- சமுதாயத்தில் புகழ்பெற்றவர்கள் - வாசகர்கள் ஆகியோருக்கு இணைப்பாக இருத்தல்
- பல்வேறு கருத்துக்கள் வெளிவர வாய்ப்பாய் இருத்தல்
- சுவையான கட்டுரை கிடைத்தல்

**செய்யக் கூடியதும் - செய்யக் கூடாததும்**

நேர்காணலில் செய்யக்கூடியதும், செய்யக்கூடாததும் என்பதைச் செய்தியாளர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**செய்யக்கூடியது**

நேர்காணல் தருபவருடன் தொடர்பு கொண்டு ஒப்புதல் பெற்று இடம், நேரம் போன்றவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும். நேர்காணல் குறித்து திட்டம் தீட்டிக் கொள்ள வேண்டும். கேட்க வேண்டிய கேள்விகளையும் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

நேர்காணல் கொள்பவர் குறித்தும், நேர்காணலுக்கான பொருள் குறித்தும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நேர்காணலை ஆவலுடன் நடத்துவதுடன், சொல்வதை பொறுமையாக கேட்க வேண்டும். நல்ல உடையணிந்து செல்ல வேண்டும். கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில் போதாத நிலையில் அது குறித்த கூடுதல் கேள்விகள் கேட்க வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு செல்ல வேண்டும். நேர்காணலின் நோக்கத்தை தெளிவுபடுத்த வேண்டும். குறிப்புகள் சரியான முறையில் எடுக்க வேண்டும். எவற்றை வெளியிடுவது? எவற்றை வெளியிடக் கூடாது? என்பதில் தெளிவு வேண்டும். முடிந்தால் வெளியீட்டிற்கு முன்பு எழுதிய நேர்காணலைக் கொடுத்து, நேர்காணல் அழித்தவரிடம் ஒப்புதல் பெறலாம்.

**செய்யக் கூடாதது**

நேர்காணல் தருபவரை விட தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்க கூடாது. நேர்காணல் தருபவரிடம் அடிமை போல் நடக்கக் கூடாது அதே சமயம் ஆட்டிப்படைக்க நினைக்கவும் கூடாது. நேர்காணலின் போது அடிக்கடி இடையில் குறுக்கிடவோ, கூறும் கருத்துக்களை அலட்சியப்படுத்தவோ கூடாது. கருத்து முரண்பாடுகளையோ, உணர்வுகளையோ வேறுபடுத்தக் கூடாது. தேவையற்ற பேச்சுகளில் நேரத்தை வீணடிக்கக் கூடாது விவாதத்தை தவிர்க்க வேண்டும் தாமாக நேர்காணலை முடித்து கொள்ள கூடாது.

**நேர்காணல் கட்டுரை எழுதுதல்**

நேர்காணல் கட்டுரையை இப்படித்தான் எழுத வேண்டும் என்கிற நிலை இல்லை. இருப்பினும் கட்டுரை சுவையாக அமைவது செய்தியாளரின் எழுத்துத் திறமையில்தான் உள்ளது. பொதுவாக நேர்காணல் கட்டுரை எழுதுவதில் இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

**கேள்வி பதில் வடிவம்**

நேர்காணல் குறித்த ஒரு சிறிய முன்னுரை கொடுத்துவிட்டு நேர்காணல் நடந்தது நடந்தபடியே கேள்வி, பதில்களாக சொற்களை கூட மாற்றாமல் அப்படியே எழுதி விடுவது.

**4.6. வாய்மொழித் தேர்வு திறனை வளர்க்கும் நெறிகள்**

**4.6.1 வாய்மொழித் தேர்வு**

வாய்மொழித் தேர்வு அல்லது வாய்மொழிச் சோதனை என்பது பல பள்ளிகளில் உள்ள ஒரு நடைமுறையாகும். இதில் ஒரு தேர்வாளர் மாணவர்களிடம் வாய்மொழி வடிவத்தில் கேள்விகளை எழுப்புகிறார். தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு பாடத்தின் போதுமான அறிவை வெளிப்படுத்தும் வகையில் மாணவர் தேர்வாளரின் கேள்விக்கு பதில் அளிக்க வேண்டும்.

**4.6.2 வாய்மொழி தேர்வு திறனை வளர்க்கும் நெறிகள்**

இளநிலைப் பட்டம் என்பது, மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை தேவைப்படும் இளநிலைப் பட்டப் படிப்பு ஒன்றை வெற்றிகரமாக முடித்த பின் கிடைக்கும் ஒரு கல்வித் தகுதியைக் குறிக்கும் பட்டம் ஆகும். இப்படிப்புக்குத் தேவைப்படும் கால வேறுபாடு இப்பட்டங்களை வழங்கும் கல்வி நிறுவனங்களையும், பாடத் துறையையும் பொறுத்து அமையும். சில நாடுகளில் சில வகையான இளநிலைப் பட்டப்படிப்புகளுக்கு இன்னொரு இளநிலைப் பட்டம் முன் தேவையாக அமைவதால், அவ்வாறு பெறப்படும் பட்டங்கள் ஒரு இரண்டாவது பட்டமாகவும் அமைவது உண்டு. சட்டை இளவல், கல்வியியல் இளவல், இசையில் இளவல், மெய்யியல் இளவல், புனித இறையியல் இளவல் போன்ற பட்டங்கள் சில நாடுகளில் இரண்டாம் பட்டங்களாகவே வழங்கப்படுகின்றன.

ஐக்கிய ராஜ்யத்தின் கல்வி முறைமையிலும், அதன் செல்வாக்குக்கு உட்பட்ட பிற நாடுகள் சிலவற்றின் கல்வி முறைமையிலும், இளநிலைப் பட்டத்தில் சாதாரண பட்டம், சிறப்புப் பட்டம் என இரண்டு வகைகள் உள்ளன சிறப்புப் பட்டம் பெறுபவர்கள் தமது பெயருக்கு பின் பட்டத்தை குறிப்பிடும்போது அடைப்பு குறிக்குள் (சிறப்பு) என குறிப்பிடுவது உண்டு. சிறப்புப் பட்டம் பெறுவதற்குச் சாதாரண பட்டத்தை விட உயர்வான கல்வித்தரம் தேவைப்படுகிறது. சில பல்கலைக்கழகங்களில், சிறப்பு பட்டம் பெறுவதற்கு கூடுதலாக ஓராண்டு கற்க வேண்டும்.

### 4.6.3 வாய் வழி பரீட்சை

ஜனவரி 2012 வாய்வழித் தேர்வு (வாய்வழி தேர்வு அல்லது விவா வாய்ஸ் ஜெர்மன் மொழி பேசும் நாடுகளில் ரிகோ ரோசம்) என்பது பல பள்ளிகள் மற்றும் துறைகளில் ஒரு நடைமுறையாகும், இதில் ஒரு தேர்வாளர் பேச்சு வடிவத்தில் மாணவரிடம் கேள்விகளை எழுப்புகிறார். தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு, படத்தைப் பற்றிய போதுமான அறிவை வெளிப்படுத்தும் வகையில் மாணவர் கேள்விக்கு பதில் அளிக்க வேண்டும். வாய்வழிப் பரீட்சை ஒரு நிபுணரால் எழுதப்பட்ட ஆய்வு அறிக்கை அல்லது ஆய்வு கட்டுரை எனப்படும்.

### 4.6.4 வாய்மொழித் தேர்வுக் கண்ணோட்டம்

பல அறிவியல் திட்டங்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் வாய்மொழித் தேர்வு அல்லது வாய்மொழி மாற்றம் எழுத்துத் தேர்வுகள் ஆகியவற்றின் மூலம் திட்டத்தை முடிக்க வேண்டும். வழக்கமாக, படிப்பிற்கான வழிகாட்டிகள் அல்லது பாடத்திட்டங்கள் கிடைக்கின்றன. இதனால் மாணவர்கள் தேர்வில் இருக்கக்கூடிய பயிற்சி கேள்விகள் மற்றும் தலைப்புகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் தேர்வுக்குத் தயாராகலாம். ஆங்கிலம் பேசும் உலகில் இளங்கலைக் கல்வியில் வாய்மொழித் தேர்வுகளைப் பயன்படுத்துவது பற்றிய சிறிய ஆனால் வளர்ந்து வரும் இலக்கியங்கள் உள்ளன. சில மருத்துவப் பள்ளிகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான வாய்வழித் தேர்வுகளை அறிவை சோதிக்க பயன்படுத்துகின்றன. ஆனால் அந்த இடத்திலேயே பதில் அளிக்கும் திறனையும் சோதிக்கின்றன. மாணவர்கள் முனைவர் பட்டம் பெறுவதற்கு முன் வாய்மொழித் தேர்வு எடுக்க வேண்டும். சில பல்கலைக்கழகங்கள் எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வுகளை எடுப்பதற்கு அல்லது ஒரு திட்டம் அல்லது ஆய்வறிக்கையை முடிப்பதற்கான விருப்பத்தை அனுமதிக்கின்றன, ஆனால் எப்போதாவது, மூன்றும் பட்டப்படிப்புக்கு தேவைப்படும். வாய்வழித் தேர்வுகள் ஒரு ஆய்வறிக்கையின் பாதுகாப்பிலிருந்து வேறுபட்டவை, பிந்தைய கேள்விகள் ஆய்வறிக்கையின் தலைப்புக்கு மிகவும் குறுகியதாகவும் குறிப்பிட்டதாகவும் இருக்கும்.

பட்டதாரி மாணவர்கள் சிலர் சமயங்களில் வாய்மொழி தேர்வுகளுக்கு தங்கள் தேர்வாளர்களை தேர்வு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

சில நேரங்களில், வாய்வழித் தேர்வு பள்ளிகளில் கற்றல் குறைபாடுள்ள மாணவர்களுக்கான எழுத்து தேர்வுக்கு மாற்றாக வழங்கப்படுகிறது. டிஷ்கிராபியோ வளர்ச்சி ஒருங்கிணைப்பு கோளாறு அல்லது சொற்கள் அல்லாத கற்றல் கோளாறு போன்றவை. பெரும்பாலும் மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்கு எழுத்துத் தேர்வுக்குப் பதிலாக வாய்மொழித் தேர்வு நடத்த கூறுவது உண்டு.

வருங்கால விமானிகளுக்கான FAA மற்றும் CAA நடைமுறைச் சோதனையின் ஒரு பகுதியாக ஒரு தனியார் பைலட் வாய்வழித் தேர்வும் தேவைப்படுகிறது. மெர்ச்சண்ட் நேவி டெக் மற்றும் எஞ்சின் அதிகாரிகளுக்கான திறன் சான்றிதழை வழங்கும் நோக்கத்திற்காக ருமு இல் உள்ள கடல்சார் மற்றும் கடலோர காவல் முகமையால் வாய் வழி தேர்வும் நடத்தப்படுகிறது.

ஏபிஆர்எஸ்எம் டிரினிட்டி காலேஜ் ஆ∴ப் மியூசிக் மற்றும் லண்டன் காலேஜ் ஆ∴ப் மியூசிக் ஆகியவற்றால் நடத்தப்படும் இசை டிப்ளமோ தேர்வுகளின் ஒரு அங்கமாக உள்ளது.

### 4.6.5 வாய்மொழித் திறன்களை விளக்கும் நெறிகள்

வாய்மொழித் திறனை குறுகிய காலத்தில் தேர்ச்சி பெற முடியாது. விரும்பிய முடிவை அடைவதற்கு நீண்ட கால திட்டம், சரியான வழிகாட்டுதல் மற்றும் சரியான காலக்கெடு இருக்க வேண்டும். எனவே முன்கூட்டியே தொடங்குவதே சிறந்த வழி. மிக முக்கியமாக, படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஊயுவு இன் வாய்மொழிப் பிரிவில் பாரா ஒற்றைப்படை வாக்கியம் மற்றும் பாரா அனுமானம் ஆகியவை அடங்கும். இந்த தலைப்புகளின் அனைத்து கேள்விகளும் புரிதல் அடிப்படையிலானவை எனவே ஆரம்பத்தில் இருந்து வாசிப்புப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேர்வில் கலந்து கொள்ள திட்டமிட்டால், குறைந்தது ஒரு வருடத்திற்கு முன்பே புத்தகங்கள் மற்றும் நாவல்களைப் படிக்க தொடங்குங்கள். வாய்மொழித்திறன் பகுதியை சிறப்பாக தயாரிக்க முதலில் “ஏன்” மற்றும் “என்ன” என்பதை புரிந்து கொள்ளுங்கள். இந்தக் கட்டுரையில் வினாத்தாளின் வாய்மொழிப் பகுதி எந்த நோக்கத்திற்காக உதவுகிறது மற்றும் அதில் நாம் எவ்வாறு சிறந்த மதிப்பெண் பெறலாம்.

### 4.6.6 வாய்மொழி திறனின் முக்கியத்துவம்

மேலாண்மையின் அனைத்து துறைகளிலும் தகவல் தொடர்பு மிக முக்கியமான கருவியாக இருப்பதால், ஊயுவு என் இந்த பிரிவு ஒரு நபரின் ஆங்கில மொழித் திறனைச் சோதிக்கிறது. இதன் மூலம், ஒருவர் பின்வருவனவற்றை எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை பள்ளிகள் அளவிட விரும்புகின்றன.

கொடுக்கப்பட்ட தரவை (பத்தி) (வாக்கியம்) புரிந்து கொண்டு பின்வருவனவற்றை புரிந்து கொள்ளுங்கள்.

பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தம் வெளிப்படையான செய்திகளாக தெரிவிக்கப்பட்டது.

பத்தியின் அல்லது வாக்கியத்தின் மறைமுகமான அடி குறிப்புகள் இலக்கணத்தின் சரியான தன்மை (நிறுத்தக்குறிகள், பயன்பாடு போன்றவை)

சுட்டிக்காட்டப்படும் திசை முடிவு ஆகியவை ஆகும்.

அவரது பதிலைத் தேர்ந்தெடுப்பதற்கு முன், வழங்கப்பட்ட ஒவ்வொரு விருப்பங்களுக்கும் ஒரே மாதிரியான பகுப்பாய்வைப் பயன்படுத்துவதன் மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்க நிர்வகிக்கவும்.

**தொகுப்புரை**

சொற்பொழிவு முறைகளை அறிந்துகொள்வதன்வழி சொற்திறனை அதிகரித்துக்கொள்ள முடியும்

வாய்மொழித் தேர்வின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதன்வழி ஆளுமைப் பண்பை வளர்த்துக்கொள்ள முடியும்

நேர்காணலைப் பற்றி அறிந்துகொள்வதன் அவசியம் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது

## பயிற்சி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. உரையாடல் எப்படி அமைய வேண்டும்?
   (அ) வேடிக்கையாக (ஆ) நகைச்சுவையாக(இ) இரண்டும் (ஈ) இரண்டும் இல்லை
2. சமூக ஊடகம் வழக்கை எப்படி மாற்றுகிறது?
   (அ) எளிதாக (ஆ) கடினமாக (இ) வசதியாக (ஈ) சொகுசாக
3. குழந்தைகள் எக்குணத்தை வைத்திருந்தனர்?
   (அ) மந்தம் (ஆ) கோபம் (இ) துடுப்பு (ஈ) அழுகை
4. மனிதனின் குணங்கள் எத்தனை வகைப்படும்?
   (அ) ஐந்து (ஆ) ஆறு (இ) ஏழு (ஈ) எட்டு
5. அன்பு அருளுடைமை என்பது எதைக் குறிக்கும்?
   (அ) தயை (ஆ) காந்தி (இ) அநஸிய (ஈ) சௌசம்

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. உரையாடல் திறன் தடைகள் பற்றி விளக்குக.
2. மனிதனின் என் வகை குணங்கள் பற்றி குறிப்பிடுக.

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. சொற்பொழித் திறன்கள் பற்றி கட்டுரை வடிவில் விடை தருக.
2. வாய்மொழித்திறன் பற்றிய செய்திகளை தொகுத்துரைக்க.

**பார்வை நூல்கள்**

1. தமிழ் நடைக் கையேடு, 2001, பா. ரா. சுப்பிரமணியன் வ. ஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்) மொழி வெளியீடு, சென்னை

2. தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம், 2003. பொற்கோ, பூம்பொழில் வெளியீடு, சென்னை

3. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? 2000, அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை

4. மொழிப்பயன்பாடு, 2004, கா. பட்டபிராமன், நியூ செஞ்சுரி புக்அவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை

5. தவறின்றித் தமிழில் எழுத? 2004 மருதூர் அரங்கராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை

**இணைய இணைப்புகள்**

1.Tamil Heritage Foundation–www.Tamilheritage.org http://www.tamilheritage.org

2.Projrct Madurai – www.projectmadurai.org

3.Tamil E – Books Downlaods – tamilebooksdownloads.blogspot

4.Tamil Books on line – books.tamil cube.com

# அலகு-5

## அலகின் நோக்கம்

- கட்டுரை எழுதுவதற்கான வரைமுறைகளை அறிந்து கொள்ளுதல்
- நடைமுறை சார் மொழித்திறன்களை அறிந்து கொள்ளுதல்
- கட்டுரையின் இயல்புகளைத் தெரிந்து கொள்ளுதல்

## அலகில் இடம்பெறுபவை

கட்டுரை வரையறை - கட்டுரையின் இயல்பு - சுருக்கமான எளிமையான மொழிப் பயன்பாட்டு முறைகள். மொழி பயிற்சி வினாக்கள்

### 5.1 கட்டுரை வரையறை

கட்டுரை வடிவில் எழுதுவதில் எழுதுகின்ற பொழுது எழுதுபவர் மிகவும் சுதந்திரமாகக் கட்டுரையை அமைத்துக் கொண்டு நேர்காணல் தந்தவர். சூழ்நிலை போன்றவைகள் பற்றி விவரித்து, இடையிடையே நேர்காணல் தந்தவர் சொன்ன மேற்கோள்கள் கொடுத்து கட்டுரை அமைக்கலாம். செய்தியாளர் கவனித்தவற்றுடன் கருதுபவைகளையும் எழுதலாம். இருப்பினும் கட்டுரை எழுதுவதில் சில வழிகாட்டல்களையும் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றில்,

- அறிமுக உரை
- நேர்காணலின் கருதுகோள்
- பதில்கள்
- தொடர்
- மேற்கோள்கள்
- நேர்காணல் விவரங்கள்
- புகைப்படங்கள்

ஆகியவை அவசியம் இருக்கவேண்டும்.

### 5.1.1 கட்டுரை வடிவம்

பல நூற்றாண்டுகளாக செய்யுள் வடிவமே தமிழ் இலக்கியங்களிலும், தத்துவங்களிலும் பயன்படுத்தப்பட்டது. உரை வடிவம் இலக்கணங்களுக்கும், செய்யுள் விளக்கம் கூறவதற்கும். சாசனங்கள் கட்டுரை பதிவு செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. 20ஆம்

நூற்றாண்டிலேயே உரை வடிவம் வளர்ச்சி பெற்று, மக்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கும் பயன்படுகின்றது. கட்டுரையே உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவம் ஆகும்.

கட்டுரையே உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவம் ஆகும். ஒலிப்பு (உதவித்தகவல்)) பகுப்பாய்வுக்கான ஒரு வடிவம்" என்றும், விவாதித்து விபரிப்பதே" அதன் பண்பு என்றும் குறிப்பிடுகின்றார்.

## 5.2.கட்டுரையின் இயல்பு

கட்டுரை எழுதும் பொழுது பொருள் ஒழுங்கு. சொல் தெரிவு, சிறு வாக்கிய அமைப்பு பத்தி அமைப்பு, குறியீடுகள் உபயோகம் என்பவற்றில் கவனம் தேவை என்று க.சொக்கலிங்கம் "கட்டுரை கோவை" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். மேலும் தெளிவு, ஆடம்பரமின்றி ஒன்றை நேராகக் கூறல், சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளை குறித்தல், குறிப்பாற் பொருளை சுட்டுதல்" போன்ற பண்புகள் பேணப்பட வேண்டும்.

### 5.2.1 கட்டுரை வகைகள்

கட்டுரைகளை நடை மற்றும் நோக்கம் ரீதியாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்,

- தர்க்கக் கட்டுரை
- செய்திக் கட்டுரை
- விவரணக் கட்டுரை
- பகுத்தாய்வுக் கட்டுரை
- செயல்முறை விளக்கக் கட்டுரை
- ஒத்தன்மை விளக்கக் கட்டுரை
- எடுத்துரைத்தல் கட்டுரை
- வகைப்படுத்தல் கட்டுரை
- ஒப்பீட்டு கட்டுரை
- புனைவுக் கட்டுரை

பொதுவாக தர்க்க கட்டுரைகளே தமிழில் முக்கியம் பெறுகின்றன. தர்க்க கட்டுரைகள் தனது வாதங்களை முன் வைத்து, வாதங்களால் நிலைநிறுத்தப்படும் முடிவுகளுக்கு இட்டு செல்லும் ஒரு செய்திக் கட்டுரை செய்தி பற்றிய ஐந்து முக்கிய கேள்விகளான என்ன? எங்கே? எப்பொழுது? ஏன்? யார்? என்பவற்றிற்கு உடனடியாக பதில் தர முயலும் விஞ்ஞான வி'யங்களை பகிர முனையும் ஆய்வு கட்டுரைகள் விபரண, தர்க்க, செயல்முறை நடைகளை தகுந்தவாறு பயன்படுத்தி விஷயங்களை முன்நிறுத்துகின்றன.

### 5.2.2 கட்டுரையின் நடை

கா. சிவந்தம்பி ”நடை” பின்வரும் கூறுகளால் நிர்ணயிக்கப்படுகின்றது என்கிறார்.

- சொல் தெரிவு
- சொல்லும் திறன், உத்தி
- அணிகள் (சொல் அணிகள்)
- வாக்கியங்கள் அளவு.
- அமைவு முறைமை

மேலும், “நடை என்பது கவிதையோ, உரையோ கையாளப்படும் முறைமை பற்றியதாகும்” அது”எழுதுபவர்களின் ஆளுமையோடு தொடர்புடையது” என்கிறார்.

### 5.2.3 பேச்சு தமிழ் நடையும் எதிர் கட்டுரைத் தமிழ் நடைகளும

பேச்சு தமிழுக்கும் உரைநடை (கட்டுரை) தமிழுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சு தமிழ் பாமரர் தன்மை உடையதாகவும், கட்டுரை தமிழ் பண்டித தன்மை உடையதாகவும், கருதுவோரும் உளர். கட்டுரைக்கு என்றும் கருத்துச் செறிவு, தெளிவு முக்கியம். வாசகரின் நேரத்தை வினாக்காமல் இருக்க சீரமைக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு கட்டுரைக்கு அவசியம். ஆகையால், பேச்சு தமிழ் போல எழுத வேண்டும் என்ற கருத்து நடைமுறையில் இல்லை. இருப்பினும், பேச்சு தமிழில் உள்ள எளிய சொற்களை உபயோகப்படுத்தல் மூலம் அதன் எளிமையையும், பேச்சுத் தமிழில் உள்ள வேகத்தையும் கட்டுரைப் பெற்றுக் கொள்ளும்.

### 5.2.4 நாட்டுப்புற தமிழ்நடையும் எதிர் கட்டுரைத் தமிழ் நடைகளும்

தமிழ் ஒலி சார்ந்த மொழி. அதுவே அதற்குப் பலமும், பலவீனமும். ஒவ்வொரு பிரதேசத் தமிழர்களின் உச்சரிப்பு, நடை சற்று வேறுபடும். ஆகையால், பிரதேச மொழி நடையில் எழுதும் பொழுது, ஒரு சொல் பல வடிவங்களைப் பெறுகின்றது. அது பரிட்சியம் அற்ற வாசகர்களைக் குழப்பி விடுகின்றது. இலக்கிய நயத்திற்காகக் கதைகளிலோ, கவிதைகளிலோ பிரதேச தமிழ் நடையைப் பயன்படுத்தினாலும், தகவல்களைத் தரும் கட்டுரைகளில் சீரிய கட்டுரைத் தமிழ் நடையைப் பயன்படுத்துவதே பன்முகத் தமிழரும் புரிந்து கொள்ள உதவும்.

## 5.3 சுருக்கமான எளிமையான மொழியின் பயன்பாடு மொழி

மொழியென்பது (மிகவும் சரியாகச் சொல்வதென்றால் மனித மொழியென்பது) மனிதர்கள் பிறர் புரிந்து கொள்ள முடிகிற வகையில் வாய் வார்த்தைகளையும் குரலோசைகளையும் அமைத்துக்கொள்ள ஏதுவாக்கும் இலக்கணம், விதிகள், மற்றும் தர நிரணயம் ஆகியவற்றின் தொகுப்பே என்கிறார். கொலம்பியா பல்கலையில் ஆங்கிலம் மற்றும் ஒப்பீடு இலக்கிய இணைப் பேராசிரியராகப் பணியாற்றும் மொழியியலாளர் ஜான் மக்வோர்டெர இதையே கய் போய்ச்செர் என்னும் மொழியியலாளர் மொழிகளின் உதயம் என்கிறார்.

மனித குலத்தின் மாபெரும் கண்டுபிடிப்பை அறியும் பரிணாம வழிப் பயணம்" என்னும் தன் ஆராய்ச்சிப் படைப்பில் நம்மை மனிதராய் ஆக்குவது மொழியே" என்று வேறுவிதமாக குறிப்பிடுகிறார். எனவே மொழியென்றால் என்னவென்று அறிந்து கொள்ள மொழியின் பூர்விகங்கள் பல நூற்றாண்டுகளின் ஊடாக அது கண்ட பரிணாம வளர்ச்சி மற்றும் மனிதகுல இருப்பிலும், உருவாக்கத்திலும் அதன் முக்கிய பங்கு ஆகியவற்றைக் கொஞ்சமாவது அறிய வேண்டியது அவசியம்.

### 5.3.1 மொழியின் மாபெரும் கண்டுபிடிப்பு

மொழி மனித குலத்தின் மாபெரும் கண்டுபிடிப்பு எனக் கூறுகையில் அது நிஜமாக முறையாகக் கண்டுபிடிக்கப் படவில்லை என்ற கருத்தையும் ஏற்க வேண்டியுள்ளது. உண்மையில், இன்றைய பெரும் புகழ் பெற்ற மொழியியலாளர்களான டோய்ச்செர் மற்றும் மகவோர்ட்டர் இருவருமே மொழியின் உதயம் பற்றிய விவரங்கள் அனைத்தும் விவிலிய காலத்தில் இருந்தது போலவே இன்று வரை தொடர்ந்து மூடுமந்திரமாக இருந்து வருவதாகக் கூறி வருகிறார்கள். உண்மையில் இது குறித்து விவிலியத்தின் மிகவும் முக்கியமான துயரக் கதையான பேபெல்லின் கோபுரம் சொல்வதை விடத் தகுதி மேம்பட்ட விளக்கம் தந்தவர் எவருமில்லை என்கிறார் டோய்ச்செர். அக்கால பூமி வாசிகள் கட்டடக் கலையில் திறமை பெற்று விட்டதையும், பண்டைய மெசபடோமியாவில் வானளாவிய வழிபாட்டுக் கோபுரம் உண்மையில் அது ஒரு பெருநகர கட்டுமானம் அமைக்க அவர்கள் முடிவு செய்து விட்டதையும் அறிந்த கடவுள், ஒரே மொழி பேசிவந்த அவர்களிடையே கருத்துப் பரிமாற்றத்தை முற்றிலும் தடுக்கவேனடி ஒரே நொடியில் எண்ணற்ற மொழிகளை மனித இனத்தின் மீது திணித்தல் இந்தக் கதை நம்பமுடியாததாக இருந்தாலும் அதன் உட்கருத்தை ஏற்கலாம் என்கிறார்.

### 5.3.2 டோய்ச்செர் கருத்து

மனித மொழி திறமையுடன் வடிவமைக்கப் பட்டிருப்பது கண்கூடு எனவே அதை உயரிய தொழில் நிறமை வாய்ந்தவனின் கச்சிதமான கைவண்ணமே உருவாக்கி இருக்க முடியும் என்பதைத் தவிர வேறு கற்பனைக்கு இடமிலலை. சுமார் மூன்று டஜன் அற்ப ஒலித்துணுக்களை மட்டுமே பயன்படுத்தி இக்கருவி(மொழி) எண்ணற்ற வார்த்தைகளை உருவாக்கும் அற்புதம் வேறு எப்படி சாத்தியமாகி இருக்கும்?

**ை, க, டி, எ, வ, ன, ம, ப, ளா, ந, ய** போன்ற எழுத்துக்களை உச்சரிக்கும் போது தெரியும் வாயின் வெளித்தோற்றங்கள் தனித்தன்மை கொண்டவையல்ல சீரற்ற எச்சில் துப்பலின் போதும் உணர்ச்சி மிகுதியில் எச்சில் தெரிக்க பேசு கையிலும் அர்த்தமற்றவிதமாக குரலோசை எழுப்பும் போதும் ஒலிப்பவை அரத்தமற்றவை அவை சுயமாக எதையும் வெளிப்படுத்துவதுமில்லை விளக்குவதமில்லை.

இலக்கணம் சொல்லும் வழியில் இவற்றைப் பிரத்யேகமான முறையில் அடுக்கி மொழி-இயந்திரத்தின் பற்சக்கரங்களில் செலுத்தினால் சட்டென்று மொழி நமக்குக் கிடைத்து விடுகிறது. அது மக்கள் குழுக்களில் உள்ளோர் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய, கருத்துத் தொடர்புக்குப் பயன்பட்டு அதன் மூலம் அவர்களை வாழும் தகுதியுள்ள சமூகமாக செயல்பட வைக்கக் கூடிய மொழி. மனித குல இருப்பிலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்கேற்கும் மொழி.

### 5.3.3 சோம்ஸ்கியின் கருத்து

மொழியின் புதிரான ஜனனம் பற்றிய அறிவு, மொழியின் அர்த்தம் விளங்கிக் கொள்ள உதவாது. மொழியின் அர்த்தம் விளங்கிக் கொள்ள மேலைச் சமூகத்தில் பெருங்கீர்த்தி பெற்றவராகவும், அதே அளவில் சர்ச்சைக்கு இலக்கானவராக இருந்துவரும் மொழியியலாளர் நோம் சாம்ஸ்கியை அணுகவேண்டும். மொழியியலின் உட்பிரிவான மொழியறிதல் முழுவதற்கும் தன் பெயர் சூட்டப்படும் அளவுக்கு நாடறிந்த அறிஞர் அவர். மொழியியலின் அஸ்திவாரத்தை அதிர வைத்த தொடரியல் அமைப்புகள் (1957) மற்றும் தொடரியல் கோட்பாட்டுக் கூறுகள் (1965) ஆகிய படைப்புகள் மூலம் அவர் அறிமுகப் படுத்தி ஜனரஞ்சகமாக்கிய மொழியின் அடிப்படைக் கொள்கைகள், மொழி கற்கும் வழிகள் குறித்த கருத்தாக்கங்கள் அனைத்தும் சாம்ஸ்கியின் மொழியியல் என்ற பெயரில் மொழியியலின் பரந்த உட்பிரிவாகி இருக்கிறது.

அதனினும் மேலாக, சாம்ஸ்கி 1976-ல் வெளியிட்ட "மொழியின் இயல்பு" என்னும் மிக உசிதமான ஆராய்ச்சிக் கட்டுரையே மொழி குறித்த விவாதங்களுக்கு மிகவும் பயனுக்குள்ளதாக அமைந்தது. இதில் சாம்ஸ்கி "மொழியின் அர்த்தம்" என்ற கருத்தை நேரடியாகக் கையாண்ட விதம் பின்னாளில் வரப்போகும் டொய்ச்செர் மற்றும் மக்வோர்ட்டர் துணிவுரைகளை முன்னுரைப்பதாக இருந்தது.

"பித்திய அணுகுமுறையில், மரபணுவால் உறுதி செய்யப்படும் மொழி நிபுணத்துவமே மொழியின் இயல்பைத் தெளிவாகக் காட்டுகிறது, இது மொழியின் அறிவுப்பரப்பை கிடைப்பிலுள்ள பட்டறிவுடன் சம்பந்தப்படுத்தும் செயல்பாடாகக் கருதப்படுகிறது. மொழியின் இலக்கணம் அறிவுப் பரப்பை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவோ அல்லது குறைந்த பட்சம் அம்மொழியின் அடிப்படை அம்சம் என்றோ கருதலாம். மொழி நிபுணத்துவம் என்பதை ஒரு நிலையான செயல்பாடாக, மனித இனத்தின் சிறப்புப் பண்பாக, மனித மனத்தின் ஒரு அம்சமாக, பட்டறிவின் சாராம்சத்தை இலக்கணமாகப் பதிவிடும் செயல்பாடாகக் கருத வேண்டும். இணைந்தியங்கும் மாற்றம் என்னும் வழிமுறையால் இத்தகைய செயல்பாட்டை அதன் இயல்பான போக்கில் பயிழலாம்."

(மேற்கண்ட மேற்கோளில் மொழி பெயர்க்கப் பட்டிருப்பனை சாம்ஸ்கியின் "மொழியின் இயல்பு" கட்டுரையின் முதல் பாராவில் முதல் நான்கு வாக்கியங்கள் தவிர மற்ற வாக்கியங்கள்)

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், மொழி சாதனமாகவும் அதே சமயம் பொறியியக்கமாகவும் செயல்படுகிறது அதுவே உலகுடனும் பிறருடனும், நமக்குள்ளும் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது. அதாவது மொழியே நம்மை மனிதராக்குகிறது.

## 5.3.5 மனிதநேயத்தின் வெளிப்பாடு

மனித இனத்தின் அனுபவங்களின் ஒட்டு மொந்தத் தொகுப்பே மொழி என்றார் புகழ் பெற்ற அமெரிக்கக் கவிஞரும் இருத்தலியலாளருமான வால்ட் விட்மன். அவர் உதிர்த்த கருத்துக்கள்:

மொழி என்பது கற்றவரோ அல்லது அகரமுதலி தயாரிப்பாளரோ கட்டும் கருத்தியல் கட்டுமானமல்ல. மனித குலத்தின் நீண்ட தலைமுறைகளின் வேலைகள், தேவைகள், பந்தங்கள், குதூகலங்கள். பாச தேசங்கள், ரசனைகள் அனைத்திலிருந்தும் உதித்தது அது. மண்ணில் ஆழப் பதிந்த அகண்ட அடித்தளம் கொண்டது.

எனவே மண்ணில் தோன்றிய காலம் முதல் மனித குலம் பெற்றுள்ள அனுபவங்களின் ஒட்டு மொத்தமே மொழி. மொழி இல்லையேல் மனிதர்களால் தம் உணர்வுகளை, எண்ணங்களை, மனவெழுச்சிகளை, விருப்பங்களை, நம்பிக்கைகளை வெளிப்படுத்த முடியாமல் போயிருக்கும். மொழியின்றி மனித சமூகமும், அதன் இறை நம்பிக்கையும்கூடப் பிழைத்திருக்க வாய்ப்பில்லை.

பேபெல் கோபுரம் எழுவதால் கடவுளுக்கு ஏற்பட்ட கடுங்கோபம் உலகம் முழுவதும் மிதமிஞ்சிய மொழிகள் தோன்றக் காரணமானது என்றாலும் அவ்வாறு உதித்த மொழிகள் அனைத்தும் புரிந்து கொள்ளக் கூடியனை பயிலவும், எழுதவும் மொழி மாற்றம் செய்யவும் கருந்துத் தொடர்பு கொள்ளவும் முடிகிற நிஜ மொழிகள் அவை.

## 5.3.5.கணினி மொழி

கணினிகள் தமக்கிடையேயும் மனிதர்களுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய இந்த காலகட்டத்தில் மொழியின் அர்த்தம் மாறக் கூடும். கணினிகள் நிரல்மொழியில் பேசுகின்றன. மனித மொழியைப் போலவே கணினி மொழியும் இலக்கணம், தொடரியல், பிற விதிகள் கொண்ட ஒரு அமைப்பு. அது மனிதர்கள் கணினி, கைக்கணினி, திறன் பேசிகளுடன் தொடர்பு கொள்ளவும் ஒரு கணினி மற்றொரு கணினியுடன் தொடர்பு கொள்ளவும் அனுமதிக்கிறது.

மனிதர் இடையீடு இல்லாமல் கணினிகள் தாமாகத் தமக்கிடையே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடிகிற அளவுக்கு செயற்கை நுண்ணறிவு வளர்ந்து வரும் இன்றைய நிலையில், மொழியின் வரையறுப்பும் விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலை வரக்கூடும். அப்போதும் மனிதனை ஆக்குவது மொழிதான். ஆனால் அவ்வாறு விஸ்தரிக்கப்பட்ட வரையறுப்பு, எந்திரங்கள் தம் சொந்த மொழியில் தமக்குள்ளே தொடர்பு வைக்க, தேவைகளையும் விருப்பங்களையும் தெரிவிக்க, ஆணையிட, உருவாக்க, உற்பத்தி செய்ய வழி வகுக்கும். ஆதியில் மனிதன்

தனக்காக உருவாக்கிக் கொண்ட மொழி, தன் மனித இணைப்புகளைத் துறந்த, ஒரு புது தொடர்பு அமைப்பாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளவையே ஆகும்.

**தொகுப்புரை**

மொழித்திறன் பயன்பாடுகளை அறிந்துகொள்வதன் மூலம் எழுத்துப்பிழையில்லாமல் கட்டுரை எழுதுவதையும் கட்டுரையின் அவசியத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்

பேச்சுக்கலை திறனை அறிந்துகொள்வதன் மூலம் தலைமைப் பண்பை வளர்த்துக்கொள்ள முடியும்

மொழியின் அடிப்படைத் திறன்களை அறிந்துகொள்வதன் மூலம் பிழையின்றிப் பேசவும் எழுதவும் முடியும்

# பயிற்சி வினாக்கள்

## ஒரு மதிப்பெண் வினாக்கள்:

1. உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவம் யாது ?
   அ) கட்டுரை ஆ) புதினம் இ) சிறுகதை ஈ) செய்யுள்

2. உரைநடை வளர்ச்சிப் பெற்ற ஆண்டு ?
   அ)19 ஆம் ஆண்டு ஆ) 20ஆம் ஆண்டு இ) 21 ஆம் ஆண்டு ஈ) 22ஆம் ஆண்டு

3. கட்டுரை வகை எத்தனை வகைப்படும்?
   அ) 8 ஆ) 9 இ) 10 ஈ) 11

4. சாமஸ்கி என்பவர் மொழியின் இயல்பை வெளிப்படுத்திய ஆண்டு?
   அ) 1676 ஆ) 1776 இ) 1876 ஈ) 1976

5. கணினிகள் எந்த மொழியில் பேசுகின்றன?
   அ) அலை மொழி ஆ) வரை மொழி இ) நிரல் மொழி ஈ) அனைத்தும்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. கட்டுரையின் இயல்பு பற்றி விளக்குக?
2. மொழிப் பயன்பாடு பற்றி விளக்குக?

## பத்து மதிப்பெண் வினாக்கள்:

1. கட்டுரையின் வகைகள் பற்றி கட்டுரை வடிவில் விடை தருக?
2. தலையங்கம் பற்றியும் மதிப்புரைகள் குறித்தும் விவரி.

## முடிவுரை

தமிழ்மொழியைப் பேசுவோரும் கற்போரும் எழுதுவோரும் பிழையின்றித் தம் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும். ஏதேனும் ஓர் இடத்தில் பிழை ஏற்படின் பேச்சும் எழுத்தும் சீர் குழையும். அவ்வகையில் தமிழ் மொழியைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமெனில் சில விதிமுறைகளிப் பின்பற்ற வேண்டியுள்ளது. வல்லினம் மிகும் இடங்களையும் வல்லினம் மிகா இடங்களையும் கண்டறிந்து அப்பிழைகளைக் களைய வேண்டும். எழுத்து , சொல் , தொடர்க்கு ஏற்ப உரிய இடங்களில் நிறுத்தற் குறிகளை பதிவு செய்ய வேண்டும் அவற்றில் புள்ளிகள் குறிகள், அடைப்புகள் , மேற்கோள்கள், இணைப்பு, சாய்வு போன்ற கோடுகளையும் அந்தந்த இடங்களில் பயன்படுத்த அவேண்டும் . நடைமுறை சார் மொழித் திறன்களைக் கற்றறிய வேண்டும். எழுத்துத்திறனில் முறைகளைப் பின்பற்றி தம் படைப்புகளை வெளியிட வேண்டும். உரையாடல் திறன்களை மேம்படுத்த வேண்டும். கட்டுரைகளை சுருக்கமாக எளிமையாக மொழிப்பயன்பாட்டு முறைகளை பின்பற்றி உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் பயன்முறைத் தமிழைப் பிழையின்றி எழுதவியலும்.

**பார்வை நூல்கள்**


1. தமிழ் நடைக் கையேடு, 2001, பா. ரா. சுப்பிரமணியன் வ. ஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்) மொழி வெளியீடு, சென்னை
2. தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம், 2003. பொற்கோ, பூம்பொழில் வெளியீடு, சென்னை
3. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? 2000, அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை
4.. மொழிப்பயன்பாடு, 2004, கா. பட்டபிராமன், நியூ செஞ்சுரி புக்அவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை
5. தவறின்றித் தமிழில் எழுத? 2004 மருதூர் அரங்கராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை


**இணைய இணைப்புகள்**

1.Tamil Heritage Foundation – www. Tamilheritage.org http://www.tamilheritage.org

2.ProjrctMadurai–www.projectmadurai.org

3.Tamil E – Books Downlaods – tamilebooksdownloads.blogspot

**4.**Tamil Books on line – books.tamil cube.com